www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**ரத்துவத்தை ரகம்!**

பட்டா லறிந்திடுவன் ச்ண்டாளன் பைங்குழந்தை
சுட்டா லறிந்துவிடும் சுடுநெருப்பை! – முட்டாள்தான்
செத்திடினும் ஒப்பான்! செய்வதெல்லாம் சரியென்பான்
ரத்துவத்தை அந்த ரகம்!

–ஈழமோகம்

இதழ் - 146 மே.14-மே.27, 1998 விலை ரூபா.10.00



"இதைத் தவிர எமக்கு வேறு வழி தெரியவில்லை!"

-ரொகான் தளுவத்த

"அதைப்பற்றி எனக்கு எதுவும் சொல்ல முடியாது!"

-ஒலாரா ஒட்டுணு






# "ஜயசிக்குறு"வுக்கு ஓராண்டு பூர்த்தி !

கடந்த வருடம் மே மாதம் 13ம் திகதி ஆரம்பமான "ஜெயசிக்குறு" என்று பெயரிடப்பட்ட வெற்றி நிச்சயம் ராணுவ நடவடிக்கைக்கு ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. இந்த ஓராண்டு காலத்துள் கிளிநொச்சியை வவுனியாவுடன் இணைக்கும் இந்த நடவடிக்கையின் பலனாக 1200 ராணுவத்தினரும், 1500 புலிகளும் கொல்லப்பட்டுள்ளனர். 2500 ராணுவத்தினரும், 2760 புலிகளும் காயமடைந்துள்ளனர். 40க்கும் மேற்பட்ட ராணுவத்தினர் யுத்தத்தின் போது காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கின்றன அரசாங்கத் தகவல்கள். ஆயினும் உண்மைத் தகவல்கள் இதை விட அதிகம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கடந்த ஆண்டு ஜுன் மாதத்தில் மட்டும் அரச படைகளின் ஆயுதக் கிடங்குகள் புலிகளால் இரண்டு தடவைகள் கைப்பற்றப்பட்டிருக்கின் றன. ஆட்டிலெறி ஏவுக ணைகள், யுத்த டாங்கிகள் உட்பட பல கனரக ஆயுதங் கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 30க்கும் மேற்பட்ட பொதுமக்களும் இவ் யுத்தத்தின் போது கொல்லப்பட்டுள்ளனர்.

ஜயசிக்குறு நடவடிக்கை பலத்த ஆரவாரத்துடனும், நம்பிக்கையுடனும் தொடங்கப்பட்ட போதும், ஆண்டு பூர்த்தியடையும் போது எந்த வித ஆரவாரமுமற்று அடங்கிப் போயிருக் கிறது. அமெரிக்க ஆயுதங்களும், பாடசாலை ஆட்சேர்ப்பும் இப்போது ஜயசிக்குறுவை நிஜமாக்க அவசியப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரிய உயிர்ச் சேதத்தையும் குடிமக் களை அகதிகளாக்குவதையும், சொத்தளிப்பையுத் தவிர அது சாதித்தது என்று சொல்ல எதுவுமில்லை என்று சொல்கிறார்கள் அரசியல் அவதானிகள். முட்டாள்தனமான ராணுவத் திட்டங்களால் நாட்டு இளைஞர்களைக் கொன்று குவிக்கிறார் அநுருத்த என்று குற்றம் சாட்டுகிறார் ரணில் விக்கி ரமசிங்க. யுத்த வேகத்தில் காணாமல் போன சமாதான முயற்சிகள் இரண்டாவது ஆண்டிலாவது தொடராதா என்று சமாதான விரும்பிகளுடன் சேர்ந்து கேட்கிறது சரிநிகர்.

அரசாங்கத்தின் பதிலென்ன ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வவுனியா : புளொட் உறுப்பினர் கொலை!

வவுனியா உமா மகேஸ்வரன வீதியில் செவ்வாய்க்கிழமை பகல் 12.45 மணியளவில் இடம் பெற்ற கிளமோர் கண்ணி வெடித் தாக்குதலில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். 6 உறுப்பினர்கள் காயமடைந்தார்கள்.

வாகனம் ஒன்றில் வந்த புளொட் இயக்கத்தினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது புலிகளினால் நடத்தப்பட்ட தாக்குதல் என்று புளொட் வட்டாரங்களும், பொலிசாரும் தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து ஹொரவப்பத்தானை வீதியில் வந்து இறம்பைக்குளம் உமாமகேஸ்வரன் வீதியால் கோவில்குளம் பக்கத்தை நோக்கிச் சென்ற வாகனத்தின் மீது நன்கு திட்டமிட்ட முறையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ நேரம் அவ்விடத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த இரு மாணவிகளும் கொல்லப்பட்டுள்ளார்கள். வேறு இரு பெண்கள் காயமடைந்துள்ளார்கள். இரண்டு மாடுகளும்அவ்விடத்தில் உயிரிழந்துள்ளன.

காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

புளொட் இயக்கத்தின் வவுனியா மாவட்ட இராணுவ பொறுப்பாளர் சின்னதாஸ் எனப்படுகின்ற செல்லத்துரை சாந்தகுமார், விந்தன், ஜீலியன் லோரன்ஸ், நிர்மலன், மயூரன் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

பாபு, லால், ராசா, மோசஸ், நசார், கார்த்திக் ஆகியோர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் எல்லப்பர் மருதங்குளத்தைச் சேர்ந்த சிறிகோபிகா வடமலை (17), நிர்மலா வீரசிங்கம் சண்முகேஸ்வரன் (18) ஆகிய இரண்டு மாணவிகளே கொல்லப்பட்டவர்கள் ஆவர். சமளங்குளத்தைச் சேர்ந்த ஜெயந்தி, (37), பாமினி துரைராஜா (17) ஆகிய இரண்டு பெண்கள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புளொட் இயக்கத்தின் இராணுவப் பொறுப்பாளர் மாணிக்கதாசன், இக்கட்சியின் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சண்முகநாதன், வவனியா நகரசபைத் தலைவர் ரீ.லிங்கநாதன் ஆகியோர் மன்னாருக்குச் சென்று திரும்பி வந்த போது, கண்ணி வெடி தாக்குதலுக்கு உள்ளான வாகனம் மட்டுமே உமாமகேஸ்வரன் வீதியில் சென்று இத்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. ஏனைய வாகனங்கள் வேறு வழியாகச் சென்றதால் இத்தாக்குதலில் இருந்து தப்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்திய அமைதிப்படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த போது, இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்திற்கு முன்னால் இடம் பெற்ற திடீர் தாக்குதல் ஒன்றில் 5க்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்குப் பின்னர், இதுவே, இப்பகுதியில் இடம் பெற்ற முதலாவது பெரிய தாக்குதலும், முதலாவது கிளமோர் கண்ணி வெடித் தாக்குதலுமாகும்.

## குருவுக்குக் குற்றமில்லை!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் காலத்துக்குக் காலம் உதிர்த்து வரும் பொன்மொழிகள் பிரசித்தமானவை. 'தமிழர்கள் அனைவரும் புலிகள்' என்று அவர் உதிர்த்த பொன்மொழியை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

இப்போது அவர் ஒரு புதிய பொன் மொழியை உதிர்த்திருக்கிறார்.

அதுதான், ''வேலைநிறுத்தம் செய்பவர்கள் தேசத் துரோகிகள்'' என்பது.

தபால் சேவை ஊழியர்கள் நடாத்திய வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அம்மணி இவ்வாறு தெரிவித்திருந்தார்.

'அமைதிப் போராட்டம் நடாத்த வேண்டிய வேளையில், வேலை நிறுத்தம் செய்யக் கூடாது. அப்படிச் செய்பவர்களை தேசத் துரோகிகள் என்று அழைக்காமல் எப்படி அழைப்பது'' என்பது அவர் குறிப்பிட்டதாகக் கூறப்படும் வார்த்தைகள்.

இதைப்படித்த போது எழுகின்ற கேள்விகள் இரண்டு.

வேலைநிறுத்தம் அமைதிப் போராட்டம் அல்லவா? அப்படியானால், அது என்ன விதமான போராட்டம்? அமைதிப் போராட்டம் என்றால், வேலைக்குப் போய்க் கொண்டே தமது கோரிக்கைகட்காக வருடக் கணக்காக கடிதம் எழுதிக்கொண்டிருப்பது மட்டும் தானா?

இது ஒரு கேள்வி.

இரண்டாவது கேள்வி, தொழிற்சங்க உரிமைகட்கான போராட்டம் தேசத்துரோகப் ' போராட்டம் என்றால், நாட்டிலே தேசத்துரோக மல்லாத போராட்டம் என்று எதைத்தான் சொல்வது?

ஜனாதிபதியின் புதிய வரைவிலக் கணப்படி, இந்த நாட்டில், அவரையும் அவரைச் சார்ந்து நிற்கும் ஒரு சில அமைச்சர்களையும் தவிர மற்றெல்லோரும் தேசத்துரோகிகள் தான்.

அதிலும் குறிப்பாக, தபால் இலாகாவின் போராட்டத்தை நேரடியாக ஆதரித்த வாசுதேவ குழுவினர் பச்சைத் துரோகிகள்!

அதுசரி, அமைதியாக அரசியல் தீர்வு காணவேண்டிய பிரச்சினைக்கு ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டு யுத்தம் செய்தல் மட்டும் தேசத்துரோகம் இல்லையா?

ஒரு வேளை, 'குருகு...வினால் குற்றமில்லை' என்பார்களே, அதுதான் அம்மையாரின் தத்துவமோ?

## பொலிஸாரின் அதிகாரம்!

அரசாங்கத்தின் மேதினக்கொண்டாட்ட நடவடிக்கைகளின் போது நடந்த நகைச்சுவை நிகழ்ச்சிகள் பல.

வழமைக்கு மாறாக, நகரமண்டப பொதுக்கூட்ட மேடைக்கு வேளைக்கே வந்திருந்தார் ஜனாதிபதி. எதிர்பாராத விதத்தில் அவர் முன் கூட்டியே வந்ததால், மேடைக்கு அவர்வந்தபோது எந்தவொரு அமைச்சரும் கூட பிரசன்னமாகி இருக்கவில்லை.

போதாததற்கு, மேடையை நோக்கி வந்த ஊர்வலத்திலிருந்தவர்கள் கூட கூட்டம்நடந்த இடத்திலிருந்து நகர்ந்து சென்று விட்டனர். பொலிசாரின் கெடுபிடியான சோதனைகள் அளவுக்கதிகமாகிவிட்டன. சில ஆளுங்கட்சித் தொண்டர்கள் பொலிசாருடன் மோதும் நிலைக்கே போய்விட்டனர்.

சோதனைகளைத் தளர்த்துமாறு ஜனாதிபதியே கட்டளையிட வேண்டிய நிலைமை வந்து விட்டதென்றால் பாருங்கள். அவ்வளவு கெடுபிடி.

இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அரசாங்கத்தின் சமுர்த்தி ஊழியர் சங்கத்திற்கும் கூட ஊர்வல அனுமதி மறுக்கப்பட்டது தான்!

முதலில் இந்த சமுர்த்தி ஊழியர் சங்கம் கொட்டா பூங்காவிலிருந்து தனது 30,000 உறுப்பினர்களுடன் தனியாக, கூட்டம் நடக்கும் இடமான விகாரமாதேவி திறந்தவெளிக்கு ஊர்வலமாக வருவதாக இருந்தது. இதற்கான அனுமதியும் பொலிசில் பெறப்பட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

பிறகு, என்ன நடந்ததோ தெரியவில்லை. ஸ்ரீ.ல.சு.க. அமைப்பாளர்கள் மறுப்புத் தெரிவித்ததாகக் கேள்வி, இந்த ஊர்வலத்திற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

இது மறுக்கப்பட்டவிதம் கூட வேடிக்கையானது தான். சமுர்த்தி ஊழியர் சங்கத் தலைவர் ஒருவரது வீட்டினை திடீரென முற்றுகையிட்ட பொலிசார், முதலில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எடுப்பதற்காக சோதனை நடாத்தியுள்ளனர். அது கிடைக்காமல் போகவே, ஊர்வலத்தை நடாத்தக் கூடாது என்று அறிவித்து விட்டுச் சென்றுள்ளனர்.

இறுதியில் ஊர்வலத்தை ரத்துச் செய்தது ஊழியர் சங்கம். ஆனால் இந்த விஷயம் தெரியாமல் வெளி மாகாணங்களிலிருந்து வந்த பல உறுப்பினர்கள் கொட்டா பூங்காவுக்கு வந்து சேர்ந்தனர். அங்கு வந்து சேர்ந்த ஊழியர்கள், ஸ்ரீ.ல.சு.க. ஊர்வலம் தொடங்க இருந்த கம்பல் பூங்காவை நோக்கிச் செல்லுமாறு பணிக்கப்பட்டனர். பணித்தது சமுர்த்தி ஊழியர் சங்கமோ பொ.ஐ.முவோ அல்ல, பொலிஸ்!

ஆனால், இதை மறுத்து விட்டார்கள் சமுர்த்தி ஊழியர்கள். பிறகு பொலிஸ் பாதுகாப்புடன் திருப்பி அனுப்பப்பட்டனர்.!

அரசாங்கக் கட்சியான ஸ்ரீ.ல.சு.கவின் மேதின ஊர்வலத்தில் பொலிசுக்கு இருந்த அதிகாரம் கட்சி ஊழியர்கட்குக் கூட இருக்கவில்லை என்கிறார் பார்வையாளர் ஒருவர்!

## குருவையும் விஞ்சியவர்!

யார் எதைச் சொல்வது என்ற விவஸ்தையே இல்லாத ஒரு நாடு இந்நாடு.

சாத்தான் வேதம் ஓதும், கொலைகாரனும் அஹிம்சை பற்றிப் பேசுவான், ரணில் விக்கிரமசிங்க சந்திரிகாவுக்கு ஆட்சி நடத்த என்ன லாயக்கு என்று கேட்பார்.

தலதா மாளிகையைக் கூட காப்பாற்ற முடியாதவர்களுக்கு நாட்டைக் காக்க என்ன தகுதி என்றார் அவர்.

சரி, ஆட்சிக்கு வரத் துடிக்கும் அவர், தமக்குத் தான் அந்தத் தகுதி இருக்கிறது என்று சொல்ல முயற்சிக்கிறார். விட்டு விடுவோம் என்று பார்த்தால், அவர் நம்மை விடுவதாக இல்லை.

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் 13வது திருத்தச் சட்டத்தில் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட முழு அதிகாரங்களுடன் அதை நடைமுறைப்படுத்த அனுமதிக்க அரசாங்கம் முன்வருமானால், அரசுடன் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வர முடியும் என்றொரு போடு போட்டிருக்கிறார் அவர்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். 1987இல் இலங்கை –இந்திய ஒப்பந்தத்துடன் கொண்டு வரப்பட்ட இந்தப் 13வது திருத்தச் சட்டம், மாகாண சபைகளின் அதிகாரம் பற்றிப் பேசியது. அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த ஐ.தே.க.வில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் முக்கிய அமைச்சராக இருந்தார்.

அந்தச் சட்டத்தில் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் பலவற்றை அதைக் கொண்டு வந்த ஐ.தே.க அரசாங்கமே பின்பு பறித்தெடுத்தது. வட –கிழக்கு முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் தனக்கு இருக்கக் கதிரை கூட இல்லை என்று கூறியதை யாரும் மறந்திருக்க முடியாது.

அதே மாகாண சபையை மத்திய அரசு கலைக்க முடியுமென்ற சட்டத்தையும் இதே ஐ.தே.க தான் கொண்டு வந்தது.

அப்போதெல்லாம். எமது மதிப்பிற்குரிய விக்கிரமசிங்க அவர்கள், முக்கிய அமைச்சராக இருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது தான், இன்றைய ஜனாதிபதி சந்திரிகா மாகாண சபைகளின் அதிகாரங்களுக்காகக் குரல் கொடுத்தார். (இப்போது அவரும் அதனை மறந்து விட்டார் என்பது வேறு விடயம்)

அப்போதெல்லாம் அதன் அதிகாரம் பற்றி அலட்டிக் கொள்ளாத ரணில் இப்போது அது பற்றி ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஏன் இந்தத் திடீர் அக்கறை ரணிலுக்கு?

காரணம் வேறொன்றுமில்லை.

வரப்போகும் மாகாண சபைத் தேர்தலில் ஒரு சில மாகாண சபைகளைத் தாம் கைப்பற்றிக் கொண்டால், அவற்றுக்கு இருக்கும் அதிகாரங்களை முழுமையாக பெறமுடியும் பட்சத்தில் அது அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பயன்படும் என்பது முதலாவது காரணம்.

இன்னுமொன்றையும் சொல்ல வேண்டும். அரசாங்கத்தின் அரசியல் தீர்வுக்கு மாற்றாக ஐ.தே.க. கட்டங்கட்டமாக அறிவித்து வரும் அதன் திட்டத்தின் அடுத்த பகுதியை இன்னும் ஓரிரு வாரங்களில் அது வெளியிட்டாக வேண்டும்.

அப்படி வெளியிடும் பட்சத்தில் அது குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரங்கள் குறித்த அம்சங்கள் பற்றிப் பேசியாக வேண்டும். அப்படிப் பேசினால், அது அரசாங்கத்தின் தீர்வைவிடச் சிறப்பானதாக இருந்தாலும் சரி குறைவானதாக இருந்தாலும் சரி ஐ.தே.க.வுக்கு ஆபத்து என்று கருதுகிறார் போலும் ரணில்.

அவர் இப்படிக் கருதுவதில் நியாயம் இருக்கிறது. குறைந்த அதிகாரங்களைக் கொண்ட யோசனைகளை அவர் வெளியிட்டால், அதை அரசு மட்டுமல்ல, தமிழ் முஸ்லிம் மக்களும் நிராகரித்து விடக்கூடும்.

அதிகப்படியாகக் கூறினால், அது பெரும்பான்மைச் சிங்கள மக்களிடம் வெற்றி பெறாமல் போகலாம். அதற்கும் அரசாங்கம் காரணமாக இருக்கக் கூடும்.

அதுவும் மாகாண சபைத் தேர்தல் நெருங்குகையில் இப்படியொரு அறிவிப்பை விடுவது அவ்வளவு புத்திசாலித்தனமானது அல்ல.

ரணிலின் ஐ.தே.க. மூளை தீவிரமாக வேலை செய்தது. விளைவு ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டத்தில், ரணிலுக்கு திடீர் அக்கறை வந்ததற்கு காரணங்கள் இவை தான்.

கில்லாடி தான் ரணில். சபாஷ். உங்கள் குருநாதரையும் மிஞ்சிவிட்டீர்கள். வாம்த்துக்கள்

## வாசுவின் மௌனம்!

தபால் சேவையை அவசரகால சட்ட விதிகளின் கீழ் அத்தியாவசிய சேவையாக்கிய அரசு தொழிலாளர் பிரச்சினையை இராணுவ உதவி கொண்டு அடக்கி ஒடுக்க முற்பட்ட பின் திடீர் விழிப்பு பெற்றவராய் வாசுதேவ நாணயக்கார ஆகிவிட்டார். தொழிற்சங்கங்களின் கூட்டத்தின் போது அரசின் இந்த செயலைக் கண்டித்தும் அதற்கெதிராகப் போராடாது விடின் அது இம்முறையையே வழக்கமாக்கி விடும். ஆகவே எதிர்க்க வேண்டும் எனவும் கூறியிருக்கிறார். அட இவருக்கு எங்கிருந்து இந்த ஞானோதயம் வந்ததோ தெரியவில்லை. மின்சார ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை இவ் அரசு மூர்க்கத்தனமாய் அடக்கி ஒடுக்கியதைப் பார்த்த பின்னும் இவர் இவ்வளவு நாளும் எங்கிருந்தாராம். முற்போக்கு அரசின் முற்போக்குச் செயல் என நினைத்திருந்தார் போலும். அது சரி... தன்னை தொழிலாளர் பால் அக்கறை உள்ள, இனங்களின் பால் ஒற்றுமையுணர்வுள்ள ஒரு மனிதராகக் காட்ட முயலும் இவர் இன்னும் ஏன் அவ்வரசில் ஒட்டிக் கொண்டு இருக்கிறாராம். யாராவது பதவிச் சுகத்திற்காகத் தான் இவர் இப்படி இருக்கிறார் எனச் சொன்னால் எனக்குக் கெட்ட கோபம் வரும். அவர் மௌனமாக இருக்கிறது ஒரு பெரிய புயல் போன்ற ஒரு காரியத்திற்குத் தான். இதை அவரே கூறியிருக்கிறார். அப்படி இருக்க நீங்கள் இப்படிச் சொன்னால்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'எமக்கு வேறு வழி தெரியவில்லை'

- ராணுவத் தளபதி ரொகான்தளுவத்த



இராணுவ தளபதி லெப். ஜெனரல் தளுவத்தை அவர்கள், படையிலிருந்து தலைமறைவாகியவர்களை மீள மன்னிப்பு வழங்கி உள்ளெடுக்கும் பணிக்கு தகவல் தொடர்பாளர்களது உதவி அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் (8/5/98) தகவல் தொடர்பாளர்களைச் சந்தித்து பேசிய அவர், 'பயிற்சிபெற்ற இந்த இராணுவத்தினரை மீள இராணுவத்தில் சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். எமது இராணுவம் ஆட்பற்றாக்குறையினால் அவதிப்படுவதால், அவர்களை மன்னித்து மீள எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இவர்களை நாம் மீளப்பெறும் விதத்தில் உங்கள் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்...' என்று தெரிவித்தார். அவருடனான உரையாடலின் சில பகுதிகள் இவை:

***எந்தவகையான உதவி உங்களுக்குத் தேவைப்படுகிறது என்று கூற முடியுமா?***

இராணுவத்திலிருந்து விலகிச்சென்றவர்கள் தாமாகவே வந்து இணைந்து கொள்ளும் வகையிலான விளம்பரமே இப்போது தேவைப்படுகிறது. ஏனெனில், இது தொடர்பான தீர்மானங்களை அவர்களாகவே எடுக்க வேண்டியிருக்கிறது. நான் நினைக்கின்றேன், சரியான முறையிலான விளம்பரத்துடன், நிலைமையை ஒழுங்கான முறையில் திட்டமிட்டுச் செய்தால் நல்ல பயன் கிடைக்கும் என்று.

***நீங்கள் சொல்வது மாதிரியான ஒரு பிரச்சார முறைமை கையாளப்படவில்லை என்று கருதுகிறீர்களா?***

எமக்குக் குறைந்தளவிலான ஒரு பயன் கிடைத்தது. கணிசமானோர் வந்து சேர்ந்தார்கள். ஆனால் அது நாம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. இன்னும் கூட அதிக எண்ணிக்கையில் இராணுவத்தை விட்டு ஓடியவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் இந்த நிலைமையை 1995ன் பிற்பகுதியிலிருந்து சுட்டிக்காட்டி வந்துள்ளோம் என்பதை நீங்கள் ஞாபகப்படுத்த வேண்டும். அத்துடன் நாங்கள் பெரும் அளவிலான பிரதேசத்தைக் கைப்பற்றியிருக்கிறோம். கைப்பற்றப்பட்ட இப் பிரதேசங்கள் பாதுகாக்கப்படவேண்டும். இதற்காகத்தான் மேலதிக படையினர் தேவைப்படுகின்றனர். அத்துடன் தாக்குதல் சக்தியையும் நாம் தக்கவைக்க வேண்டியிருக்கிறது.

''நாம் இப்போது தான் - முன்னெப்போதுமில்லாத்வாறு முதல் தடவையாக இந்தவகையான தாக்குதல் பரிமாணத்தை பெற்றிருக்கிறோம்.''

''நாம் அந்த தாக்குதல் சக்தியை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஓடிப்போனவர்கள் மீண்டும் இணைந்து கொள்வார்களானால் தற்போதைக்கு போதுமாகவும், தாக்குதலை விரைவுபடுத்தி இலக்கை துரித கதியில் அடையவும் முடியுமாகவிருக்கும்.''

''நாங்கள் இராணுவத்தை விட்டு விலகிச் சென்றவர்களை மீள அழைப்பதைத்தான் முதன்மையாகச் செய்து வருகிறோம். அது தோற்றுப்போனால் புதியவர்களைத்தான் சேர்க்க வேண்டியேற்படும்.

***இராணுவத்தை விட்டு விலகிச்சென்றோர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?***

சுமார் 15,000.

***அண்மையில் வழங்கப்பட்ட பொது மன்னிப்பினால் எத்தனை பேரளவில் மீண்டும் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்?***

குறைந்தது 6,000 பேராவது வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம். பத்தாயிரம் பேர் அல்லது அனைவரும் வந்துவிடுவார்களானால் அது பெரிய ஒரு விடயமாக இருக்கும்.

***இதுவரை கிடைத்துள்ள பயன்/ பதில் என்ன?***

சரியான எண்ணிக்கையை என்னால் கூறமுடியாதுள்ளது. கடைசி சில தினங்களாக பெருமளவானோர் வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்றே பொதுவாகச் சொல்லலாம். எதற்கும் நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

***ஏன் அவர்கள் இவ்வாறு படையிலிருந்து விலகிச் செல்கிறார்கள்?***

உலகில் எங்கெல்லாம் யுத்தம் நடக்கிறதோ அங்கெல்லாம் இதே மாதிரியான நிலைமை உண்டு. இரண்டாம் உலக யுத்தக் களத்தில் ஜேர்மனிய படையிலிருந்து லட்சக் கணக்கில் இவ்வாறு விலகிச் சென்றிருக்கிறார்கள்.

***தண்டனை வழங்காமலும், ஒழுக்காற்று நடவடிக்கை இல்லாமலும் படையினர் மீண்டும் வந்து சேர்வதில் எங்கோ அடிப்படைச் சிக்கல் இருப்பதாக நீங்கள் நினைக்கவில்லையா? விசுவாசமும், தியாகமும் கொண்ட படையினரின் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு என்ன நடக்கிறது?***

உங்கள் கூற்றோடு உடன்படுகிறேன். ஆனால் எமக்கு இதைவிட வேறு வழி தெரியவில்லை.

***உங்களிடம் மாற்றுத்திட்டம் இல்லையென்று ஏன் சொல்கிறீர்கள். புதிதாக படையினரை உங்களால் சேவைக்கமர்த்த முடியாதா?***

புதிதாகப் படையினரைச் சேர்க்கும் எமது வேலைத் திட்டங்கள் கூட அவ்வளவு வெற்றியளித்ததாக இல்லை.

***அப்படியானால் ஜயசிக்குறுவை இனிமேல் முன்னெடுத்துச் செல்ல மாட்டீர்கள் என்பதா அதன் அர்த்தம்?***

இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லை. நாம் அதை நிறுத்தப் போவதுமில்லை.- ஆனால் நாம் அதை விரைந்து செயற்படுத்த வேண்டிய தேவையிருக்கிறது.

***இராணுவத்திலிருந்து விலகிய பலர் குற்றச்செயல்களில் ஈடுபட்டோராகவுமிருக்கின்றனர். அவர்களுக்கும் நீங்கள் மன்னிப்பளிக்கப் போகிறீர்களா?***

இல்லை. அவர்களுக்கில்லை.

***அவ்வாறானவர்களை நீங்கள் எவ்வாறு பார்த்து, விலக்கித் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்?***

அதற்கு எங்களிடம் ஒரு வழிமுறை இருக்கிறது.

***ஜயசிக்குறு தொடங்கியதன் பின் படையினர் விலகலில் அதிகரிப்பு இருக்கிறதா?***

இல்லை. முல்லைத்தீவுப் பின்னடைவின் பின்தான் ஆட்சேர்ப்பு வழிமுறைகளில் குறைவு தெரிகிறது.


***நீங்கள் தற்போது வழங்கியுள்ள பொது மன்னிப்பும் பயனளிக்காது போய், நீங்கள் சொல்வது போல் ஆட்சேர்ப்பு முறையும் சரியான முறையில் பயன் அளிக்கவில்லையென்றால், அடுத்த தெரிவுகள் என்னவாயிருக்கும்?***

பெரியளவிலான படையினரைத் திரட்டும் ஒரு திட்டம் எங்களிடம் உள்ளது. அது வெற்றியளிக்கும்.

***எந்தக் கட்டத்திலாவது கட்டாய ஆட்சேர்ப்புத் திட்டம் பற்றி கருத்திலெடுக்கப்படுமா?***

இல்லை. அப்படி ஒரு திட்டம் எம்மிடம் இல்லை.

நன்றி : சண்டே டைம்ஸ்



# மூதூர் :

## வானொலிச் செய்தியை இடை மறித்து...

திரிபுரன்

மூதூரின் அண்மைக்காலச் சம்பவங்கள் விடுதலைப் புலிகளின் கை நன்றாக ஓங்கியிருப்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இராணுவத் தரப்பு அடுத்தடுத்து இரண்டு ஒப்பரேஷன்களை நடத்தியும் பலனெதுவும் ஏற்படவில்லை:

விடுதலைப்புலிகளின் கொட்டத்தை அடக்கலாம் என்ற கனவுடன் ஏப்ரல் 22ல் இராணுவம் கட்டைப்பறிச்சான், கடற்கரைச்சேனை, சேனையூர் ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்தது. அதிகாலை ஐந்து மணிக்கே இக்கிராமங்கள் வளைக்கப்பட்டுவிட்டன. இச்சுற்றி வளைப்பில் கட்டைப்பறிச்சான் (ஜி.பி.எஸ்.) இராணுவ முகாமைச் சேர்ந்த சுமார் 200 இராணுவத்தினர் பங்குபற்றியதாகப் பொதுமக்களின் தகவல்கள் கூறுகின்றன.

புலிகள் வழக்கமாக அக் கிராமங்களில் தங்குவதில்லை. எனவே புலிகள் எவரும் இருக்கவில்லை. விழிப்புடனிருந்த மக்கள் பலர் கூட நாய் குரைக்கும சத்தங்களைக் கொண்டு இராணுவம் வருகிறது என ஊகித்துக் கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள். சிறு தொகை மக்களே இராணுவச் சுற்றி வளைப்புக்குள் அகப்பட்டிருந்தார்கள். இராணுவம் சுற்றிவளைத்த ஆகக்கூடிய தூர எல்லை இராணுவ முகாமிலிருந்து இரண்டு கிலோ மீற்றருக்கும் குறைவானதே என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இராணுவத்தினர் பொது மக்களுக்குத் தொந்தரவு எதுவும் செய்யவில்லை: ''நாங்கள் புலிகளைத்தேடியே வந்திருக்கிறோம் நீங்கள் பயப்பட வேண்டாம்'' என்று ஆறுதல் வார்த்தை வேறு கூறியிருக்கிறார்கள். புலிகளின் இரண்டு ஷெல்கள் இராணுவத்தை நோக்கி வந்தபோதிலும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. மாலை ஆறுமணிக்கு வெற்றிகரமாக இராணுவ நடவடிக்கை பூர்த்தியானது.

இரண்டாவது நடவடிக்கை, 'புலி வேட்டை' என்ற பெயரில் ஏப்ரல் 27ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான இராணுவத்தினர் மூதூர் கிழக்குப் பகுதியைச் சுற்றி வளைக்க ஆரம்பித்தனர். அதிகாலையிலேயே பல திக்குகளிலிருந்தும் சுற்றி வளைப்புக்கள் ஆரம்பமாயிற்று. மூதூர் பொலிசாரும் புலிவேட்டையில் பங்கு கொள்ள வேண்டியதாயிற்று.

இதற்கு முன்னோடியாக வெருகல் ஆற்றைக் கடக்க உதவும் மிதக்கும் பாதை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டிருக்கிறது. அதிகாலை மூன்று மணிக்கு இடம்பெற்ற இத்தாக்குதலைப் புலிகளே செய்தார்கள் என அரச ஊடகங்கள் தெரிவித்துக் கொண்ட போதிலும், இராணுவத்தினரே இதைச் செய்தார்கள் என அப்பகுதி மக்கள் அடித்துக் கூறுகிறார்கள். புலிகளிடமிருந்து பிரிந்து இராணுவத்தின் கையாளாகச் செயற்படும் ரமணன் என்பவர் இத்தாக்குதலில் முக்கிய பங்கெடுத்தமையே தகுந்த சான்று என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இப்போக்குவரத்துத் துண்டிப்பினால் பாதகம் புலிகளுக்கே என்பதும் கவனிக்கத்தக்கது.

புலிகளை எதிர்கொள்ளாமலேயே மூன்றாம் புலிவேட்டை வெற்றிகரமாக முடித்து வைக்கப்பட்டது. புலியைத் தேடிச்சென்றவர்கள் முதல் நாள் வீரதீரச்செயலாக பொன்னன் குஞ்சன் என்ற விவசாயியைச் சுட்டிருக்கிறார்கள். சம்பூர்க் கிராமத்தைச் சேர்ந்த இந்த விவசாயி கொக்கடிச் சேனை என்ற இடத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது சுடப்பட்டிருக்கிறார். தொடையில் காயத்துடன் உயிர்த்தப்பிய அவர் மூன்று குழந்தைகளின் தந்தையாவார்.

வேறு அசம்பாவிதங்களின்றி 'பிக்னிக்' ஆக முடிந்துவிட்ட புலிவேட்டையைத் தொடர்ந்து, இராணுவம் உற்சாகமாக இருந்த வேளையில்தான் 64ம்கட்டை காவலரண் இரண்டாவது தடவையாகத் தாக்கப்பட்டிருக்கிறது. ஏப்ரல் 14ம்திகதி இது தாக்குதலுக்குள்ளாகி நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. எனினும் அதிக பலத்துடன் இக்காவலரண் உடனடியாக மீளியக்கம் பெற்றது.

முதலாவது தாக்குதல் பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது. மே 3ம்திகதி இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல், மாலை 5.30மணியளவில் ஆரம்பமானது. உக்கிரமான இந்தத் தாக்குதலில் 10 பொலிசாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் உயிரிழக்க வேண்டியதாயிற்று. ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவம் உதவிக்கு விரைந்த போதிலும் புலிகளுக்கு எவ்வித இழப்பையும் ஏற்படுத்த முடியாமற் போனது புலிகளது தாக்குதல் திறன் அதிகரித்துள்ளதையே காட்டுகிறது. இந்தத் தாக்குதலையடுத்து கட்டைப் பறிச்சான் முகாம் இராணுவத்தினர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வருபவர்கள் மேல் சீறி விழத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது. எத்தனை புலிகள் காயம்பட்டார்கள், எத்தனை புலிகள் இறந்தார்கள் என்றும் மக்களிடம் கேட்டுப் பார்த்திருக்கிறார்கள்.

''புலிகளின் வானொலிச்செய்தியை இடைமறித்து ஒற்றுக்கேட்டு அறிந்து கொள்ளலாம்தானே. எங்களுக்கு ஏன் தொல்லை தருகிறார்கள் என்று வயோதிபர் ஒருவர் ஆத்திரங் கொண்டதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கு முஸ்லிம்கள் மீள்குடியேற்றம்: சாத்தியமாவதெப்போது?

[illegible]

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணு சகலதரப்பிலும் பலத்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளார். முஸ்லிம்கள் தரப்பில், இவரால் ஏதாவது பயனுள்ளது நிகழும் என்று எதிர்பார்க்கப்படும் விடயம், வடக்கிலிருந்து புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பானது.

வவுனியா ஆண்டியாபுளியங்குளத்தில் ஒலாரா ஒட்டுண்ணுவைச் சந்தித்த வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் பிரதிநிதிகள் முஸ்லிம்களின் விடயம் சம்பந்தமாக உரையாடியதுடன், ஐ.நா செயலாளரிடம் ஒப்படைக்கும்படி தங்கள் கோரிக்கைகளையும், ஆவணங்களையும் கையளித்துள்ளனர்.

இச்சந்திப்பின் பின் புலிகளின் சிரேஷ்ட பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடிய ஒலாரா ஒட்டுண்ணு, தான் பேச வந்த பிரதான விடயத்துடன் முஸ்லிம்கள் தொடர்பான விடயத்தையும் கதைத்துள்ளார். 'முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவார்களானால் தாங்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கப்போவதில்லை' என புலிகள் தெரிவித்ததாக கொழும்பில் ரவூப் ஹக்கீம் எம்.பி.யைச் சந்தித்த ஒலாரா ஒட்டுண்ணு தெரிவித்துள்ளார்.

புலிகளின் இந்த அழைப்பு அல்லது அனுமதி முஸ்லிம்களுக்கு இனிப்பான செய்தியாக இருந்தாலும் இக்கூற்று மீள் குடியேற்றத்துக்கான உடனடி அனுமதியாகக் கொள்ளப்படலாமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான ரவூப் ஹக்கீம், 'இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் சொந்த இடம் திரும்புவதற்கு இன்னமும் காலம் கனியவில்லை; இராணுவ அதிகாரிகளின் அபிப்பிராயமும் பெறப்படவேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

புலிகள் முஸ்லிம்களின் மீள்வரவு தொடர்பாக சம்மதம் தெரிவித்தது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முதலும் புலிகளின் தலைவர் பிரபாகரன், அன்டன் பாலசிங்கம், கரிகாலன், துரை போன்றவர்களும் தங்களுடனான பேட்டிகளின் போது இந்த சம்மதத்தை தெரிவித்திருந்தனர். எனினும் இந்த சம்மதத்தை மாத்திரம் அனுமதியாகக் கொண்டு முஸ்லிம்கள் செல்லத் தயாராகவிருக்கவில்லை. மீள் குடியமர்வு என்பது நீண்ட திட்டமிடலின் அடிப்படையிலும், நம்பிக்கையின் அடிப்படையிலும் இடம்பெற வேண்டும் என்பதும், பிரச்சினைத் தீர்வுகளின் போது வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை தனித்துவமாகப் பார்க்கப்படவேண்டியது என்பதும் கோரிக்கையாய் மேலெழுந்தது.

அத்துடன், புலிகளின் மேலிடம் சம்மதம் தெரிவித்திருந்தாலும் பிராந்திய மட்டங்களின் தலைமைத்துவம் அதனை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகிறது. இதை அண்மையில் மன்னார் சென்று திரும்பிய முஸ்லிம்களிடம் புலிகளின் பிராந்தியப் பொறுப்பாளரும் தெரிவித்திருந்தார். அத்துடன் லண்டனின் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் இப்போதைய யுத்த நிலைமை மீள்வரவுக்கு சாத்தியமில்லை; ஆனாலும், நாங்கள் எப்போதாவது முஸ்லிம்களை மீள்குடியேற்றுவோம் என்று தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகிறது. இது தவிரவும், முஸ்லிம்கள் மீள் குடியேறியுள்ள சில இடங்களில் புலிகளின் நடவடிக்கைகளும் இதனை நின்று நிதானிக்க வைக்கச் செய்துள்ளன.

ஒட்டுண்ணு விடயம் சம்பந்தமானதில் அதிகம் எதிர்பார்க்கப்படுவதன் காரணம் ஒரு வகை மூன்றாம் மத்தியஸ்தம் ஊடாக இச்சம்மதம் பெறப்பட்டிருப்பதும், ஐ.நா. செயலாளருக்கு இது பற்றிய விடயம் தெரிவிப்பதுமாகும்.

ஒலாரா ஒட்டுண்ணுவிடம் முஸ்லிம்களின் மீள்வரவு சம்பந்தமாக புலிகள் தெரிவித்திருக்கும் சம்மதம் தொடர்பாக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளர் மௌலவி பி.ஏ.எஸ் சுபியானிடம் வினவியபோது பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.

''ஒட்டுண்ணு வந்த விடயம் சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவது தொடர்பானது. இந்தப் பிரதான விடயத்துடன் ஒன்றாக முஸ்லிம்கள் தொடர்பாகப் பேசப்பட்டிருப்பதும், அதற்கு புலிகள் சம்மதம் தெரிவித்திருப்பதும் சந்தோசத்தை அளிக்கிறது. என்றாலும் இவர்களுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பான முழு அறிக்கையும் இன்னமும் புலிகளோ, ஒட்டுண்ணுவோ வெளியிடவில்லை. இதுவரை வந்த செய்திகள் ஏ.எப்.பி. மூலத்தைக் கொண்டும், புலிகளின் வானொலிச் செய்தியைக் கொண்டுமே பெறப்பட்டிருக்கின்றது. இதுபற்றிக் கருத்துச் சொல்வதற்கு முதலில் இவர்களது உத்தியோகபூர்வமான அறிக்கை வெளியிடப்பட வேண்டும். அப்போதுதான் முஸ்லிம்கள் தொடர்பான உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிந்து ஏனைய நடவடிக்கைகளில் இறங்கலாம்.''

''அடுத்தது, உடன்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்ட விடயங்கள்-பிரதானமாக சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவதில்லை என்ற உடன்பாடுகள்-எல்லாம் எவ்வளவு தூரம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதையும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். பிரதான விடயமே நடைமுறைப்படுத்தப்படாதவிடத்து எமது விடயத்தைப் பற்றி இன்னும் அதிகம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

''முஸ்லிம்களின் மீள் இருப்பு சம்பந்தப்பட்ட விடயம் சகலதரப்பும் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தையினூடாக இடம்பெறவேண்டும். அதில் முக்கியமானது புலிகளுடனானது. லண்டனிலுள்ள புலிகள் இயக்க முக்கியஸ்தர்களும் இப்போதைய நிலையில் மீள் இருப்பு சாத்தியமில்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள்.


ஆக இதெல்லாம் மீள்குடியமர்வு தொடர்பில் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது. எமது அமைப்பு, ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் எமது பிரச்சினைகளை ஒட்டுண்ணு மூலம் தெரியப்படுத்த விளைகிறது. மூன்று பிரதான கோரிக்கைகளை நாங்கள் ஒட்டுண்ணு மூலம் சமர்ப்பித்திருக்கிறோம் என்று தெரிவித்த பி.ஏ.எஸ். சுபியான் அக்கோரிக்கைகளையும் தெரிவித்தார்.

1. எமது பாரம்பரிய பூமியில் பாதுகாப்புடனும் உரிமையுடனுமான மீள் குடியேற்றத்துக்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புக்களை ஐ.நா. ஏற்படுத்த வேண்டும்.
2. 1990 ஒக்டோபரில் விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது ஏற்பட்ட அசையும், அசையாத சொத்துக்களுக்கான நஷ்டஈடுகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை ஐ.நா மேற்கொள்ள வேண்டும்.
3. தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசு புலிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பேச்சுவார்த்தைகளின் போது எமது விவகாரத்தையும் உள்ளடக்கியதாக இப்பேச்சுவார்த்தைகளின் நிகழ்ச்சிநிரல் உள்ளடக்கப்பட வேண்டும்.

ஆக, ஒட்டுண்ணு வந்த விடயங்கள் அல்லது ஒட்டுண்ணு இலங்கைக்கு அனுப்பப்பட்ட விடயங்கள் எந்தளவு அரசு - புலிகளால் நடைமுறைப் படுத்தப்படுகிறதோ அப்போதுதான் வடக்கு முஸ்லிம்கள் விடயத்தையும் நடைமுறைப்படுத்துவது பற்றி சிந்திக்க வேண்டும்.

மொத்தத்தில் இன்னும் பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது.

# புலிகளுக்கு ஜயசிக்குறு?



மாங்குளத்தில் புலிகளால் அழிக்கப்பட்ட ஒரு டாங்கி

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி மே 13ம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. அதன் பெறுபேறுகள் இலங்கை அரசுக்குச் சாதகமாக அமையவில்லை என்பது, இந்த நீண்டகால நடவடிக்கை குறித்து அரச தரப்பில் இருந்து, இந்த வேளையில் எந்தவிதமான உணர்வலைகளும் வெளிப்படுத்தப்படாமல் இருப்பதில் இருந்து புலனாகின்றது.

முப்பதினாயிரம் துருப்புக்களைக் கடந்த ஒரு வருட காலமாக எதிர்கொண்டு, தமது பிரதேசத்தினுள்ளே இராணுவம் ஆரம்பத்தில் எதிர்பார்த்திருந்தபடி முன்னேற விடாமல், பின்னடையச் செய்த விடுதலைப் புலிகள் ஜயசிக்குறுவின் ஓராண்டு நிறைவை ஓர் எழுச்சி விழாவாக வன்னியிலும், கிழக்கில் கொக்கட்டிச்சோலையிலும் கொண்டாடி உள்ளார்கள்.

பல்வேறு தாக்கங்களுக்கு மத்தியிலும், வன்னியின் உள்ளே முன்னேறி விட வேண்டும் என்று மூர்க்கமாக இருக்கின்ற இராணுவத்தினருக்கு எதிராகத் தமது போராளிகளையும், தமது பிரதேசத்தில் உள்ள மக்களையும் எழுச்சி கொள்ள இந்த ஓராண்டு நிறைவுச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, உள்ளார்கள் புலிகள்.

அது மட்டுமல்லாமல், இந்த ஒரு வருட காலத்தில் தாண்டிக்குளம் தொடக்கம், பெரியமடு, ஓமந்தை, விஞ்ஞானகுளம், கரப்புக் குத்தி, மன்னகுளம், கரிபட்டமுறிப்பு, மாங்குளம் எனப் பல இடங்களிலும் இருந்த இராணுவத்தின் முக்கிய விநியோக மையங்கள், கேந்திர நிலைகள், முகாம்கள், முக்கிய முன்னேற்ற நகர்வுகள் என்ற இராணுவ இலக்குகளைத் தேர்வு செய்தும், முன்னேற முயன்ற படையினரை நேருக்கு நேர் எதிர்கொண்டும், நடத்திய பல்வேறு வகையான அதிரடித் தாக்குதல்களை நினைவு கூரும் வகையிலும் இதனை அவர்கள் அமைத்திருந்தார்கள்.

இக்காலப் பகுதியில், துணிவோடும், சாதுரியமாகவும் எதிர்த்துப் போரிட்டு மடிந்த புலிகளையும் நினைவு கூர்ந்துள்ளார்கள். இதனை ஒரு வகையில் அவர்களது வெற்றி விழாவாகக் கருதினாலும்கூட தவறாக மாட்டாது.

ஏனெனில் அதிகார பலம் மிகுந்த நிலையில், உச்ச கட்ட இராணுவ வளங்களைப் பெற்றிருந்த அரச படைகளை, இவ்வாறான வளங்களும், வாய்ப்புகளும் அற்ற பகுதியினர் எதிர்த்து நீண்டகாலத்திற்குப் போராடுவது என்பது இலகுவான காரியமல்ல.

எண்ணிக்கையில் அதிகமான படையினரைக் கொண்டு, மரபுவழிப் படையெடுப்பு முறையில் போரைத் தொடங்கிய இராணுவத்தினரை கெரில்லாப் பாணியில் முதலில் எதிர்த்து நின்ற புலிகள் நாட்கள் செல்லச் செல்ல மரபு வழிப் பாணியில் அரச படைகளை எதிர்த்துத் தாக்கியதன் மூலம், மூன்றாம் ஈழப் போரில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தி உள்ளார்கள்.

அரச படைகளைத் திகைத்துத் தயங்கச் செய்யக்கூடிய போர் உத்திகளைக் கையாண்ட புலிகள், இலங்கை அரசுக்கும் உலகத்திற்கும் புலிகள் என்பவர்கள் அரசாங்கம் பிரசாரம் செய்வது போல, சாமான்யர்கள் அல்ல என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டி உள்ளார்கள்.

அத்துடன், இலங்கையின் இனப் பிரச்சினையை இராணுவ அணுகுமுறையின் மூலம் தீர்த்துவிட முடியாது என்பதையும் புலிகளின் பங்களிப்பு இல்லாத தீர்வு முயற்சிகள் என்பது செல்லாக்காசாகவே இருக்கும் என்பதையும் தெட்டத் தெளிவாக இலங்கைப் பிரச்சினையில் அக்கறை உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் உணர்த்தி உள்ளார்கள்.

விரலுக்கு ஏற்ற வீக்கம் தேவை என்பதை மறந்து, புலிகளைச் சரியாக மதிப்பிடத் தவறிவிட்ட நிலையில், வன்னிப் போர்முனைகளில் அகலக் கால் பதித்ததன் மூலம் இராணுவ ஆளணிப் பற்றாக் குறையையும் இலங்கை அரச படைகள் எதிர்கொள்ள வேண்டிய சிக்கலுக்கு ஜயசிக்குறு ஆளாகி விட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் கூறுவது போல இராணுவ முனைப்பின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற அரசியல் சாணக்கிய அணுகுமுறை சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாமல் போயுள்ளதையும் ஜயசிக்குறு தெளிவுபடுத்தி உள்ளது.

முப்பதினாயிரம் படைகளைக் கொண்ட நிலையிலும், ஜயசிக்குறு நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் மேலும் பதினையாயிரம் பேர் தேவை என்பதைப் பறைசாற்றி, இராணுவத்திற்கு ஆள் சேர்க்க எடுத்த முயற்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் எதிர்பார்த்த அளவு ஆதரவு உணர்வை ஏற்படுத்தவில்லை.

அதுமட்டுமல்லாமல், இராணுவத்தில் இருந்து விலகி ஓடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகி வருவதுடன், விட்டோடியவர்களை மீண்டும் படையில் சேர்த்துக் கொள்வதற்கான அரசின் முயற்சிகளும் பலனின்றித் தொடர்ந்தவண்ணமே உள்ளன. ஈழப்போர் மூன்று ஆரம்பமான பின்னர் இதுவரை படையில் இருந்து விட்டு ஓடியவர்களுக்கு ஏழு தடவைகள் பொது மன்னிப்பு வழங்கி, வாவென்று கூவிக் காத்திருந்தது அரசு. அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது என்றும், சலுகைகள் பல வழங்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்த இரக்க சிந்தையுடன் கூடிய செயற்பாடும் இராணுவத்தைப் புறக்கணித்தவர்களைக் கவர்ந்து இழுக்கவில்லை என்பது அரச தரப்பின் சோகமான உண்மையாகி உள்ளது.

வெற்றி நிச்சியம் என்பது வெறும் பெயரளவில்தான் மிஞ்சப்போகிறதோ என்னவோ? என்ற சந்தேகம் தெற்கிலே கூட பலமாக அடிபடத் தொடங்கி விட்டது. ஆனாலும்,அது தன் முயற்சியை தொடர்வதில் சளைத்துப் போனதாகத் தெரியவில்லை.

எப்படியோ கடந்த ஓராண்டு கால மதிப்பீட்டில் வெற்றியை நிச்சியமாகப் பெற்றிருப்பவர்கள் புலிகள் என்று சொல்லாமலிருக்க முடியவில்லை.

தர்ஷன் ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசும் அடியாட்களும் புரிந்து கொள்ள வேண்டியவை !



ஐ.நா. சபையின் விஷேட தூதுவராக இங்கு வருகை தந்த ஒலாரா ஒட்டுண்ணுவின் வருகை இலங்கை அரசியல் அரங்கில் கடந்தவாரம் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

ஐ.நாவின் விஷேட தூதுவரான ஒட்டுணு அவர்களது பிரதான அக்கறைக்குரிய விடயமாக இருந்தது இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் காரணமாக சிறுவர்களுக்கு உண்டாகும் பாதிப்புப் பற்றிய சில அவதானிப்புளை மேற்கொள்வதாகும்.

ஆயினும் வெறுமனே யுத்தத்தினால் சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாவது பற்றிய தகவல்களைத் திரட்டுவதுடன் நில்லாது, இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருதற்கான சமாதான முயற்சியிலும் அவர் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கையும் அவரிடம் முன்வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை முன்வைத்தவர்களில் முக்கியமானவர்கள் தமிழ் தலைவர்கள் ஆவர்.

வடக்கு கிழக்கில், புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள பகுதிகளில் சிறுவர்களை தம்முடன் பலவந்தமாக இணைத்துக் கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை பரவலாக ஐரோப்பிய நாடுகளில் பிரச்சாரம் செய்து வருபவர் வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர். சிறுவர்களை புலிகள் இவ்வாறு துஷ்பிரயோகம் செய்வது காரணமாக அவர்களுக்கு எந்தவித உதவிகளும் வழங்கப்படக்கூடாது, வெளி நாடுகளில் அந்த இயக்கம் தடைசெய்யப்பட வேண்டும் என்பன அமைச்சரது தொடர்ச்சியான கோரிக்கைளாக இருந்து வருகிறது. அமைச்சர் தனது கூற்றை அதாவது புலிகள் சிறுவர்களை ஆயுதப்போருக்கு பலவந்தமாகச் சேர்க்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த இங்கு வந்து கண்காணிக்குமாறு ஐ.நா. சபையிடம் கோரிக்கை விடுத்தும் இருந்தார். அவரது இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேயே விஷேட தூதுவர் ஒலாரா ஒட்டுணுவின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது.

ஒலாரா ஒட்டுணுவின் இலங்கை வருகை மூலம் கதிர்காமர் சாதிக்க விரும்பிய விடயங்கள் இரண்டு. ஒன்று வடக்கு கிழக்கில் புலிகள் மேற்கொள்வதாகக் கூறப்படும் சிறுவர்களை யுத்தத்திற்கு சேர்ப்பது பற்றிய செய்தியை சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு சபை மூலமாக, ஐ.நா. சபை மூலமாக வெளியிடுவதும், புலிகள் மீது ஐ.நா.சபையின் கட்டுப்பாட்டை கொண்டுவருவதும் ஆகும். இரண்டாவது இந்தத் தகவல் அம்பலத்துக்கு வரும் போது, உலக நாடுகளை புலிகள் இயக்கத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கோருதல். முடிந்தால் அந்தந்த நாடுகளில் புலிகளின் இயக்கத்தை அமெரிக்காவில் செய்யுப்பட்டது போல - தடைசெய்யும்படி கோருதல்.

புலிகள் தொடர்பாக அரச தகவல்களினூடாகவும், சில மனித உரிமைகள் மற்றும் புலி எதிர்ப்பு அரசியல் கட்சிகளூடாகவும் அமைச்சர் பெற்றுக் கொண்டிருந்த தகவல்களே அவரை இவ்வளவு தன்நம்பிக்கையுடன் ஒட்டுண்ணுவை அழைக்கத் துணிய வைத்தன. அமைச்சருக்கு வடக்கு கிழக்கின் நிலைமைகள் குறித்த நேரடிப்பரிச்சயம் ஒருகாலமும் இருந்ததில்லை. அங்குள்ள சிறுவர்கள் பற்றி அவர் இந்தத் தகவல்களை தவிர வேறேதும் அறிந்திருக்க நியாயமும் இல்லை. எனவே ஒட்டுணுவின் வருகை புலிகளை முற்று முழுதாக அம்பலப்படுத்தும் என்பது அவரது நம்பிக்கையாக இருந்தது.

ஆனால் ஒட்டுணுவின் வருகையும், அவர் யாழ்ப்பாணம், வன்னி என்று நடாத்திய சூறாவளிச் சுற்றுப்பயணமும் இங்குள்ள சகல தரப்பாருடனான உரையாடலும், அமைச்சர் எதிர்பார்த்த நிலைமையை உருவாக்க வில்லை. மாறாக, புலிகளுக்கு அரசியல் ரீதியாக இலாபத்தையும், அரசாங்கத்துக்கு அரசியல் நெருக்கடியும் தோற்றுவிக்கும் ஒன்றாக உருப்பெறத் தொடங்கி விட்டது.

வன்னியில் புலிகளைச் சந்தித்து விட்டு வந்த ஒட்டுணு அவர்கள் யுத்தத்தால் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது பற்றிப் பேசினாரே ஒழிய, புலிகளால் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது பற்றிப் பேசவில்லை. தவிரவும், 18 வயதுக்குக் குறைந்தவர்களைத் தாம் இயக்கத்தில் சேர்ப்பதில்லை என்ற உறுதிமொழியை அவர் புலிகளிடமிருந்து வாங்கி வந்திருக்கிறார்.

யுத்தத்தால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு என்பது வெறுமனே சிறுவர்களை புலிகள் இயக்கத்தில் சேர்க்கும் விவகாரம் மட்டுமல்ல, யுத்தத்தால் ஏற்பட்டு வரும் இடப்பெயர்வும் அதன் காரணமாக சிறுவர்களது கல்வி, சுகாதாரம், மற்றும் மனோநிலை பாதிப்படைவதும் உள்ளடங்கும் என்பது அமைச்சர் கதிர்காமருக்கு அக்கறையில்லாத விடயமாக இருக்கலாம். ஆனால் ஐ.நா. தூதுவருக்கு அது மிகவும் முக்கியமான ஒன்று. எனவே அவரது கவனிப்பில் யுத்தத்தினால் சிறுவர்கள் பாதிப்படையாமல் இருப்பதற்கான வழிமுறைகள் பற்றிய விடயங்களே பிரதான ஆதிக்கம் செலுத்த முடியும். புலிகளின் ஆட்சேகரிப்பு விவகாரம் அதனுள் உள்ளடங்கலான ஒரு விடயம் மட்டுமே.

இந்த விடயம். தமது ஆறுநாள் விஜயத்தை முடித்துக் கொண்டபின் பத்திரிகையாளர்களுக்கு தனது கருத்தை அவர் தெரிவித்துப் · பேசிய போது தெளிவாகியது. அவரது கருத்தில் உலக சிறுவர் தொகையின் 1/4 பங்களவான சிறுவர்கள் யுத்த நிலமைகட்குள் சிக்குண்டிருக்கிறார்கள். அவ்வாறு சிக்குண்டிருக்கும் 30 நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று அவர் தெரிவித்தார். அவர் இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் யுத்த சூழ்நிலையில் வாழும் சிறுவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமலிருப்பதை உறுதிப்படுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது மிகவும் மனவருத்தத்திற்குரியது. அவர்களுக்கு உரிய புனருத்தாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். ஆக இந்தக் கருத்துக்கள் கதிர்காமர் எதிர்பார்த்த நேரடி அரசியல் லாபத்தை அரசுக்கு வழங்கியதாகச் சொல்ல முடியாது. மாறாக அரசாங்கத்தையும் விமர்சிப்பதாவே அமை ந்திருந்தன.

இன்னொரு விடயமும் நடந்திருக்கிறது. அதுதான் புலிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒட்டுணுவிடம் சிறுவர்கள் தொடர்பாக முக்கிய மான சில விடயங்களையும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

ஒன்று: இடம் பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாடிலுள்ள பகுதிகளுக்கு செல்ல எந்தக் கட்டுப்பாடும் விதிக்கப்பட மாட்டாது. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தமது இடங்களுக்குத் திரும்பவும் எந்தத் தடையும் இல்லை.

இரண்டு: மனிதாபிமான உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக எடுத்துச் செல்வதற்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்கப்பட மாட்டாது.

மூன்று: சிறுவர் உரிமைகட்கான ஐ.நா. ஏற்பாடுகளை கடைப்பிடிக்கத் தயாராகப் புலிகள் உள்ளனர். தமது உறுப்பினர்கட்கு இந்த ஏற்பாடுகளை அறிந்து கொள்ள ஆவன செய்யப்படும்.

இவை தவிர இவற்றை கண்காணிக்க உரிய அமைப்பு வடிவம் ஒன்றை உருவாக்குதல் அவசியம் என்பதையும் புலிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

புலிகளின் இந்த ஒப்புதல்களும், 18 வயதுக்குக் குறைந்தோரை இயக்கத்தில் சேர்ப்பதில்லை என்று உறுதியளித்தமையும் அவர்களை அரசியல்ரீதியாக பலப்படுத்தியுள்ளதென்றே கொள்ள வேண்டும். சர்வதேச அரங்கில் அவர்களுக்கு, அமைச்சர் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஒரு கவனிப்பை இவை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் அதே வேளை, அரசுக்கு எதிர்பாராத விதமாக ஒரு நெருக்டியும் ஏற்பட்டது. அதாவது யுத்தத்திற்கு ஆட்பற்றாக்குறை நிலவி வருவதன் காரணமாக, படைக்கு ஆட்திரட்டும் முயற்சிக்குப் பாடசாலைகளை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானமே இந்த நெருக்கடிக்குக் காரணமாகும். அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்திற்குக் காரணமாக இருந்தவை, பல தடவைகள் மன்னிப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டும் படையை விட்டு தலைமறைவான 15000 பேரில் கணிசமானோர் திரும்பி வராமையும் கவர்ச்சிகரமான விளம்பரங்களை தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலமாக வெளியிட்டும், படைக்கு விரும்பிச் சேர்வோர் தொகை குறைவாக இருப்பதுமாகும். பாடசாலைகட்கு வீடியோ படங்கள் மற்றும் பிரச்சார சாதனங்களுடன் சென்று ஆட்சேர்ப்பு முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் இந்த ஆட்பற்றாக் குறையை நீக்க அரசு திட்டமிட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம், ஒட்டுணு அவர்கள் இலங்கையில் இருக்கும் போது வெளிவந்தது! இது ஒரே நேரத்தில் புலிகள் மீது கட்டுப்பாட்டை விதிக்கக் கோரும் கோரிக்கையையும், அதே நேரம் தாம் பாடசாலைகளை நோக்கி செல்வது என்ற முடிவையும் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் இரட்டைத் தனத்தை உலக மட்டத்தில் பிரச்சாரம் செய்ய புலிகளுக்கு நல்லதொரு வாய்ப்பை வழங்கியது. விளைவு விழுந்தடித்துக் கொண்டு தகவல் தொடர்புத் துறை அமைச்சர் மங்கள சமரவீர அப்படி ஒரு முடிவும் எம்மிடம் இல்லை, நாம் பாடசாலை மாணவர்களை சேர்க்கப் போவதில்லை என்று அறிவித்தார். ஆனால் பாவம், அவரது முயற்சிகள் எடுபடவே இல்லை. ஏனென்றால் அதேவேளை இராணுவத் தளபதி றோகான் தளுவத்தை பத்திரிகைகட்கு அளித்த பேட்டி ஒன்றின் போது தாம் பாடசாலை நோக்கி செல்லத்தான் போகிறோம் என்று அறிவித்துள்ளார்.

ஆனால் தாமும் 18வயதுக்குக் குறைந்த பாடசாலை மாணவர்களை படைக்குச் சேர்க்கப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

'பாடசாலைகட்குச் செல்லல்' என்ற இந்த அரசாங்கத்தின் முடிவு பலத்த விமர்சனங்களை எதிர்நோக்கியுள்ள போதும், படையிலிருந்து தலைமறைவானவர்கள் திரும்ப வராவிட்டால் அதைவிட வேறு வழியில்லை என்பதே அரச நிலைப்பாடு.

இது தொடர்பாக இங்கு தங்கியிருந்த ஒட்டுணு அவர்களது கவனமும் ஈர்க்கப்பட்டது.

ஆக, தாம் பாடசாலைகட்குப் போனாலும் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டடோரைச் சேர்க்க மாட்டோம் என்ற உறுதிமொழியை அரசாங்கம் தெரிவிக்க வேண்டி இருந்தது.

இப்போது புலிகளுடன் ஐ.நா. அதிகாரிகள் சிறுவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பேச உள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதெல்லாம் இங்குள்ள சில பத்திரிகைகட்கு சகிக்கவில்லை. புலிகள் சொன்னபடி செய்யமாட்டார்கள் என்பதை ஒட்டுணுவின் வாயினால் கேட்டுவிட அவர்கள் பெரும் முயற்சி எடுத்தனர். ஆனால் ஒட்டுணு தனது பதிலில் அதைப்பற்றி எனக்கு எதையும் சொல்ல முடியாது. அது என்னுடைய வேலையும் அல்ல என்று தெரிவித்து விட்டார். ஆனால் இந்தப் பத்திரிகைகள் அதைக்கூட திரித்து புலிகளை ஐ.நா. அதிகாரிகள் நம்பவில்லை என்று எழுதி தமது ஆத்திரத்தை தீர்த்துக்கொண்டுள்ளார்கள் - புலிகள் திருந்தினாலும் திருந்த விட மாட்டோம் என்ற தோரணையில்!.

எப்படியோ, புலிகள் இயக்கத்தினை வெற்றிகொள்ளமுடியாமல் இருப்பதற்கான காரணம்,அவர்கள் சிறுவர்களை இயக்கத்தில் சேர்க்கின்றார்கள் என்பது போன்ற காரணங்கள் தான் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார் கதிர்காமரும், அவரது அரசும். அதனால் தான் இத்தகைய அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் அவர் தீவிரமாக ஈடுபடுகிறார்.

ஆனால் வெல்லமுடியாமையின் இரகசியம், இந் நாட்டின் இனத்துவ அரசியலே என்பதை அவரும் இந்த அரசும் புரிந்து கொள்ள விடாப்பிடியாக மறுத்து வருகின்னர்.

இந்த இடத்தில் மன்னார் ஆயர் வணபிதா: இராயப்பு ஜோசேப்பு அவர்கள் ஒட்டுணுவிடம் தெரிவித்த ஒரு விடயம் கவனத்திற்குரியது.

"வன்னிப் பிரதேச சிறுவர்கள் ஆயுதம் ஏந்துகிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் ஏன் ஆயுதம் ஏந்துகின்றனர் என்பதை பலரும் மறந்து விட்டனர். வன்னிச் சிறுவர்கள் பிறந்தது முதல் இன்று வரை சமாதானம் என்றால்' என்ன என்றே அறிந்திருக்க மாட்டார்கள். . . . அவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. உணவு, மருந்துத் தட்டுப்பாடு என்பன பெருமளவில் நிலவுகிறது. குழந்தைகட்கு பால் மா கூட இல்லை. இதையெல்லாம் பல தடைவைகள் அரசுக்கு தெரிவித்து விட்டோம். ஆனால் ஒரு பயனும் கிடைக்கவில்லை. பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகிறது. அரசு இதைக் கண்டு கொள்வதே இல்லை. ஆனால் ஆயுதம் ஏந்துவது பற்றி பேசுகிறது." ஆம் அவர் சொல்லுவதும் அதே தான். பிரச்சினையின் மையம் அரசியல் தான் என்பதுவே அது.

அரசும் அதன் அடியாட்களும் இதை புரிந்து கொள்ளாத வரை அவர்களால் எதுவும் சாதிக்கப்படப் போவதில்லை.

அவர்களுக்கு வெற்றியும் கிடைக்கப் போவதில்லை, மக்களுக்கு சமாதானம் வரப்போவதுமில்லை!.

- இது ஒரு 'இனப்படுகொலை அரசு' என்ற சர்வதேச முத்திரையைப் பெறுவதைத் தவிர!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மருத்துவப் பிரச்சினைகளும் மலையக மக்களும் !

புருசோத்தமன்

கீழைத்தேய நாடுகளில் மக்களது பூர்வீக மதம், மொழி, கலாசாரம், பண்பாடு, சுதேசிய மருத்துவம் என்பன மேற்குலகின் காலனிய ஆட்சிக் கால கட்டத்திலும், பின் காலனிய காலகட்டத்தில் மறுகாலனித் துவப்படுத்தலின் போதும் திட்டமிட்ட முறையில் சிதைத்தழிக்கப்பட்டு வருகின்றமை கரிசனைக்குரியதாகின்றது.

இந்தியாவின் தென்நகரப்பகுதியில் இருந்து இலங்கையின் மத்திய மலை நாட்டின் கானகங்களிடையே கருப்புத் தங்கமான கோப்பி, தேயிலை, இறப்பர், தெங்கு பயிரிடவென கொண்டு வரப்பட்ட மலையக மக்களது அடையாளங்கள், அவர்களது பூர்வீக மொழி, மதம், மருத்துவம், கலாசாரம், பண்பாடு என்பன தொடர்பிலும் மிக தீவிரமான மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. கண்டியை ஆண்ட கடைசித் தமிழ் மன்னனான கீர்த்தி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் 1815ம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் கைது செய்யப்பட்டு,

*மழை வளம் மிக்க நாட்டில் டிக்கோயா, பொகவந்தலாவ, மஸ்கெலியா, வைத்தியசாலைகளில் நீர் இல்லை என்ற காரணத்தால் வார்ட்டுகள் மூடப்படுவதும், பிரேத பரிசோதனைக்கு நுவரெலியா, நாவலப்பிட்டி போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. விடுமுறை தினங்களில் திடீர் மரண விசாரணை அதிகாரி வருகை தர மறுப்பதும், பொலிசாரின் இனவெறிப் போக்குகளும் இப் பிரதேசத்தை மரணங்கள் மலிந்த பூமியாக மாற்றி வருகின்றது.*

முடியிழந்த 12 ஆண்டுகளில் 1827ம் ஆண்டில் தமிழர்கள் அடிமைக் குடிமக்களாக இங்கு கொண்டு வரப்பட்ட வரலாறு விசித்திரமானது தான்.

இம்மக்களது வாழ்வியலை ஊடறுத்து இருத்தலையும், வாழ்தலையும் கேள்விக்குள்ளாக்கும் மருத்துவ காலனியம், மருத்துவ துறையில் ஊடுருவியுள்ள இன, மொழி, மத, வர்க்க குணாதிசயங்கள் என்பன தொடர்பிலும், அது மலையகத் தமிழ் மக்களை எவ்வாறெல்லாம் பாதித்து வருகிறது என்பது குறித்தும் ஆராய்வது அவசியமானதாகும்.

அண்மையில் கூட அமெரிக்க ஏகாதிபத்தியம் கறுப்பின மாணவர்களிடையே குற்றச்செயலை அதிகரிக்கச் செய்யும் மருந்து மாத்திரைகளை கொடுத்து விபரீதமானதும், மனித குலத்துக்கே எதிரானதுமான சோதனையை நடத்தி வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

மலையக தமிழர்கள் வர்க்க/இனத்துவ கூறுகளை ஒருங்கே கொண்ட ஒரு அரசியல் சமூகம் என்ற வகையில் நவீன அரசு இயந்திரத்தின் ஒடுக்குமுறைக் கூறுகள், எவ்வாறு ஒரு இனத்தின் இருத்தலைக் கேள்விக்குள்ளாக்குகின்றது என்பது இங்கு பேசப்படவேண்டியதாகின்றது.

1

மலையகத் தமிழர்களுக்கான மருத்துவ வசதிச் சட்டம் இல. 14, 1872ம் ஆண்டு பிரித்தானிய ஆளுநர் சேர் வில்லியம் கிரகரியினால் பிறப்பிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் 1.10.1849ம் ஆண்டு வெளியிடப்பட்ட ''கொழும்பு ஒப்சேர்வர்'' பத்திரிகைச் செய்தியின்படி, 1841ம் ஆண்டுக்கும் 1848ம் ஆண்டுக்கும் இடையிலான காலப் பகுதியில் இலங்கை வந்த இந்திய தமிழ் தொழிலாளர்களில் 25% மானோர் அல்லது 70,000 பேர் மரணித்து விட்டனர் என அறிவித்தது. இக்காலப்பகுதியில் இலங்கைக்கு வந்த இந்தியத் தொழிலாளர்களில்,

ஆண்கள் 265,467 பேர், பெண்கள் 5,155பேர், சிறுவர் 2,250பேர் அடங்குவர்.

ஆனால், இவர்களில் ஆண்கள் 129,360 பேர், பெண்கள் 2,639, சிறுவர் 1,519 பேர் மட்டுமே உயிருடன் இருந்ததாகவும், ஏனையோர் மலேரியா, வயிற்றோட்டம், பட்டினி, போன்ற கொடிய நோய்களால் மரணித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

1870ம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரதம மருத்துவப் பரிசோதகரின் அறிக்கையில் நாட்டில் சுகவீனமுற்று காணப்படுவோர் 8% மாகக் காணப்பட தோட்டத்துறையில் அது 20.5% மாக காணப்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். 1890ம் ஆண்டின் மருத்துவ அறிக்கை, தோட்டத்துறையில் மரண வீதம் 20.0% மாக காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

இந்நிலைமைகளின் விளைவாகவே தோட்டத் தொழிலாளருக்கான மருத்துவ வசதிச் சட்டம் சேர் வில்லியம் கிரகரியினால் பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், 100 ஆண்டுகளின் பின்பும், 1993ம் ஆண்டு வெளியிடப்பட்ட குடும்பநல சுகாதார ஆய்வு அறிக்கையில் 1983 - 1993 வரையான 10 ஆண்டு காலப்பகுதியில் தோட்டத் துறையில், பிறப்பின் முன்னரான மரணவீதம் 42% மாகவும், பிறப்பின் பின்னரான மரணவீதம் 18.67% மாகவும், சிசுமரணவீதம் 60.6%மாகவும், சிறுவர் மரண வீதம் 25.3% மாகவும், 5 வயதுக்கு கீழ் மரணிப்பது 84.4% மாகவும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமையானது மூன்றாம் உலகிலேயே மிகப் பாரதூரமான சுகாதார நிலையாகும் என்பதோடு நகர, கிராம மட்டங்களுடன் ஒப்பிடுகையில் மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமானதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிரசவத்தின் முன்னர் வைத்தியரும் தாதியரும் கவனிக்கும் நிலை 52.6% தோட்டப்பெண்களுக்கே கிடைக்கின்றது. நகரங்களில் 67.8% மானோருக்கும், கிராமங்களில் 85.6% மானோருக்கும், கொழும்பு மாநகரில் 66% மானோருக்கும் முறையான வைத்தியர், தாதியர் சேவை ஒருங்கே கிடைக்கின்றது.

நாட்டில் கிராமிய தாய்மாரில் 91.6% த்தினருக்கு அரச பிரசவ விடுதிகளிலும், தோட்டத் தாய்மாருக்கு 70%மும் பிரசவ விடுதிகளில் பிரசவம் நடக்கிறது. தோட்டப்பெண்களில் 29.8% மானோர் தமது சிசுவை வீட்டிலேயே எவ்விதமான மருத்துவ சுகாதார கவனிப்புமற்ற நிலையில் பிரசவிக்கின்றனர்.

பிறப்பின் போது 32.2% தோட்டத் தாய்மாருக்கு வைத்தியர்களும், 38.1% தோட்ட தாய்மாருக்கு அரச தாதியரும், 13.%த்தினருக்கு உறவினரும் உதவுகின்றனர். ஆனால் கிராம, நகர மட்டத்தில் இது 77.2% மாயும், 49.1% மாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கொலராவினால் (வயிற்றோட்டம்) மரணிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையும், தோட்டப் பகுதியிலேயே அதிகமானதாகும். அதேவேளை, வயிற்றோட்டம் கண்ட சிறுவர்களில் பெரும்பங்கினர் தோட்டத்துறையில் சிகிச்சை பெறுவதில்லை. பிள்ளை பிறப்பின் போது சராசரி நிலையினை 29%மான தோட்டப்புற சிசுக்கள் கொண்டிருப்பதில்லை.

ஆனால் 44.4% தோட்டத்துறை தாய்மாருக்கு நிரந்தரமான கருத்தடைச் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, கொழும்பு மாநகர பகுதிகளில் 21.5%க்கும், நகரப்பகுதிகளில் 20.8%க்கும், கிராமியப் பகுதிகளில் 27.6%க்கும் மட்டுமே நிரந்தர கருத்தடை செய்யப்பட்டுள்ளது என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும்.



2

நடைமுறையில் தற்பொழுது நாட்டின் சிசுமரண வீதம், தாய்மரணவீதம் என்பன மூன்றாம் உலக நாடுகளிலேயே மிக கீழ்த்தரமட்டத்தில் இருக்கின்றது.

தோட்டத்துறையில் காணப்படுகின்ற வைத்தியசாலைகளில் குறிப்பாக, அக்கரைப்பத்தனை, கொட்டகலை, டிக்கோயா, வட்டவளை, மஸ்கெலிய, பொர்கவந்தலாவ போன்ற தனியே தோட்டத்துறைத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் போதிய வைத்தியர்களோ, வைத்திய உபகரணங்களோ, பரிசோதனை வசதிகளோ, நிபுணத்துவ சேவைகளோ கிடைப்பதில்லை என்பதும், சிறுநீர் பரிசோதனை, இரத்தப் பரிசோதனைக்குக் கூட நுவரெலியா, நாவலப்பிட்டி, கண்டி வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பதும் டிக்கோயா சிவனேசன், கிளினிக், ஊசைன் கிளினிக், அட்டன் வைரவநாதன் கிளினிக், மாரி கிளினிக், தலவாக்கலை அப்துல்லா கிளினிக், நாவலப்பிட்டி அபேகுணவர்தனா ஆகியோரும், பொகவந்தலாவை நல்லசேகரம் கிளினிக்கும் இப்பிரதேசங்களில் பிரசித்தி பெற்றுள்ள தனியார் துறை வைத்திய நிலையங்களாகும். இவர்கள் கண்டி, நாவலப்பிட்டி, நுவரெலியா வைத்தியசாலைகளில் உள்ள வைத்திய நிபுணர்களையும் அழைத்து தமது வாடிக்கையாளர்களுக்கு நிபுணத்துவ சேவையை வழங்கி வருகின்றனர். மலையகத் தமிழ் மக்கள் இவர்களை நாடக் காரணம் யாதெனில், இனவெறியும், திமிர்தனமும், வக்கிர உணர்வும் கொண்ட அரசாங்க வைத்தியர்களைவிட பணத்தை அதிகம் இழந்தாலும் திருப்திகரமான சேவை கிடைக்கின்றது என்பதனாலேயாகும்.

மேலும், அட்டன், கொட்டகலை, தலவாக்கலை, டிக்கோயா போன்ற பகுதிகளில் இயங்கும் பல கிளினிக்குகள் பிரசித்தமான சட்டவிரோத கருகலைப்பு மையங்களாக இயங்கி வருவதன் மூலம் மலையகத் தமிழரைக் கருவறுத்து வருவதோடு அபாயகரமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

அண்மையில் கொட்டகலையில் கருக்கலைப்பு செய்து கொண்ட ஒரு ஆசிரியை மிக மோசமாக சுகவீனமுற்று மரணத்தறுவாயில் நுவரெலியா அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பொகவந்தலாவில் ஆலோசனை பெற்ற ஒரு ஆசிரியை தனது பிரசவத்தின் போது அபாயகரமான நிலையில் மரணமுற்ற சிசுவை, சத்திரசிகிச்சை மூலம் வெளியேற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருக்கிறார். இந்த சட்ட விரோத கருக்கலைப்பு மையங்கள் பகிரங்கமாக இயங்கி வந்த போதும் அது குறித்து எவரும் அலட்டிக் கொள்வதாக இல்லை. மேலும் இவர்கள் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவிகளுக்கும், டியூட்டரி மாணவிகளுக்கும், இளம் ஆசிரியைகள்,, கருவளமுள்ள இளம் பெண்களுக்கும் அபாயகரமான கருக்கலைப்பு செய்கின்றனர்.

பொகவந்தலாவ டிக்கோயா அரச வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் வைத்தியசாலை விடுதியிலேயே தனிப்பட்ட வைத்திய சிகிச்சையளித்து பெறும் பணத்தை அறவிட்டுவருகின்றனர். அம்பகமுவ பிரதேச சபையில் தமிழ் உறுப்பினர் ஒருவர் பொகவந்தலாவ வைத்தியசாலையில் கடமையாற்றி ஒரு அடாவடித்தனமான பெண் அதிகாரியை சாடிப் பேசியதற்காக பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட அவரது மனைவியை மிகமோசமாக நடத்தியுள்ளார் இதனை எதிர்த்துக் கேட்ட கணவரை பொலிஸ் பொறுப்பதிகாரி மிரட்டியதோடு வைத்தியசாலை ஊழியர்கள் பகிஷ்கரித்தும் சுவரொட்டிகள் ஒட்டியும் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

டிக்கோயா வைத்தியசாலை வைத்தியர்களும், மாவட்ட வைத்திய அதிகாரியும் தமது கிளினிக்குகளுக்கு வாடிக்கையாளரை திரட்ட மட்டுமே வைத்தியசாலையைப் பயன்படுத்துகின்றனர் என்று குற்றம் சாட்டுகின்றனர் நோயாளிகள். அவசர தேவைகள், அபாயகரமான நிலைமைகளில் தேடும் போது ஒரு வைத்தியரும் கிடைப்பதில்லை. மேலும் தாதியரும், வைத்திய அதிகாரிகளும் மிகமோசமாக நோயாளரை ஏசுதல், தாக்குதல் என்பனவற்றையும் மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

மழைவளம் மிக்க மலை நாட்டில் டிக்கோயா, பொகவந்தலாவ, மஸ்கெலியா வைத்தியசாலைகள் நீர் இல்லை என்ற காரணத்தால் வார்டுகள் மூடப்படுவதும், பிரேத பரிசோதனைக்கு கூட நுவரெலியா, நாவலப்பிட்டிக்கு செல்ல வேண்டியுள்ளதும், விடுமுறை தினங்களில் திடீர் மரணவிசாரணை அதிகாரி வருகைதர மறுப்பதும், பொலிசாரின் இனவெறி போக்குகளும் இப் பிரதேசத்தை மரணங்கள் மலிந்த பூமியாக மாற்றி வருகின்றது.

மலையகத் தமிழ் மக்கள் வைத்தியர்கள், தாதியர்களை மட்டுமல்ல வாட் கங்காணிகளைக் கூட பணம் கொடுத்து தாஜா பண்ண வேண்டியுள்ளது. கணவனும், மனைவியும் வைத்தியசாலைச் சிற்றூழியராகவுள்ள டிக்கோயா அரசாங்க வைத்தியசாலையில் கொதித்தாறிய நீர் நோயாளிகளுக்குக்கூட கிடைப்பதில்லை. ஏனெனில், இவர்களது தேனீர் கடையில் கொதித்தாறிய நீர் போத்தல் 5/=-10/= ரூபாவுக்கு விற்கப்படுகிறது, பெரும்பான்மையான வைத்தியசாலை ஊழியர்கள் இனவாதத்துடன் கடமைபுரிவதைக் காணமுடிகிறது. தமிழ் நோயாளிகள் பாடு திண்டாட்டம் தான்.


→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜே.வி.பி: மீண்டும் வேட்டையாடப்படுமா?



-ஜென்னி

'இம்முறை எமது கட்சி தடை செய்யப்பட்டால், ஐ.நா.சபை காரியாலயத்தின் முன் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளுவோம்...! மீண்டுமொரு முறை நாங்கள் இரத்தம் சிந்தத் தயாரில்லை. நாங்கள் ஜனநாயக வழியிலேயே தொடர்ந்தும் செயற்படுவோம். தற்போது எங்கள் மூலோபாயம், தந்திரோபாயம் அனைத்தையும் மாற்றியுள்ளோம்!..."

இவ்வாறு கடந்த மே தினக் கூட்டத்திற்கு ஜே.வி.பி.யின் தலைவர் சோமவங்ச அமரசிங்க அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜே.வி.பி.யின் மீது மீண்டும் ஒரு பாரிய அடக்குமுறையொன்றை மேற்கொள்ளும் முயற்சிகளில் பொ.ஐ.மு. அரசாங்கம் பதவியில் அமர்ந்ததிலிருந்து மேற்கொண்டு வருவது தெரிந்ததே. அரசாங்கத்தால் ஜே.வி.பி. இயக்கத்தின் மீது வன்முறையைத் தூண்டுவதும், நாட்டில் நிலவும் பல்வேறு வன்முறை நடவடிக்கைகளை ஜே.வி.பி.யின் மீது பழி சுமத்துவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்ற மாதம் ஜனாதிபதி சந்திரிகாவின் உரையொன்றில் "ரோகண விஜேவீரவின் ஆவி இன்னமும் உலவுகிறது. ஜே.வி.பி. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இனித் தடை செய்ய நேரிடும்" என எச்சரித்திருந்தார். அவரது அவ்வுரை ஆற்றப்பட்டு இரண்டு நாட்களுக்குப் பின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த "ஜே.வி.பி. மீண்டும் நாட்டில் பல தீய செயல்களில் ஈடுபட்டு வருகிறது. எனவே அரசாங்கம் கடுமையான நடவடிக்கையில் இறங்க நேரிடும்" என மிரட்டியிருந்தார். (இதற்கு முன்னரும் பதவிக்கு வந்து சில மாதங்களில் "ஜே.வி.பி. மீண்டும் எமக்கு பிரச்சினையை அளிக்குமென்றால் அதற்குத் தகுந்த மருந்து எம்மிடமுண்டு எனப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த மிரட்டியிருந்தது பற்றி சரிநிகரில் அப்போது வெளியிடப்பட்டிருந்தது)

இந்த மிரட்டல்கள் அலட்சியப்படுத்தக் கூடியவை அல்ல. ஜே.வி.பி.யின் துரித வளர்ச்சி, அது தொடர்ந்து தேர்தல்களில் பெற்றுவரும் வெற்றிகள், அதன் மீதான மக்கள் செல்வாக்கு, தொடர்ச்சியாக இணைந்து வரும் அர்ப்பணிப்பு மிக்க இளைஞர்களின் சேர்ப்பு மற்றும் அரசாங்கத்தின் போலித்தன்மைகளையும், மக்கள் விரோத செயற்பாடுகளையும் அம்பலப்படுத்துவதில் அது கண்டு வருகின்ற வெற்றிகள் என்பனவற்றை ஒரு முதலாளித்துவ அரசாங்கம் என்ற வகையில் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும். இன்று ஜே.வி.பி. இயக்கமானது ஆளுங் கட்சியின் முக்கிய எதிரியாக ஆகியிருக்கிறதென்றால் அது மிகையில்லை என்றே கூறலாம். நாட்டில் இன்று பிரதான இடதுசாரிக் கட்சியாகவும் ஜே.வி.பி. ஆகிவிட்டுள்ளது என்பதை அண்மைய அதன் தன்மைகள் வெளிக்காட்டியுள்ளன. எனவே தான் அரசாங்கம் ஜே.வி.பி.யைத் தடை செய்வதில் எடுத்து வரும் பிரயத்தனங்கள் அதிகம் எனலாம். ஏதாவது ஒரு சிறு ஆதாரமேனும் ஜே.வி.பி. ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் கிடைத்தாலும் அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அழிப்பு நடவடிக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாக தொடரலாம் எனக் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு பிடி கொடுக்காத வகையில் ஜே.வி.பி.யும் தமது செயற்பாடுகளை மிகவும் கவனமாக மேற்கொண்டு வருகிறது. அதன் பிரதிபலிப்புகள் தான் "மீண்டுமொரு முறை இரத்தம் சிந்த மாட்டோம்...", "நாங்கள் ஜனநாயக ரீதியில் செயற்படுபவர்கள்...", "சாகும் வரை உண்ணாவிரதம் இருப்போம்" என்பது போன்ற பிரச்சாரங்கள். ஆனால் இவ்வுரைகளுக்கு அரசாங்கம் மசியப் போவதில்லை என்பது மட்டும் உறுதி. அரசாங்கம் திடமாகவே வேட்டையாடத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை. ஜே.வி.பி. ஆளும் பொ.ஐ.மு.வுக்கு ஆபத்தானதென்பதை எப்போது உணர்ந்தது? எப்போதிருந்து ஜே.வி.பி.க்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியது? என்பதைப் பார்ப்போம்.

## அரசாங்கத்தின் முதல் எதிரி?

1994 பொதுத் தேர்தலில் ஜே.வி.பி.யும் ஈடுபடுமென்று பொது ஜன ஐக்கிய முன்னணி நம்பியிருக்கவில்லை. 1993 மாகாண சபைத் தேர்தலின் போது கூட ஜே.வி.பி.யின் பெயரைச் சொல்லி வாக்கு வேட்டையாடியதும் இந்த சந்திரிகா தான். அத்தேர்தலின் போது ஜே.வி.பி.யை அழிக்க ஐ.தே.க. செயற்பட்ட விதம் குறித்து பிரச்சாரம் செய்த அதே வேளை எஞ்சிய ஜே.வி.பி.யினரும், அதன் ஆதரவாளர்களும், பெற்றோர்களும் தம்முடனேயே இருப்பதாகக் காட்டிக் கொண்டார். அது வரை காலம் தலைமறைவாகவும், அழிக்கப்பட்ட நிலையிலும் இருந்த ஜே.வி.பி.யினர் மீண்டும் வெளிவந்து அமைப்பை மீண்டும் கட்டியெழுப்பினர். தொடர்ந்து நிலைப்பதற்குத் தேர்தலை சாதகமாக்கிக் கொள்ள முடிவுசெய்து 1994 ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் பங்குகொண்டனர்.

ஐ.தே.க. விரோத சக்திகளையும், இடதுசாரி சக்திகளையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு இடதுசாரி வாக்குகளைப் பெறும் நோக்குடன் பொ.ஐ.மு. செயற்பட்டு வந்தவேளை, ஜே.வி.பி.யின் வருகையானது கலக்கத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக முதலாவது எதிர்ப்பையும், பழி சுமத்தலையும் ஏற்படுத்தத் தொடங்கியது. ஜே.வி.பி.யின் வருகை ஐ.தே.க.வுக்கு கிடைக்கும் வாக்குகளைக் குறைக்கப் போவதில்லை. நிச்சயமாகப் பொ.ஐ.மு.வுக்குக் கிடைக்கப் போகும் வாக்குகளைத் தான் பாதிக்கும் என்று நம்பியது. தேர்தலின் போது ஜே.வி.பி.யை ஐ.தே.க.வே ஏற்பாடு செய்தது என சந்திரிகாவால் பகிரங்கக் கூட்டங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

பதவிக்கு வந்து இரு மாதங்களுக்குள் (ஒக்டோபர் மாதம்) "பியகம" சுதந்திர வர்த்தக வலையத்தில் உள்ள "என்சல் லங்கா" தொழிற்சாலைத் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தம் அரசாங்கத்துக்குப் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியது. இவ்வேலை நிறுத்தம் ஜே.வி.பி.யின் சதி என 95 நவம்பர் 12ம் திகதி ரூபவாஹினியில் உரையாற்றிய சந்திரிகா குற்றஞ் சாட்டினார். இவ்வேலை நிறுத்தத்தை பொலிஸாரை ஏவிப் படுபயங்கரமாக ஒடுக்கியிருந்தது. சந்திரிகாவின் அவ்வுரையில் "இந்த ஊர்வலத்தில் முன்னர் பாராளுமன்றத்துக்கு குண்டு வீசிய சம்பவத்திற்குப் பொறுப்பான அஜித் குமாரவும் இருந்துள்ளார். எனவே இது ஜே.வி.பி.யின் சதியே." என்றார். ஆனால் உண்மையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த அஜித்குமார என்பவரின் பெயரும் அஜித் குமார என்றாலும் அவர் ஜே.வி.பி. அஜித்குமார அல்ல.

இந்த விடயத்தை அடுத்தடுத்த நாட்களில் சிங்களப் பத்திரிகைகளும் குறிப்பிட்டுச் சாடியிருந்தன. ஜனாதிபதிக்குக் கிடைக்கின்ற புலனாய்வு அறிக்கைகள் இப்படி உண்மைக்குப் புறம்பானவை தானா எனக் கேள்வி எழுப்பியிருந்தன அப் பத்திரிகைகள். எனவே ஜே.வி.பி.யின் மீது குற்றஞ்சாட்டுவதிலேயே முழுக் கவனத்தையும் குவித்திருந்தார் என்பது தெளிவு.

இது நடந்த அடுத்த மாதம் நவம்பர் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பி., நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதற்காகவே தாம் அத்தேர்தலில் போட்டியிடுவதாகவும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதாக சந்திரிகா உறுதியாக தமக்கு வாக்குறுதி அளித்தால் தாம் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாகவும், முடிந்தால் இந்தச் சவாலை ஏற்கும்படியும் அறைகூவியது. இதனைத் தொடர்ந்து நிறைவேற்று ஜனாதிபதிமுறையை நீக்குவதாக ஏற்கெனவே உறுதியளித்திருந்த சந்திரிகாவுக்கு இந்தச் சவாலை ஏற்க வேண்டி வந்தது. அதன் விளைவாக "1995 யூன் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதாக" அறிவித்தார். அனால் அவ்வாக்குறுதி இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. பொ.ஐ.மு.வுடன் கூட்டுச்சேர்ந்திருந்த 10 கட்சிகளும் கூட இம்முறையை நீக்குகின்ற உறுதியைச் சந்திரிகாவிடமிருந்து பெற்றுக்கொண்டாலும் கூட இன்று வரை அவ்வாறு நீக்கப்படாதது குறித்துக் கண்டித்து வரும் ஒரே கட்சியாக ஜே.வி.பி. மட்டும் தான் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் ஜூன் 15ஆம் திகதியன்று வாக்குறுதி மீறப்பட்டு முதலாவது வருடம், இரண்டாவது, வருடம் என அதனை நினைவு கூருமுகமாக ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்களை நடாத்தி வருகிறது.

இவை மட்டுமன்றி அமெரிக்காவின் குரல் ஒலிபரப்பு நிலையத்துக்கு எதிராகக் கடுமையான ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்த சந்திரிகா பதவிக்கு வந்ததன் பின் அவ் ஒலிபரப்பு நிலையத்துக்கு மேலதிகமாகக் காணிகளை அளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கெதிராக "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" வின் அருகில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட போது அதுவும் ஜே.வி.பி.யின் மீது பழி போடப்பட்டதுடன் அவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒரு மீனவரைப் பொலிஸாரைக் கொண்டு சுட்டுக் கொன்றது.

நுரைச்சோலை அணுமின் நிலையத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதும் அதற்கெதிராகத் துப்பாக்கி சூடு நடத்தி ஒருவரைக் கொன்றது சந்திரிகா அரசாங்கம். இந்த எதிர்ப்பியக்கத்துக்குப் பின்னால் ஜே.வி.பி.யே செயற்படுவதாக பழி சுமத்தப்பட்டது. அதன் பின்னர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், களனி நுண்கலைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட நாட்டில் நடந்த பல மாணவர் போராட்டங்களின் போதும் அவற்றைக் கடுமையான முறையில் கண்ணீர்ப்புகை எறிந்தும், அடித்தும், அவர்களைச் சிறை செய்தும் கைது செய்த போது ஜே.வி.பி.யே இவ்வளவையும் தூண்டி விட்டதாகக் குற்றஞ்சாட்டியது. குறிப்பாகப் புதிய கல்விச் சீர்திருத்தத்தினை எதிர்த்து எதிர்ப்பியக்கங்கள் செயற்பட்ட போது அதனையும் ஜே.வி.பி.யின் மீதே பழியைப் போட்டது.

நாட்டில் நடந்த பல்வேறு தொழிலாளர் போராட்டங்களின் போதும் ஜே.வி.பி.யின் மீது தான் பழி சுமத்தப்பட்டன. 1996ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மின்சார சபை ஊழியர்களின் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தின் போதும் இது புலிகளும், ஐ.தே.கவும், ஜே.வி.பி.யும் சேர்ந்து செய்யும் சதியென அரசாங்கம் பிரச்சாரம் செய்தது. இன்றைய தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வரை இது தான் நீடித்திருந்தது.

உண்மையில் இப்போராட்டங்களின் பின்னால் ஜே.வி.பி. இல்லாமல் இல்லை. ஆனால் இதில் எந்தப் போராட்டம் மக்கள் விரோதப் போராட்டங்களாக இருக்க முடியும்? இதில் எந்தப் போராட்டம் நியாயமற்ற போராட்டங்களாக இருக்க முடியும்? பொறுப்பான அரசாங்கம் செய்யாததைப் பொறுப்பான மக்கள் இயக்கம் சுட்டிக் காட்டுவதும், கண்டிப்பதும், எதிர்ப்பதும் எப்படிச் சதி முயற்சியாகும்?

ஆனால், சதிமுயற்சி என்ற குற்றத்தைச் சுமத்தி ஜே.வி.பி.யின் செயற்பாடுகளை நிறுத்துவதற்குச் செய்த முயற்சிகள் எல்லாமே பயனளிக்காமல் போகவே, வெளிநாடுகளில் ஆயுதப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது, விடுதலைப் புலிகளுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக அடிக்கடி குற்றஞ்சாட்டி வந்தது. நாட்டில் இடம்பெற்று வரும் பல கொள்ளைச் சம்பவங்களுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் தொடர்பிருப்பதாகக் கூறி வந்தது. ஜே.வி.பி. உறுப்பினர்கள்மீதும், அதன் ஆதரவாளர்கள்மீதும் அரசாங்கம் ஆங்காங்கு ஆளுங்கட்சியினரைக் கொண்டு அடிதடிகளை நடத்தி வந்தது. கடந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலின் போது ஜே.வி.பி.யினரின் மீது அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்ட நூற்றுக்கணக்கான தாக்குதல் சம்பவங்கள் பற்றிப் பத்திரிகைச் செய்திகளும் தேர்தல் நிலவரக் கண்காணிப்பு அறிக்கைகளும், புட்டுப், புட்டு வைத்திருந்தன. இதன் உச்சக் கட்டமாகக் கடந்த மார்ச் மாதம் 08ஆம் திகதியன்று பொ.ஐ.மு அரசாங்கத்தின் அமைச்சரான மைத்திரிபால சிறிசேனவின் செயலாளர் தர்மசிறி என்பவர் அரலகங்கவெல எனும் இடத்தில் வசித்து வந்த ஜே.வி.பி. உறுப்பினர் தசநாயக்கவைக் கடத்திச் சென்று கொன்று போட்ட விடயம் முக்கியானது. இச்சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் பொலிஸில் பதிவு செய்யப்பட்ட போதும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## முன்னைய அனுபவங்கள்

ஜே.வி.பி.யின் வளர்ச்சியையும், தமது அரசாங்கத்தைப் பற்றிய அம்பலப்படுத்தல்களையும் ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்காத அரசாங்கங்கள், ஒவ்வொரு தடவையும் பாரிய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து வந்தது ஒன்றும் புதிய விடயமல்ல. 1971இல் ஜே.வி.பி.யின் வளர்ச்சியைப் பொறுக்காத சிறிமா அரசாங்கம் பாரிய அடக்குமுறையைக் கையாண்டு 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கொன்று குவித்தது. 1977இல் கட்சி மீளப் புனரமைக்கப்பட்டது. சிறையிலிருந்து வெளியே வந்த ஜே.வி.பி.யினர் 1977 பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்டனர். 1978இல் கொண்டுவரப்பட்ட அரசியல் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள், 1979ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் ஜே.வி.பி.க்கும் எதிராக பாவிக்கப்பட்டது. 80ஆம் ஆண்டு வேலைநிறுத்தத்தில் ஜே.வி.பி. ஈடுபடாத போதும் அப் பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்துடன் ஜே.வி.பி.யும் தொடர்புபடுத்தப்பட்டு ஜே.வி.பி.இளைஞர்களும் தேடப்பட்டார்கள். 1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் போட்டியிட்டு பல பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக்கொண்டது. 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.யின் தலைவர் ரோகண விஜேவீர போட்டியிட்டு மூன்றாவதாக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருந்தார். (அத்தேர்தலில் மொத்தம் ஆறு பேர் போட்டியிட்டிருந்தனர்.) 1982ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பினைக் கடுமையாக எதிர்த்து பிரச்சாரம் செய்தது ஜே.வி.பி. அது ஜனநாயக விரோதச் செயற்பாடென ஜே.ஆர் அரசாங்கத்திற்கெதிராக வழக்கும் தொடுத்திருந்தது. 1983ஆம் ஆண்டு மே தின ஊர்வலமும், பிரமாண்டமான கூட்டமும் அப்போதைய ஜே.வி.பி.யின் பலத்தை நிரூபித்தது. இந்த மே தினத்திற்குப் பின்பு தான் ஜே.ஆர் "இன்று அரசாங்கத்தின் பிரதான எதிரி ஜே.வி.பி.யே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசியல்ல. விஜேவீர மீண்டும் கற்குகைகளை தேடிக்கொள்ள நேரிடும்" எனப் பகிரங்கமாக உரையாற்றியிருந்தார். அது போலவே நடந்தது. இதனைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு இனக்கலவத்தைத் தலைமை தாங்கி நடத்திய ஜே.ஆர் அரசாங்கம் அதற்கான பழியை ஜே.வி.பி., நவ சம சமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றின் மீது சுமத்தி அவற்றைத் தடை செய்தது. சிறிது காலத்தில் அரசாங்கம் ஜே.வி.பி. தவிர்ந்த ஏனைய இரு கட்சிகள் மீதான தடைகளையும் நீக்கியது. ஜே.வி.பி. தலைமறைவு அரசியலுக்குத் தள்ளப்பட்டது. அதன் மீதான கெடுபிடிகள் அதிகரிக்க, அதிகரிக்க ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது. மீண்டுமொரு அடக்குமுறையை அரசாங்கம் இலகுவாக நடத்தி லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கொன்று குவித்தது.

இப்படிக் கடந்த காலங்களில் கூட ஜே.வி.பி.யின் வளர்ச்சியை ஒரு கட்டத்திற்கு மேல் விடாத அரசாங்கம், அதனை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது தான் கடந்த கால வரலாறு. இன்றைய ஜே.வி.பி.யின் வளர்ச்சியும் மறு பக்கம் அரசின் அணுகுமுறைகளும் பழைய வரலாற்றை நினைவுபடுத்துகின்ற வகையிலேயே அமைந்துள்ளன. இந்த நிலையில் ஜே.வி.பி.யின் அணுகுமுறைகள் தான் முக்கியமானது.

## ஜே.வி.பி.யின் எதிர் நடவடிக்கைகள்

கடந்த காலங்களில் ஜே.வி.பி. தமது ஆயுத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குச் சாதகமான காரணியாக கருதி வந்த ஒன்று தான் நாட்டில் மக்கள் முகம் கொடுத்து வந்த பல்வேறு நெருக்கடிகள். இந்த நெருக்கடிகள் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான வெறுப்பை ஏற்படுத்தியிருக்கும் என்று நம்பியது. (அதில் தீவிர வெறுப்பையுடையோரைக் கட்சி அரவணைத்துக் கொண்டது.) ஆயுத நடவடிக்கைகளுக்குச் சாதகமானது என நம்பியிருந்தது. ஆனால் இன்று அவற்றிலிருந்து பாரிய படிப்பினைகளைப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. அண்மையில் ஒருவர் இப்படி விமர்சிக்கின்றார்.

மக்கள் வெறுமனே வெறுப்புணர்வு பெற்றிருந்தால் மட்டும் போதாது. அந்த அரசாங்க விரோத நிலைப்பாட்டை, ஒட்டு மொத்த அரச விரோதமாக ஆக்குகின்ற வகையில் அவர்கள் அரசியலூட்டியிருக்க வேண்டும்.

வெறுமனே புறச்சூழலை நம்பி மாத்திரம் இவை சாத்தியமில்லை. அதற்குரிய அகத் தயாரிப்பு இருந்திருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஒரு குழுவாக இயங்கி வந்திருக்கிறதே தவிர ஒரு மக்கள் இயக்கமாகக் கட்டப்படவில்லை. மக்களிடமிருந்து தனிமைப்பட்ட கட்சியாக இருந்திருக்கிறது. மக்களை அரசியலூட்டி அவர்களைக் கொண்டு ஒரு மக்கள் இயக்கமாக ஆக்கியிருக்க வேண்டும்.

வெகுஜன இயக்கங்களில் போதுமான ஈடுபாடு இருந்தது கிடையாது. கட்சி தடை செய்யப்பட்ட நிலையில், ஜனநாயகக் கோரிக்கைகளுக்கூடாக கட்சிக்கு அதரவாகச் செயற்படக்கூடிய போதுமான செயற்பாடுகள் இல்லாமைக்கு வெகுஜன இயக்கங்களின்மையே காரணம்.

இவ்விமர்சனங்களைக் கண்டு கொண்டதைப் போல, ஜே.வி.பி.யும் வெகுஜன இயக்கங்கள் பலவற்றைக் கட்டிக் கொண்டு இருப்பதைக் காணக்கூடியதாக

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது ஒரு அலசல்

# மனித வாழ்வென்பது எப்பவோ முடிந்த காரியமா?

''இன்றைய உளவியல் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''இன்றைய உளவியல் படுவேகமாக முன்னேறியுள்ளது''

''என்ன ரீதியில் அப்படிச் சொல்கிறாய்?''

''அதாவது மனிதன் மட்டும் தான் சிந்திப்பவன் என்றிருந்த மாயை உடைந்துள்ளது. மனிதன் மட்டுமல்ல ஏனைய விலங்குகள், பறவைகள், ஏன் மரங்கள் கூட சிந்திக்கின்றன என்ற உண்மையை இன்று உளவியல் ஆய்வுகள் வெளியிட்டுள்ளன. முன்னர் பூமியே இப்பிரபஞ்சத்தின் மையம் என்று மனிதன் கற்பனை பண்ணியிருந்த மாயைக்கு விழுந்த அடிபோலவே, மனிதன் தான் சிந்திப்பவன் என்றிருந்த மாயைக்கு உளவியல் ஆய்வுகள் அடிகொடுத்துள்ளன.

''இதைக் கொஞ்சம் விளக்குவாயா?''

பவ்லோவ் என்ற ரஷ்ஷிய உளவியல் ஆய்வாளன் மனிதனையும் ஒரு யந்திரம் என்றுதான் நிரூபிக்க முயன்றான். பவ்லோவின் 'நாயும் மணி அடித்தலும்' மிகப்பிரபலமான ஆய்வாகும். அதாவது பவ்லோ ஒரு நாய்க்கு குறிப்பிட்ட ஒரு நேரத்தில் உணவு கொடுத்துப் பழக்கினான். அப்படி அவன் உணவு கொடுக்கும் ஒவ்வொரு சமயமும் சாப்பாட்டுக்கு மணி அடிப்பதுபோல் மணி அடித்தான். இப்படி நாய் பழக்கப்பட்டதன் பின்னர், சாப்பாடு கொடுக்காமலே வெறுமனே மணியை மட்டும் அடித்தான். நாய் மணி ஓசையைக் கேட்டதுமே (சாப்பாடு கொடுக்கப்படாவிட்டாலும்) உமிழ்நீரைச் சிந்தத் தொடங்கியது. இதிலிருந்து அவன், மனிதன் என்பவனும் இவ்வாறே பழக்கப்பட்ட இயல்பூக்கங்களுக்கேற்ப இயந்திர கதியில் இயங்குகிறான் என்று நிரூபிக்க முயன்றான். அதாவது சாப்பாடு இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிய சிந்தனையின்றி, மணி ஓசையின் பழக்கத்தால் நாய் இயங்கியது போலவே மனிதனும் வெறும் இயல்பூக்கங்களாலும், பழக்கதோஷத்தாலும் இயக்கப்படுபவன் அவனும் ஒரு யந்திரம் என்பதே இது.

அனுபவிப்பதற்காகவே வாழ்கின்றன. இந்த ஆனந்த வாழ்க்கைக்கு அவனது சிந்தனை உதவுகிறதா என்பதே கேள்வி. விண்வெளி மட்டும் தனது சிந்தனையை உயர்த்திச் செல்லும் மனிதன் கடைசியில் விரக்தியில் தான் வீழ்கிறான். தற்கொலை புரிந்து கொள்ளவே முயல்கிறான். இதுதான் இன்றைய மேற்குலகச் சிந்தனையின் பலனாக வெளி வருகிறது. இதைவிட சிந்தனைக் 'குறை'வான பறவைகள், விலங்குகள் ஆனந்தமாக வாழ்கின்றன. அதுதான் அளவுகோல். இது பற்றி அல்டஸ் ஹஸ்லி தனது நாவல் ஒன்றில் குறிப்பிடுகிறார்.'' மனிதன் 'பெரிய' சிந்தனையாளனாக இருந்தும் விரக்தியில் வாழ்வதேன்? இது பற்றி உளவியலாளர்கள் என்ன கூறுகிறார்கள்?''

''மேற்கின் உளவியல் துறையின் மும்மூர்த்திகளாக கொள்ளப்படும் பிராய்ட், அட்லர், யுங் ஆகியோர் தமக்கு எட்டிய முறையில் ஒவ்வோர் காரணத்தைக் கூறுகின்றனர். பிராய்ட் விரக்திக்கு காரணம் பாலியல் கோளாறு என்பார். அட்லர் மனித மேலோங்கல் வேட்கைக்கு (Will to Power) நேர்ந்த தடை என்பார். இவர்களுள் யுங் மட்டும் விரக்திக்கான காரணத்தை ஒருவனின் முற்பிறப்பு வரை சென்று பார்க்கவேண்டும் என்று கூறி கீழைத்தேய விசாரங்களை நோக்கி ஓடிவந்தார். இன்று அது Para Psychology எனப்படும் பேர்உளவியல் அருகே சென்று நிற்கிறது.''

''கீழைத்தேய உளவியல் என்ன சொல்கிறது?''

''கீழைத்தேய உளவியல் சொல்வது இதுதான். தன் அடையாளத்தை வெளிப்பொருட்களில் மனிதன் காண முற்படும் ஒவ்வொரு சமயமும் அதன் போலித்தன்மை அதன் நிரந்தரமின்மை சிறிது காலத்துள் தெரியவரும்போது விரக்தி ஏற்படுகிறது. இது இறுதியில் அவனை வெளிப் பொருட்களில் இருந்து விடுவித்து உள் முகப்படுத்துகிறது.''

''இப்படிச் சொல்லும் கீழைத்தேய உளவியலாளர் யார்?''

'' இது இன்று நேற்று சொன்னதல்ல. ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே வாழ்ந்தவர்களாகக் கூறப்படும் கபிலர், பதஞ்சலி போன்றோர் வழிவந்த உளவியல்

''இது சரியா?''

''இல்லை. இந்த ஆய்வு எப்பவோ தூக்கி எறியப்பட்டு விட்டது. மனிதன் மட்டுமல்ல பறவைகள், விலங்குகள், மரங்களும் சிந்திக்கின்றன என்ற ஆய்வுகள் இப்போ வந்துவிட்டன.''

''எப்படி? கொஞ்சம் சொல்லு''

''ஒவ்வொரு இனப்பறவையும் ஒவ்வொரு பாணியில் கூடுகட்டுவது வழக்கம். பறவைகளின் சிந்தனை ஆற்றல் பற்றி அறிய முயன்ற ஆய்வாளர் ஒருவர், ஒரு இனப்பறவை தனது வழமையான பாணியில் கூடு கட்டும் முறையில் குறுக்கிட்டு தடைகள் ஏற்படுத்தினார். உடனே அப்பறவை தனது வழமையான முறையைக் கைவிட்டு புதிய முறையில் கட்டத் தொடங்கியது. இவ் ஆய்வுகள் பறவைகள் சிந்திக்கின்றன என்பதைக் காட்டின. இவ்வாறே பல ஆய்வுகள் நடாத்தப்பட்டு அவற்றின் சிந்தனைத்திறன் வெளிக் காட்டப்பட்டது. இவ் வகை ஆய்வுகளில் முக்கியமானது, மரங்களின் சிந்தனை பற்றிக் கூறுவதாகும். மனிதனின் மன எண்ணங்களையே மரங்கள் அறிந்து கொண்டு இயங்குகின்றன என்பன போன்ற கண்டுபிடிப்புக்கள் இப்போ வெளிவந்துள்ளன. இதற்கென கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளில் அவைகளின் எண்ண அலைகள், உணர்வொலிகள் பதியப்படுகின்றன.''

''அப்படியானால் மனிதனின் சிந்தனைக்கும், நீ கூறும் விலங்குகள், பறவைகள், மரங்கள் என்கின்ற அஃறிணைகளின் சிந்தனைக்கும் இடையே வித்தியாசம் இல்லையா?''

''இல்லை''

''உனக்கு பைத்தியம்! இன்றைய கணனி யுக மனித சிந்தனைக்கும் ஏனையவற்றின் சிந்தனைக்குமிடையே பாரிய இடைவெளி உண்டென்பதை சிறு குழந்தை கூடப் புரிந்து கொள்ளும், இதை மறுப்பது குதர்க்கம்.''

''உனது அளவு கோல் பிழையானது. மனிதன் உட்பட எல்லா உயிரினங்களும் சந்தோசத்தை - ஆனந்தத்தை

சிந்தனை இது. ஐயாயிரம் வருடங்களுக்கு முந்தியது. இவர்களோடு ஒப்பிடும்போது மேற்குலகு தூக்கிக்கொண்டாடும் பிராய்ட் போன்றவர்கள் மிக அற்பமானவர்களே. ஆனால் இருசாராரும் ஒரு விஷயத்தில் ஒன்றுபடுகிறார்கள்.''

''எவ்விஷயத்தில்?''

''கனவுகள் பற்றிய வியாக்கியானத்தில்''

''எப்படி?''

''ஆசைநிறைவேற்று கனவு, குறியீட்டுக்கனவு என்று வரும் கனவுகள் பற்றி மேற்கும் கிழக்கும் வெவ்வேறு விதமான வியாக்கியானங்களைக் கொண்டிருந்த போதும், எதிர்வு கூறும் கனவு விஷயத்தில் ஒரே கருத்தையே கொண்டுள்ளனர். அதாவது ஒருவன் வாழ்க்கையில் நடக்கப்போவது பற்றி முன்கூட்டியே அறிவிக்கும் கனவுகள் பற்றிய ஆய்வு அவற்றை உண்மையயென நிரூபித்துள்ளன''

''இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''இதன் அடிப்படையில் பார்த்தால், மனிதன் தான் இந்த உலகில் வந்து 'வெட்டி புடுங்குவதாகவும்', தற்புதுமை (Originalty) உடையவனாகவும், சாதனை செய்பவனாகவும் சொல்வதெல்லாம் வெற்றுத் தனமானது என்றுதான் நினைக்க வேண்டும். இவன் எப்பவோ எங்கேயோ முடிப்பு பொருளாகி (Finished Product) வந்தவன் என்று தான் சொல்ல வேண்டும்.

''எனக்கு இதைக்கேட்ட நம்ம யோகர் சுவாமி சொன்னதுதான் ஞாபகம் வருகிறது:

''என்ன சொன்னார்?''

''இதெல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' என்றார் அவர்.''

''அவர் மட்டுமல்ல எல்லா ஞானிகளும் இதைத்தான் வெவ்வேறு வார்த்தைகளில் சொல்லியுள்ளார்கள்''

சங்கமி

## 'நைகம்' கலாசார ஆக்கிரமிப்பு!

ஒரு இனத்தை அழிப்பது என்பது அதன் மக்களை மட்டும் அழிப்பதில் முற்றுப் பெற முடியாது. அவ்வினம் சார்ந்த மக்களின் கலாசார அடையாளங்கள் கலை, பண்பாட்டு வெளிப்பாடுகள் என்பனவற்றையும் சேர்த்து அழிப்பதிலும் அவ்வினம் தொடர்ச்சியாக வாழும் நிலப்பரப்புகளினை ஆக்கிரமிப்பதிலுமே இன அழிப்பு என்பது முழுமை பெறும். இந்த தத்துவார்த்தத்தை நன்கு அறிந்து வைத்துள்ள இலங்கை அரசு தமிழ் முஸ்லிம் மக்களின் மீது இன அழிப்பு யுத்தத்தை பாதுகாப்பு தரப்பின் மூலம் நடத்திக் கொண்டு இன்னொரு பக்கம் தமிழ் கலை வெளிப்பாடுகளை சிங்கள மயமாக்கி ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்டது. தொலைக்காட்சி சேவையில் தமிழ்த் தனி அலைவரிசையை தோற்றுவிக்க பணம் இல்லை என்ற அரசு செலவு அதிகமான நைகம் அலைவரிசையை தொடங்கியுள்ளது. இதன் மூலம் சிங்கள/ ஆங்கில நிகழ்ச்சிகளை விரும்பிய மொழியில் கேட்கலாம். இதனால் தமிழ் மக்களின் ''தமிழ் நிகழ்ச்சிகள் இல்லை'' என்ற குறை நீங்கும் என்கிறது அரசு. உண்மையிலேயே இதன் உள்ளர்த்தம் வேறு. சிங்கள நிகழ்ச்சிகளினூடாக வரும் சிங்கள கலை, பண்பாட்டு வடிவங்களை, வெளிப்பாட்டு முறைகளை தமிழ் மக்கள் மீது திணிக்கவே அரசு முயல்கிறது. தமிழ் நிகழ்ச்சிகள் இல்லாவிடத்து வேறு வழியின்றி சிங்கள நிகழ்ச்சியின் தமிழாக்கத்தைப் பார்க்க வேண்டிய நிலைக்கு தமிழ முஸ்லிம் மக்கள் தள்ளப்படுவர். ஏற்கெனவே தமிழ் நிகழ்ச்சி தயாரிப்பு என்பது முடங்கி கிடக்கிறது. தமிழ் நிகழ்ச்சி, நாடகம் ஒளிபரப்பும் வேளையில் சிங்களத்திலிருந்து மொழி மாற்றப்பட்ட *சீதா* நாடகம் ஒளிபரப்பாக்கப்படுகிறது. இவற்றின் தொடர்ச்சியாகத் தான் 'நைகம்' அலைவரிசை அறிமுகமாகின்றது. இது சிங்கள மக்களிற்கும், தமிழ் நிகழ்ச்சியின் போது தமிழ் கலாசாரத்தை அறிய உதவும் எனவும் சப்பைக்கட்டு கட்டுகிறது அரசு. ஆனால் தமிழ் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. அப்படி போடும் ஒரு சில நிகழ்ச்சிகளும் சிங்கள உப மொழிமாற்ற தலைப்புடனேயே வருகின்றன. உண்மையில் தமிழ் முஸ்லிம் மக்களின் பால் அக்கறை உள்ள அரசு எனில் அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் ஐ.ரி.என்னை முற்று முழுதான தமிழ் அலைவரிசையாக மாற்றிக் கொடுக்க முடியும். ஏனெனில், சிங்கள அலைவரிசைக்கு என மேலும் 4 நிறுவனங்கள் இருக்கையில் 5வது ஆக இருக்கும் ஐ.ரி.என்னை மாற்றுவது இலகு. ஆனால் தமிழ் முஸ்லிம் மக்களைக் குண்டு போட்டுக் கொல்லும் அரசிடம் இதை எதிர்ப்பார்க்க முடியாது என்பதுதான் உண்மை. மற்றதெல்லாம் முதலைக் கண்ணீரே.

## புலிகளுக்கு அரசின் உதவி

இந்த அரசு யுத்தத்தில் வெல்ல இராணுவத்திற்கு ஆட்பற்றாக் குறை என்று ஆட்களைச் சேர்க்க என்னென்ன புதிய வழிகளைக் கையாளலாம் என்று தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு இருக்கும் போது, அதன் எதிரியான புலிகளுக்கு ஆட்களை சேர்க்கத் தானே வழிகளைச் செய்து கொடுப்பதை நினைத்தால் எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லைப் போங்கள். இனிமேல் வடகிழக்கைச் சேர்ந்தவர்களின் அடையாள அட்டை, சாரதி, அனுமதிப்பத்திரம், பாஸ்போர்ட் என்பன தொலைந்து போனால் அவற்றை எடுக்கப் புதிய ஒழுங்குகளாம். அடையாள அட்டை தொலைந்து போனால் தொலைத்தவர் இருக்கும் பிரதேசத்தில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் ''கிளியரன்ஸ்'' தந்தால் தான் புது அடையாள அட்டை எடுக்கலாம். இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருக்கும் ஒரு தமிழர் தன் அடையாள அட்டையைத் தொலைத்து விட்டார் என்றால் எங்கிருந்து அந்த 'கிளியரன்ஸ்' பெறுவாராம்? இளைஞர்/ யுவதிகள் இவ்வாறு தொலைத்து விட்டால் அவர்கள் அதன்பின் அப் பிரதேசத்தில் இருந்து வெளியே வர அஞ்சுவார். நிச்சயம் அடையாள அட்டை இல்லாத காரணத்திற்காகவே வருடக் கணக்கில் சிறைக்குள் வாழ வேண்டி வரும். ஆக அவர்களுக்கு இருக்கும் ஒரே தெரிவு புலிகளில் சேருவது தான். அப்படி சேருவது மட்டுமே அவர்களை யுத்த முனையில் அல்லாது அரச படையை சந்திக்கும் வேறு வழிகளை இல்லாது செய்யும். ஆக அரசு போட்ட இந்தச் சட்டமும் யாரை எதிர்க்கப் போராடுகிறார்களோ அவர்கள் பயனடையவே வழிவகுக்கும். என்னே ஒரு புத்திசாலித்தனமான முற்போக்கான அரசாங்கம் இது. இவ்வரசு வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மக்களினை விடுவிப்பதாக அடிக்கடி சொல்லும். ஆனால் முன்னைய ஆட்சிகளில் இல்லாத அளவுக்கு அவர்களை இலக்காக வைத்து அடக்கு முறைச் சட்டங்களைக் கொண்டு வரும். எவ்வளவு சிறப்பான விடுவித்தல் இது? இந்த விடுவித்தலையும் பாராட்ட மனித உரிமைவாதிகள் இருக்கும் போது அதற்கு வேறென்ன கவலை என சொல்ககிறீர்களா... அது சரி!

## பாவம் மே தினம்

இந்நாட்டில் மே தினம் கொண்டாடும் தகுதி எந்தப் பிரதான கட்சிக்கு இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்பபோம். முதலாளி வர்க்கக் கட்சிகளான ஐ.தே.கவிற்கோ, அல்லது பொ.ஐ.மு.கடசிக்கோ... அவ்வளவு ஏன் இடதுசாரிக் கட்சிகளுக்கோ இத்தகுதி இருக்கிறதா? ஐ.தே.க். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களை எவ் எவ் வழிகளில் நசுக்கலாமோ அவ் அவ் வழிகளில் எல்லாம் நசுக்கியது. தொழிலாளர் உரிமைகளைக் கணக்கெடுக்காது தனியார் மயமாக்கலை அதிகரித்தது. அதன் பின் இத்தகைய அடக்கு முறைகளை எல்லாம் தூக்கி சாப்பிடும் அளவிற்கு தொழிலாளர்களுடன் நடந்து கொள்கிறது பொ.ஐ.மு. இச் செயல்களுக்கு அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இடதுசாரிக்கட்சிகளும் ஒத்துபாடுகின்றன. ஆக அடுத்தடுத்து வருகின்ற அரசாங்கங்களும் ஒத்து ஊதுபவர்களும் தொழிலாளர்கள் உரிமைகளை நசுக்குவதிலேயே குறியாக இருக்கும் போது இங்கு யாருக்குத் தொழிலாளர் தினம் கொண்டாடும் தகுதி இருக்கிறது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1978 அரசியலமைப்பு -( தொடர்ச்சி...)

நிர்வாகத் துறையில் யாப்பின் பிரயோகத்தின் அடுத்த பிரதான விடயம் உள்ளூராட்சிச் சபைகளை குறிப்பாக பிரதேச சபைகளை அமைத்தலாகும். இவ்வதிகாரம் யாப்பு ரீதியாக அமைச்சரவைக்குரியது. ஆனால் பாராளுமன்றச் சட்டப்படி பொது நிர்வாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருக்கு இவ்வதிகாரம் கொடுக்கப்பட்டது.

1980ம் ஆண்டுச் சட்டப்படி, பிரதேச சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பிரதேச சபைகளை அமைக்கும் அதிகாரமும் அமைச்சருக்கு வழங்கப்பட்டது. இதன்படி முன்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு இருந்த இடமெல்லாம் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன.

வடக்குக் கிழக்கில், சிங்கள குடியேற்றங்களில் அமைக்கப்பட்ட உதவி

*இவையெல்லாவற்றிற்கும் அப்பால் திருமலை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு நகர சபையான திருமலை நகர சபையைக்கூட சுயாதீனத்தோடு இயங்கவிடாமல் அரச படைகள் தடுத்து வருகின்றன. திருமலை நகர சபையால் லட்சக்கணக்கான ரூபா செலவு செய்து உருவாக்கப் பட்ட சந்தையை திறப்பதற்கு பேரினப் படைகள் இன்னமும் முட்டுக் கட்டையாக நிற்கின்றன.*

அரசாங்க அதிபர் பிரிவுகளிலெல்லாம் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டன. தேவையான இடங்களில் புதிய பிரதேச சபைகளும் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் சிங்கள குடியேற்றங்களில் சிறிய பகுதிகளில் கூட அரசியல் தலைமைத்துவம் உருவாக்கப்பட்டது. சில இடங்களில் மிகச் சிறிய மக்கள் தொகையைக் கொண்ட குடியேற்றங்களுக்கும் கூட அப்பகுதிகள் வரையறுக்கப்பட்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன.

உதாரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் கோமாரங்கடவல பிரதேச சபை 4,076 வாக்காளர்களையும், மொரவேவ பிரதேச சபை 2,242 வாக்காளர்களையும், பதவி சிறி பிரதேச சபை 7023 வாக்காளர்களையும், சேருவல பிரதேச சபை 10,981 வாக்காளர்களையும் கொண்டிருந்தது. இதேபோல் அம்பாறை மாவட்டத்தில் பதியத்தலாவ, மஹாஓயா, நாமல் ஓயா, லகுகல பிரதேச சபைகள் 10,000க்கு குறைவான வாக்காளர்களையே கொண்டிருந்தன. இவ்வாறு மிகச் சிறிய தொகையினருக்குக் கூட பிரதேச சபைகள் உருவாக்கப்பட்ட போதும், பல பிரதேசங்களில், தமிழ் மக்கள் செறிவாக இருந்தும் அவர்களுக்கென தனியான பிரதேச சபைகள் உருவாக்கப்படவில்லை. உதாரணமாக, மூதூர் பிரதேசத்தில் 25,560 தமிழ் மக்கள் வாழ்கின்ற போதும், அவர்களுக்கென ஒரு பிரதேச சபை அங்கு உருவாக்கப்படவில்லை. திருமலை மாவட்டத்திலுள்ள 10 பிரதேச சபைகளில் ஒன்று கூட தற்போது தமிழர்களுடைய பிரதேச சபையாக இல்லை. திருமலை நகரசபை மட்டும் தான் தமிழர்களுக்குரியதாக உள்ளது. அம்பாறை மாவட்டத்திலும் திருக்கோவில் ஆலையடிவேம்பு பிரதேச சபைகள் மட்டும் தமிழருக்குரிய பிரதேச சபைகளாக உள்ளன. விகிதாசாரப்படி பார்த்தால் கூட திருமலை மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சிச் சபைகளும், அம்பாறை மாவட்டத்தில் மூன்று உள்ளூராட்சிச் சபைகளும் தமிழருக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் திருமலையில் ஒன்றும், அம்பாறையில் இரண்டுமே தமிழருக்குக் கிடைத்தன. இதனை அட்டவணைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

வடக்கு கிழக்கிகு வெளியே தமிழர்களுக்கென குறிப்பாக மலையகத் தமிழர்களுக்கென பல பிரதேச சபைகளை உருவாக்கக்கூடிய நிலை இருந்தும் அரசு அதற்கென எதுவித முயற்சியும் எடுக்கவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் மலையகத் தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்டு நுவரெலியா, அம்பேகமுவ பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அங்குள்ள நகரப் பகுதிகள் தமிழர் கைகளுக்கு சென்றுவிடக் கூடாது என்பதற்காக சிங்களப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. நுவரெலியா மாநகர சபையிலும், தலவாக்கலை, ஹட்டன் நகர சபைகளிலும் இதுவே நடைபெற்றுள்ளது. 50 வருடத்திற்கு உட்பட்ட வரலாறு கொண்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு பிரதேச சபைகள் அமைக்கலாம் என்றால் 150 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட மலையகப் பிரதேசங்களுக்கு ஏன் பிரதேச சபைகளை அமைக்கக் கூடாது என்பதற்கு பேரின ஆட்சியாளரிடமிருந்து பதில் இல்லை. இங்கே தான் பேரின மயப்பட்ட நிர்வாகத் துறை தமிழ் மக்களுக்கு ஒரு மாதிரியும், சிங்கள மக்களுக்கு இன்னோர் மாதிரியும் செயற்படுவதை தெளிவாகப் பார்க்க முடிகின்றது.

இவையெல்லாவற்றிற்கும் அப்பால் திருமலை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு நகரசபையான திருமலை நகர சபையைக் கூட சுயாதீனத்தோடு இயங்க விடாமல் அரச படைகள் தடுத்து வருகின்றன. திருமலை நகர சபையால் லட்சக்கணக்கான ரூபா செலவு செய்து உருவாக்கப்பட்ட சந்தையை திறப்பதற்கு பேரினப் படைகள் இன்னமும் முட்டுக்கட்டையாக நிற்கின்றன.

**தமிழ் மக்கள் தங்களுக்குரிய யாப்பினை தாங்களே உருவாக்கிக் கொள்வதுதானா தீர்வு ?**

### தமிழ் மொழி அமுலாக்கம்

13வது திருத்தச் சட்டத்தின் மூலம், தமிழ் மொழி அரச கரும மொழியாக அமுலாக்கப்பட்ட போதும், நடைமுறையில் அதனை செயற்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இறங்கவில்லை. இதற்கென உருவாக்கப்பட்ட அரச கரும மொழி ஆணைக்குழு கூட வெறும் கண் துடைப்பாகவே உள்ளது. ஏற்கெனவே நான் கூறியது போல யாப்பில் குறிப்பிட்டதைக் கூட பேரின நிர்வாகத் துறை நடைமுறைப்படுத்துவதில் முட்டுக் கட்டையே போட்டு வருகின்றது.

தென்னிலங்கையில் அமுலாக்கம் செய்யப்படாதது ஒரு புறமிருக்க, வட கிழக்கில் கூட மந்த நிலையே காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் 62.03 வீதமாக இருந்தும் கூட அம்பாறை மாவட்ட செயலக அலுவல்கள் அனைத்தும் சிங்களத்திலேயே நடைபெறுகின்றன.

ஆனால் மறுபக்கத்தில் சிங்களக் குடியேற்றங்கள் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும், பிரதேச சபைகளிலும் சிங்கள அமுலாக்கம் எந்த வித தடையும் இல்லாமல் நடைபெறுகின்றது. தமிழ் பகுதிகளில் சிங்கள மொழி அமுலாக்கம் என்றால் துள்ளி எழுந்து எதிர்த்துச் செயல்படுகின்ற அரசும் நிர்வாகத் துறையும் தமிழ் மொழி அமுலாக்கல் என்றால் அலட்சியமாக இருந்து விடுகின்றது.

### வேலைவாய்ப்புகள்

தமிழ் மக்களுக்கான அரச வேலை வாய்ப்புகள் மிக அருகியே வருகின்றன. பிரேமதாசா காலத்தில் வேலை வாய்ப்பில் இன விகிதாசாரம் பேணப்படும் என கூறப்பட்டு, சிறிது காலம் பொது நிர்வாகத் துறையின் சில பகுதிகளில் பின்பற்றப்பட்டும் வந்தது. படைகள், வெளியுறவுத்துறை என்பவற்றில் அதுவுமில்லை. அதைவிட பதவி உயர்வுகளில் இன விகிதாசாரம் இல்லை என்றே கூறப்பட்டது.

இருப்பினும், இந்நிலை கூட நீண்ட நாள் நீடிக்கவில்லை. இப்போது மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலை தான். அண்மையில், அரச நிர்வாக சேவைக்கும், சுங்க அத்தியட்சகர் பதவிகளுக்கும் நியமனம் வழங்கப்பட்ட போதும், இவ்விகிதாசாரம் காற்றில் பறக்க விடப்பட்டது. இதில் மிக கவலைக்குரிய விடயம், பல தகைமையுள்ள இந்திய வம்சாவழியினர் நியமிக்கப்படக்கூடிய நிலை இருந்தும் ஒருவரும் தெரிவு செய்யப் படாதது தான். இதனைத் தட்டிக் கேட்க அரசை கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் தொண்டமானுக்கோ அல்லது தமிழ்க் கட்சிகளுக்கோ கூட முடியவில்லை என்பதுதான் துரதிர்ஷ்டமான விடயம்.

### வடக்குக்-கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

1990ல் வடக்குக் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் இதுவரை தேர்தல் நடக்கவில்லை. அதற்கு அரசு கூறும் காரணம் அங்கு அதற்கான சூழ்நிலை இல்லை என்பது தான். 1990க்குப் பின்னர் பாராளுமன்றத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் உள்ளூராட்சித் தேர்தலும் வடக்குக் கிழக்கில் நடாத்தலாமென்றால் ஏன் வடக்குக் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்த முடியாது.

உண்மையில் வடக்குக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை அரசு நடாத்த விரும்பவில்லை, தேர்தலை நடாத்தினால் 13வது திருத்தச் சட்டத்திலுள்ள அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க வேண்டி வரும். குறிப்பாக மாகாண பொலிஸ் சேவையை உருவாக்க வேண்டி வரும். இவற்றை வழங்காவிட்டால், வெளி அழுத்தங்களை சந்திக்க வேண்டி வரும். இவைகளை அரசு விரும்பவில்லை. இதை விட வடக்குக் கிழக்கு இணைப்பினையும், காலப் போக்கில் நிரந்தரமாக அங்கீகரிக்க வேண்டி வரும். அதனையும் விரும்பவில்லை. இதற்காகவே மாகாண சபைத் தேர்தல்களை தொடர்ச்சியாகத் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகின்றது. எதிர் வரும் ஒகஸ்ட் மாதத்தில் ஏனைய மாகாண சபைகளின் தேர்தல் நடைபெற்றாலும் வடக்குக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்தும் நோக்கம் இல்லை என அரசு ஏற்கெனவே கூறிவிட்டது. அற்ப சொற்ப அதிகாரமுள்ள மாகாண சபையைக்கூட கொடுக்க தயாரில்லை என்பதையே இது காட்டுகின்றது.

### நீதித்துறையில் யாப்பின் பிரயோகம்

தமிழர் மீதான நீதித்துறையின் சவால்களுக்கு பயங்கரவாதத் தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டமுமே துணையாக உள்ளன. சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டவர்களையும், சந்தேகத்தின் பேரில் வீதிகளில் கைது செய்யப் பட்டவர்களையும் நீண்ட நாள் சிறையில் வைத்திருப்பதற்கான அனுமதியினை நீதிமன்றங்கள் வழங்குகின்றன. பின்னர் அவர்கள் சம்பந்தமான வழக்குகளை நீண்ட நாட்களுக்கு எடுக்காமல் கிடப்பில் போடுகின்றன. சாதாரண கைதுகளுக்கும் பிணைப் பணம் ஐயாயிரம், பத்தாயிரம் என அறவிடப்படுகின்றது. பின்னர் அதனை திருப்பிக் கொடுப்பதில் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றது. சிலர் ஆறு ஏழு வருடங்கள் கழிந்த பின்னரும் கூட பிணைப்பணத்தினை பெற முடியாத நிலையில் உள்ளனர். எனக்குத் தெரிந்த நண்பன் ஒருவன் வங்கி அதிகாரியாக வேலை செய்ததற்கான பல்வேறு அடையாளங்களைக் காட்டியும் 1994ல் கண்டியில் கைது செய்யப்பட்டு இருவாரம் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் ஐயாயிரம் ரூபா பிணையில் விடப்பட்ட போதும் இன்றுவரை அப் பிணைப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வந்தவர்களிடம் புலிகளுக்கு பவுண் கொடுத்தமைக்காகவும், பங்கர் வெட்ட உதவி செய்தமைக்காகவும் கூட தண்டனை வழங்கப்படுகின்றது. அங்குள்ளவர்கள் இவற்றைக் கட்டாயம் செய்ய

**இலங்கையின் நவீன அரச உருவாக்கமென்பது சிறுபான்மையினங்களை நசுக்கி ஒடுக்கி அவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்படாத ஒரு அரசாகவே - அதுவும் குறிப்பாக ஒரு சிங்கள பௌத்த பேரினவாத அரசாகவே வளர்ச்சியுற்றிருக்கிறது.**

வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உள்ளது என்பது நீதிபதிகளுக்கு தெரிந்தும் கூட தண்டனை வழங்கப்படுகின்றது.

இதைவிட, பொலிஸார் அடித்து சித்திரவதை செய்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைக் கூட பிரதான சாட்சியமாகக் கருதி தண்டனை வழங்கும் நிலையும் உள்ளது.

உண்மையில் இது தொடர்பாக உள்ள சட்டங்களின் நிலை பற்றியும், நீதிபதிகளின் நிலை பற்றியும் கருத்துத் தெரிவித்த முன்னைய சட்டத்தரணியும் தற்போதைய மன்னார் மாவட்ட நீதிபதியுமாகிய இளஞ்செழியன், இச்சட்டங்களுக்கு முன்னால் எம்மால் எதுவும் செய்ய முடியாது எனக் குறிப்பிட்டார். " நாம் இது தொடர்பான வழக்குகளில் கொஞ்சமாவது வெற்றி பெறுகின்றோம் என்றால் அதிலுள்ள ஓட்டைகளை பயன்படுத்தியே" என்றும் குறிப்பிட்டார்.

இது விடயத்தில் கூட சிங்கள நீதிபதிகளினதும் தமிழ் நீதிபதிகளினதும் அணுகுமுறைகள் வேறாகவே உள்ளன. சாதாரண கைதுகளின் போது சிங்கள நீதிபதிகள் காவலில் வைக்க முற்படும் போது, தமிழ் நீதிபதிகள் விடுதலை செய்கின்ற நிலையே பொதுவாக உள்ளது. தமிழ் நீதிபதிகள் தமிழ் மக்களின் உண்மை நிலையை உணர்வு ரீதியாக உணர்ந்தமையே இதற்குக் காரணமாகும்.

கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் நீதிபதியாக இருந்த நீதியரசர் விக்னேஸ்வரன், கொழும்பில் கைது செய்யப்பட்டு தன்னிடம் கொண்டு வரப்பட்ட ஒரு தமிழ் இளைஞனைப் பார்த்து "தம்பி உண்மையைச் சொல் எந்த ஏஜென்சியிடம் காசு கொடுத்து விட்டு நிற்கின்றாய்" என்றார். தொடர்ந்து "நான் விட்டு விடுகின்றேன் இனிமேல் மாட்டுப்படாதே" என்றார்.

மறுபக்கத்தில், தமிழ் நீதிபதிகளினால் விடுதலை செய்யப்பட்டவர்களைக் கூட படையினர் ஏற்க மறுத்து திரும்பச் சிறையில் அடைக்கும் நிலையும் உள்ளது. அண்மையில், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற தவமணி தேவி என்னும் பெண், கொழும்பில் வாங்கிய பையில் கந்தளாய், கொத்மலை நீர்த்தேக்கங்களின் படமும், விகாரமகாதேவி பூங்காவின் படமும் பொறிக்கப்பட்டிருந்தமைக்காக யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இவரை மல்லாகம் நீதிபதி திருநாவுக்கரசு விடுதலை செய்த போதும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவரை பிணையில் விட முடியாது எனக்கூறி காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு பொலிஸ் அதிகாரி மீண்டும் கைது செய்து அநுராதபுரம் சிறையில் அடைத்துள்ளார்.

ஆனால் அரச படைகளுக்கு எதிரான வழக்குகள் வரும் போது சிங்கள நீதிபதிகள் அதனை கிடப்பில் போடும் அல்லது தள்ளுபடி செய்யும் நிலையே காணப்படுகின்றது. ஏறிகளில் கொலை செய்யப்பட்டு, வீசப்பட்ட தமிழ் இளைஞர்களின் வழக்குகளிலும் இந்நிலையே காணப்பட்டது.

### அம்பாறை மாவட்டம்

**மொத்த சபைகள்-16**

| இனங்கள் | சனத்தொகை வீதம் | கிடைக்க வேண்டிய சபைகள் | கிடைத்த சபைகள் |
|---|---|---|---|
| தமிழர் | 20.5 | 03 | 03 |
| சிங்களவர் | 37.64 | 06 | 08 |
| முஸ்லீம்கள் | 41.53 | 07 | 06 |

### திருமலை மாவட்டம்

**மொத்த சபைகள்-11**

| இனங்கள் | சனத்தொகை வீதம் | கிடைக்க வேண்டிய சபைகள் | கிடைத்த சபைகள் |
|---|---|---|---|
| தமிழர் | 36.41 | 04 | 02 |
| சிங்களவர் | 33.62 | 04 | 07 |
| முஸ்லீம்கள் | 28.97 | 03 | 03 |

(இங்கு உள்ளூராட்சிச் சபைகளும் நகர சபைகளில், பிரதேச சபைகளும் மட்டுமே கவனத்தில் எடுக்கப்படுகின்றன.)

### முடிவுரை

இலங்கையின் நவீன அரச உருவாக்கமென்பது சிறுபான்மையினங்களை நசுக்கி ஒடுக்கி அவர்களுக்கான பாதுகாப்பு, உத்தரவாதப்படுத்தப்படாத ஒரு அரசாகவே- அதுவும் குறிப்பாக ஒரு சிங்கள பௌத்த பேரினவாத அரசாகவே வளர்ச்சியுற்றிருக்கிறது.

இந்த அரச உருவாக்கத்திற்கான ஒரு அடிப்படையையே இது வரையான அரசியல் யாப்பு வளர்ச்சி தாங்கி வந்திருக்கிறது. இந்த அரசியல் யாப்பு வளர்ச்சியில் தமிழ் மக்களின் அரசியல் பறிக்கப்பட்ட வரலாறும் இந்த யாப்பு வளர்ச்சியில் இளையோடியிருக்கிறது. இன்று நடைபெறுகின்ற அரசியல் யதார்த்தம் இதன் தொடர்ச்சி தான்.

இதுவரையான இத் தொடரில் சுதந்திரத்திற்கு முற்பட்ட யாப்புகளில் காணப்படுகின்ற பேரினதன்மைகளைப்பற்றி விபரித்திருந்தேன், இவ் யாப்பு வரலாறு எமக்கு காட்டுகின்ற உண்மை, சிங்கள சமூகத்திற்கான யாப்பிற்குள் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நலன்களைத் தேட முடியாது என்பதே ஆகும்.

இது தொடர்பாக, இந்தத் தொடரை தொடர்ச்சியாக வாசித்து வரும் நண்பன் ஒருவன் என்னிடம் கூறியதை உங்களுக்குத் தருகின்றேன்.

"மச்சான் பேரின யாப்பிற்குள் தமிழ் மக்களின் நலனைத் தேடுவதை இனிமேல் விட்டுவிடு" என்றான்.

"ஏன்" என்றேன்.

"நீ இவ்வாறு தேடுகின்றபோது அதற்குள் ஏதோ இருக்கின்றது என்ற மாயையை அது மக்களுக்குக் கொடுத்து விடும்" என்றான்.

"அப்போ மாற்றுவழி" என்றேன்.

"தமிழ் மக்கள் தங்களுக்குரிய யாப்பினை தாங்களே உருவாக்கிக் கொள்வது தான்" என்றான்.

நண்பனின் கருத்தினை வாசகர்களிடம் விட்டுவிட்டு இந்தத் தொடரை முடித்துக் கொள்கின்றேன்.

செம்பாட்டான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிழக்குப் பல்கலைக் கழகத்தில் உலக நாடக தின விழா:

# அரங்கப் பண்பாட்டு வளர்ச்சியை நோக்கி..

கடந்த ஒரு சகாப்த கால மட்டக்களப்பின் நாடக வளர்ச்சியில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க விதத்தில் அமைந்துள்ளது. இக்காலப் பகுதியில் மட்டக்களப்பின் நாடக இயக்கம், கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த விதத்திலேயே முன்னெடுக்கப்படுகின்றது.

உலக நாடக தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் கடந்த மார்ச் 23-27 வரையுள்ள ஐந்து நாட்களும் நாடக விழாவொன்றினைப் பல்கலைக் கழகத்தில் நடத்தி முடித்தனர். இந்நாடக விழாவில் பல்வேறு வகைப்பட்ட அரங்க அளிக்கைகள் இடம்பெற்றன. இவற்றை,

1. கூத்துவடிவங்கள்.

2. சிறுவர் நாடகங்கள்.

3. ஆங்கில நாடகங்கள்.

4. நவீன நாடகங்கள்.

என்னும் வகைப்பாட்டினுள் இட்டு நோக்கக் கூடியதாக இருந்தது. மொத்தமாக ஐந்து நாட்களும் 14 நிகழ்த்து கலைகள் இங்கு நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்த்துகையில், மட்டக்களப்பின் பாரம்பரிய நாடகங்கள் தொடக்கம் நவீன நாடகம் வரையான பல நாடக வடிவங்களும் இடம்பெற்று இருந்தன. இந்நிகழ்த்துகை தொகுப்பு பாரம்பரிய அரங்கில் இருந்து நவீன அரங்கு வரையான மட்டக்களப்பு அரங்க வளர்ச்சியின் இயங்கியல் தொடர்பு புலப்படும் வகையில் தொகுக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் மட்டக்களப்பின் அரங்கின் தனித்துவத்தைப் புலப்படுத்த முயற்சிக்கப்பட்டு இருந்தது.

இக்கட்டுரை இந்நிகழ்ச்சி பற்றிய முழுமையான பார்வையை வழங்க முற்படவில்லை. முழுமையாக விளக்க முற்படும் போது சில விடயங்களைக் கூர்மையாக விளக்க முடியாது போகலாம் என்னும் நோக்கில் கட்டுரையின் விரிவஞ்சி சில பகுதிகளுக்கே அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. பறைமேளக் கூத்து, நவீன நாடகங்கள் பற்றிய எனது மனப்பதிவு இங்கு முக்கியம் பெறுகின்றது.

முதலாம் நிகழ்ச்சியில், முதலாவது கலைநிகழவாக இடம் பெற்றது பறை மேளக் கூத்து. இது களுதாவளை ஆனைக்குட்டிக் குழுவினரால் நிகழ்த்தப்பட்டது.

ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியில் ஏனைய அரங்க வடிவங்கள் பெற்ற முக்கியத்துவத்தை இப்பறைமேளக் கூத்துப் பெறவில்லை. பறை மேளக் கூத்து மட்டக்களப்பின் தனித்துவமான கலைவடிவமாகும். பறையர் என்னும் சாதியினரால் அளிக்கை செய்யப்பட்டு வருகின்றது. இப்பறையர் இனம் மட்டக்களப்புச் சமூக அமைப்பிலே சமூக அந்தஸ்து அற்ற இனமாக வாழ்ந்து வருகின்றனர். இதனால் பறைமேளக் கூத்து, மட்டக்களப்பில் அதன் அளிக்கை மரபின் முக்கியத்துவத்தை இழந்து இருந்தது. இவ் உலக நாடக தின விழா மட்டக்களப்பின் பொது மேடைக்குப் பறைமேளக் கூத்தை முதல் தடவையாகக் கொண்டு சேர்த்த நிகழ்ச்சி எனலாம். இதனால் இவ்விழா பலருக்குப் பறைமேளக் கூத்தை அறிமுகம் செய்து வைக்கும் விழாவாக அமைந்தது.


பறைமேளக் கூத்து நிகழ்த்துக்கையில் 4 பறைமேளக் கூத்து கலைஞர்கள் பங்கு கொண்டனர். இக்கூத்தின் அளிக்கை முறை, அலங்காரம் என்பன இக்கூத்தை ஏனைய கூத்து வகைகளில் இருந்து வேறுபடுத்தியது.

சரிகைச் சாறியை கொய்தகமாக முழங்காலுக்கு மேற்பகுதி வரை மறையும் வண்ணம் இடுப்பில் அணிந்து, சரிகை, தலைப்பாகை அணிந்து, இடுப்பில், பறையைத் தாங்கிய வண்ணம் இரு பறை மேளக் கூத்தாட்டக் கலைஞர்களும் காட்சியளித்தனர். கூத்தாட்டக் கலைஞர் காலில் சதங்கை அணிவது போல் இவர்கள் கையில் சிலம்பு அணிந்து இருந்தனர். பக்க இசை வழங்குவோர் வேட்டி, சால்வை, தலைப்பாகை எனச் சாதாரண அலங்காரத்துடன் வட்டக் களரியின் ஓரமாகக் காட்சியளித்தனர். சொர்ணாலி, தம்பட்டம் என்பன பக்க வாத்தியங்களாகப் பயன்பட்டன.

பறைமேளக் கூத்தில் ஏனைய கூத்து வடிவங்களைப் போல் கதை ஒன்றை நிகழ்த்திக் காட்டும் பண்போ ஒரு சம்பவத்தை அபிநயிக்கும் பண்போ காணப்படவில்லை. குறிப்பிட்ட சில சொக்கட்டுக்களும் அவற்றுக்கான அபிநயங்களுமே முக்கியத்தும் பெற்று இருந்தன. இதற்கு 64 வகையான சொக்கட்டுக்கள் உண்டு என்பர். இதனால் இங்கு பாடல் உரை விளக்கம் என்பன இடம் பெறவில்லை.

பறைமேளக் கூத்தில் சொர்ணாலியை இசைக்கும் கலைஞரே முக்கியத்துவம் பெற்று இருந்தார். இவர் கூத்துக்களில் வரும் அண்ணாவியாரின் ஸ்தானத்தில் வைத்து நோக்கத்தக்கவர். இவரின் நெறிப்படுத்தலின் கீழேயே ஆட்டக் கலைஞர்கள் செயற்பட்டனர்.

இரு பறைமேளக் கூத்தாட்டக் கலைஞர்களும் சொர்ணாலி இசையை உள்வாங்கி அவ் இசைக்குத் தக்க விதத்தில் தங்கள் இடுப்பில் தாங்கிய பறையில் ஒலியெழுப்பி கையில் அணிந்துள்ள சிலம்பையும் அசைத்து ஒலியெழுப்பி லயம் நிறைந்த ஆட்டமொன்றை ஆடிக் காண்பித்தனர். பின்னணியில் தம்பட்டம் ஒலித்துக் கொண்டிருந்தது. வட்டக் களரியிலேயே இக்கூத்து அளிக்கை செய்யப்பட்ட போதும், இரு ஆட்டக் கலைஞர்களும் ஒருவர் முகம் மற்றவர் நோக்கி எதிர்நிலையில் நின்றே ஆடினர். இதனால் இருவரின் ஆட்டங்களும் ஒத்த தன்மையுடையனவாக அமைந்திருந்தன.



இரு பறையரும் தங்கள் பறையில் ஒலியெழுப்பியாடல், சுற்றியாடல், துள்ளியாடல், ஒருவர் பறையில் மற்றவர் மாறித் தாளம் எழுப்பியாடல் என்பன ஆட்டக்கோலங்கள் இடம்பெற்றன.

இப்பறைமேளக் கூத்தில் கால், அசைவுகள் அங்க அசைவகள், முகத்தோற்றம் என்பன முக்கியத்துவம் பெற்றன. ஆட்டக்காரர் ஒரே நேரத்தில் இம்மூன்று விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டிய தேவையிருந்தது. இது ஒரு பரத நாட்டிய நர்த்தகியின் இயல்பை ஒத்திருந்தது. லாவண்யமான அங்க அசைவுகள், மிருதுவான முகபாவம், நேர்த்தியான பாதங்களின் அசைவு என்பன பறைமேளக் கூத்தின் சுவையை அதீதப்படுத்தின.

இப்பின்னணியில் நோக்கும் போது, இப்பறைமேளக் கூத்து அளிக்கை பறைமேளக் கூத்தின் அழகியல் தராதரத்தைப் பலருக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியாகவும், அதன் இருப்பின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும் நிகழ்ச்சியாகவும் அமைந்தது என்றே குறிப்பிட வேண்டும்.

முதல் நாள் நிகழ்ச்சியாகப் பறைமேளக் கூத்து அமைய, இறுதிநாள் நிகழ்ச்சியில் நவீன நாடகங்கள் இடம்பெற்றன. இங்கு ஜெயசங்கர் நெறிப்படுத்திய *விளையாட்டு*, தவராசாவின் *மங்கையராய்ப் பிறப்பதற்கே*, அலோசியசின் *நியதிகள்*, பாலசுகுமார் நெறிப்படுத்திய *ஆற்றைக் கடத்தல்* என்பன இடம்பெற்றன.

விளையாட்டு, நியதிகள் இரண்டும் யதார்த்த நாடகங்களாகவும் மங்கையராய்ப் பிறப்பதற்கே மோடிப்படுத்தப்பட்ட நாடகமாகவும் ஆற்றைக்கடத்தல் ஒரு பரிசோதனை முயற்சியாகவும் அமைந்து இருந்தது.

விளையாட்டின் மூலம் இறுதியில் விடுதியில் வசிக்கும் மாணவர்களின் வாழ்வு யதார்த்தமாக மேடையில் கொண்டு வரப்பட்டது. படித்து முடித்து வேலையற்று இருக்கும் இளைஞர்களின் மனப்போராட்டமும், அதன் வெளிப்பாடுகளுமே நாடகச் செயற்பாடாக அமைந்து இருந்தது. சிறுபிள்ளைகளின் விளையாட்டுப்போல் இது மேடையில் கொண்டு வரப்பட்டு இருந்தது. நாடகத்தின் ஓட்டத்துக்கு இயைந்த வகையில் பின்னணி இசை ஒலித்துக் கொண்டு இருந்தது. இது பார்வையாளர்களை நாடகம் வெளிப்படுத்தும் உணர்வுத் தளத்தில் வைததிருக்க உதவியது.

'நியதிகள்' சிறைச்சாலையில் வாழும் கைதிகளின் மறைக்கப்பட்ட பக்கங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டு இருந்தது. நாடகத்தில் கதை கூறும் பணிவு மேலோங்கி நின்றது. நாடகத்தின் சிறப்புக்கு அதன் பாத்திரத் தெரிவு ஒரு காரணமாக அமைந்து இருந்தது. கைதிகளின் சிறை வாழ்க்கையுடன் தொடர்புடைய சகல விடயத்தையும் மேடையில் கொண்டு வர முயற்சித்ததால் நாடக ஓட்டத்தில் சிறு தளர்வு ஏற்பட்டது. நாடகம் குறித்த விடயத்தை முக்கியத்துவப்படுத்தி நகராமை இதற்கான காரணமாகும்.

மங்கையராய்ப் பிறப்பதற்கே, ஆற்றைக் கடத்தல் இரண்டும் பெண்விடுதலை பற்றிப்பேசிய நாடகங்களாகும்.

மங்கையராய்ப் பிறப்பதற்கே மட்டக் களப்பில் முதன் முதலாகப் பெண் விடுதலை பேசிய நாடகமாகும். இது 1994 சர்வதேச மகளிர் தினத்திற்காகச் சூரியா பெண்கள் நிறுவனத்தால் மட்டக் களப்பில் அளிக்கை செய்யப்பட்டது.

நாடகத்தில் ஆண் முதன்மை நோக்குச் சமூகத்தில் வாழும் ஒரு பெண் எதிர் நோக்கும் அடக்கு முறையின் பல வடிவங்களும் நெறியாளரால் புலப்படுத்தப்பட்டது. நாடக ஓட்டத்தில் குறியீட்டுப் பயன்பாடு, எடுத்துரைஞர் பயன்பாடு, நடனம் என்பன முக்கியத்துவம் பெற்று இருந்தது.

நாடகத்தில் பெண் அடக்குமுறை தொடர்பான கருத்துப்பிரச்சாரத்துக்கே ஆசிரியர் முக்கியத்துவம் கொடுத்து இருந்தார். இதனால் நாடக மாந்தர் சபையோரை நோக்கியே உரையாடினர். இது நாடக நிலைப்பட்ட நடிப்புக்குப் பெரும் பங்களிப்புச் செய்யும் என்று கூற முடியாது. மற்றும் நாடக மாந்தர், சபையில் இருந்து வரவழைத்தமையின் முழுமையான நோக்கு புலப்படவில்லை.

நாடகத்தில் பெண் அடக்கு முறை பல வடிவங்களையும் புலப்படுத்திய நெறியாளர் அவ் அடக்கு முறையில் இருந்து மீள்வதற்கு மாற்றீடாக எக்கருத்தையும் முன் வைக்கவில்லை. இந்நிலை நாடகத்தின் இயல்பான ஓட்டத்தில் ஒரு தளர்வை ஏற்படுத்தியது.

'ஆற்றைக் கடத்தல்' இந்திய எழுத்தாளர் அம்பையின் நாடகப் பிரதிக்கு அரங்க வடிவம் கொடுத்த முயற்சியாகும். ஆறு என்பதைப் பெண் அடக்கு முறையின் வடிவமாகவும், அதனைக் கடத்தல் அவ் அடக்கு முறையில் இருந்து மீள்வதற்கான வழியாகவும் கொண்டு அவ் ஆற்றைக் கடத்தலுக்கான போராட்டமே நாடகமாகும்.

நாடகத்தைப் பாலசுகுமார் ஒழுங்கமைக்கும் போது நடிப்பிடமாக மேடை, பார்வையாளர்கள் கூடம் இரண்டையும் பயன்படுத்தியிருந்தார். ஆறு பார்வையாளர்களை ஊடறுத்துச் சென்றது. இது வெள்ளைத்துணியால் காட்டப்பட்டது. பார்வையாளர் இருக்கைகள் நாடகச் செயற்பாட்டிற்கேற்ற விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு இருந்தன.

பாலசுகுமாரின் நாடகங்களிலேயே பொதுவாகப் பின்வரும் பண்புகள் காணப்படும்.

1. பாத்திரங்கள் சத்தமான குரலிலே பேசும்.

2. பாத்திரங்களின் அசைவுகளில் பாத்திரங்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்கும்.

3. பிரமாண்டமான காட்சிப்படுத்தல் இருக்கும்.

இப்பண்புகள் அனைத்தும் ஆற்றைக் கடத்தல் நாடகத்திலும் காணப்பட்டன. நாடகத்தின் அடிப்படையான விடயம் பாத்திரங்களின் நாடக நிலைப்பட்ட அசைவு (Dramatic Action) பாத்திரத்தின் இயல்பையும் குறித்த சூழலையும் கொண்டு வரும் உரையாடல் நாடக சூழலைப் பற்றிய தெளிவைப் பார்வையாளர்களுக்குத் தரும் காட்சிப்படுத்தல் என்பனவாகும். பாலசுகுமாரின் நாடகத்தில் காணப்படும் மேற்சுட்டிய பண்பு, அவரின் நாடகத்தின் கலையுருவாக்கச் செயற்பாட்டில் எவ்வளவு பங்களிப்புச் செலுத்தியது என நோக்க வேண்டும்.

ஆற்றைக் கடத்தல் நாடகத்தில் பாத்திரங்கள் வசனங்களைப் பேசின. அரங்கு உரையாடல் பாங்கு இருக்கவில்லை. இது நாடகப்பிரதியின் இயல்பாகவும் அமைந்து இருக்கலாம். இதனால் ஒரு கவிதா நிகழ்வைப் பார்த்த அனுபவத்தைத் தந்தது என பார்வையாளர்கள் அபிப்பிராயப்பட்டுக் கொண்டனர். இவற்றை விடப் பாத்திரங்களைப் பார்வையாளர்கள் கூடத்தில் செயற்பட வைத்ததன் அர்த்தப்பாடு தெளிவாகப் புலப்படவில்லை.

இவ்வாறு சில விடயங்கள் நாடகத்தில் தென்பட்டபோதும் ஈழத்துத் தமிழ் நாடக அரங்க இயக்கத்தில் ஆற்றைக் கடத்தல் ஒரு முன்னோடி முயற்சி எனலாம்.

இவற்றைவிட எரிவில் கூத்துக் குழுவினரின் *கர்ணன் போர்* (வடமோடி கூத்து), கன்னன் குடா கூத்துக் குழுவினரின் *அல்லி அர்ச்சுனா* (தென்மோடிக் கூத்து) என்பனவும், களுதாவளை மகா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு சிவரெத்தினம் நெறிப்படுத்திய *'காட்டுக்குள்ளே திருவிழா'*, சிசிலியா பெண்கள் பாடசாலை மாணவர்களைக் கொண்டு திலகநாதன் நெறிப்படுத்திய *'ஒற்றுமையின் சின்னம்'* ஜெயசங்கர், மகாஜனக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு நெறிப்படுத்திய *'முயலார் முயல்கிறார்'* மற்றும் வந்தாறு மூலை கணேச வித்தியாலய மாணவர்களைக்கொண்டு தயாரித்த *'பிள்ளை அழுத கண்ணீர்'* என்னும் சிறுவர் நாடகங்களும், ஜெயசங்கரால் சிசிலியா மாணவர்களைக் கொண்டு நெறிப்படுத்திய *'Riders to the Sea'* அதே பாடசாலைக்காகத திருமதி எலோமா முத்துலிங்கம் தயாரித்த *'Spreading the News'*, மைக்கல் பாடசாலை மாணவர்களைக் கொண்டு திருமதி குமாரசாமி, நரேந்திரன் ஆகியோர் நெறிப்படுத்திய *Hamlet* ஆகிய ஆங்கில நாடகங்களும் இந்நிகழ்ச்சியில் இடம்பெற்றன.

மேற்குறித்த பின்னணியில் அவதானிக்கும் போது மட்டக்களப்பின் அரங்க வரலாற்றில் நாடகத் தினத்திற்காக 5 நாட்களைச் செலவிட்டு ஒரு நாடக விழாவைக் கொண்டாடியது இதுவே முதற்தடவையாகும். இவ்விழா மட்டக்களப்பு அரங்க வளர்ச்சியின் சமகாலப் போக்கையும், எதிர்கால அரங்க வளர்ச்சியின் சாத்தியப்பாடு பற்றிய முன் அவதானிப்பையும் தந்தது. இந்நிலை இவ்விழாவின் முக்கியத்துவத்தை உணர்த்தும்.

**திரிபுவனன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழில் நிறைய எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். ஆனால் எழுத்தாளுமை கொண்டோர் மிகச் சிலரே. தீவிர ஈடுபாட்டுடன் எழுத்தை ஒரு ஆயுதமாகக் கொண்ட இந்த எழுத்தாளுமை கொண்ட மிகச்சிலருள் அம்பையும் ஒருவர். எழுத்தை வியாபாரமாக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரித்து வரும் இன்றைய சூழலில் தன்னைக் கரைத்துக் கொள்ளாமல், தன்னைப் பாதிக்கும் அநுபவங்களை எழுத்து ருபமாக்கி வருபவர். இலக்கியத்தில் மட்டுமின்றி திரைப்படம், சமூகவியல் பெண்ணியம் போன்ற துறைகளிலும் முனைப்புடன் ஈடுபட்டு வருபவர். அவர் தனது படைப்புகளுக்காக சிலாகிக்கப்-படுபவராகவுயம் இருக்கின்றார். "அந்தி மாலை"(நாவல்), "சிறகுகள் முறியும்", "வீட்டின் மூலையில் ஒரு சமயலறை" (சிறுகதைத் தொகுதிகள்) ஆகிய அவரது படைப்புகள் வெளிவந்திருக்கின்றன. நாவல் எழுதுவதில் ஒருவகை அச்சத்துடன் இருக்கும் அம்பை நிறையவே சிறுகதைகளை எழுதி வருகின்றார். ஒரு விழிப்புள்ள எழுத்தாளராக அவர் எதிர் கொள்ளும் அநுபவங்களின் எதிர்ப்புணர்வுகளாய் இருக்கக் கூடியவை அவரது கதைகள். பெண்கள் சம்பந்தமான கருத்தரங்கொன்றில் கலந்து கொள்வதற்காக அண்மையில் இலங்கை வந்திருந்தார் அம்பை. அவருடனான இலக்கியச் சந்திப் பொன்றை, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனமும், விபவியும் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தது.

கலை இலக்கிய ஆர்வலர் எழுப்பிய கேள்விகளுக்கு எவ்வித ஆர்ப்பாட்டமோ, போலித்தனமே இன்றி பதிலளித்தார் அம்பை.

தொகுப்பு : நிலாம்பிகை

*நீங்கள் திரைப்படங்களோடு தொடர்பு கொண்டிருக்கிறீர்கள் என்றும், உங்கள் கணவரே ஒரு நல்ல திரைப்பட நெறியாளர் என்றும், நீங்களே ஒருதிரைப்படத்தை எடுத்திருக்கிறீர்கள் என்றும் அறிகிறோம். இதுபற்றிய உங்கள் கருத்ததையும் அறிய விரும்புகிறோம்.*

எனக்குத் திரைப்படத்தோடு பெரிய தொடர்பு ஒன்றுமில்லை. நல்ல திரைப்படங்களை நிறையவே பார்த்திருக்கிறேன். நல்ல திரைப்படங்கள் எவையென்று இனம் கண்டு கொள்ள முடிகிறது. எனது கணவர் விஷ்ணு ஒரு திரைப்பட நெறியாளர். குறைந்த பணத்தைக் கொண்டு படங்களை எடுப்பவர். அவரால் பெரிய அளவ் பணம் ஏதும் செலவிட முடியாது இருப்பதால் நான் அவருக்கு உதவி புரிகிறேன். அவரது திரைப்படங்களுக்கான திரைக் கதைகளை எழுதுகிறேன். தமிழ் நாட்டில்குழந்தைகளை வைத்துப் படமெடுக்க முனைந்த ஒருவருக்கு எனது உதவி தேவைப்பட்டதுகுழந்தைகளுக்கு ஏற்றமாதிரி உரையாடல் எழுதினேன். அந்தப் படத்தில் நாகேசும் நடிக்க வந்திருந்தார். அவர் பாவித்த உரையாடல் குழந்தைகளுக்குப் பொருத்தமில்லாததாக இருந்தது. நான் அதைச் சுட்டிக் காட்டினேன். நாகேஸ் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதிலிருந்து நானும் ஒதுங்கிவிட்டேன்.

*பெண்களை அனுதாபத்துடன் பார்த்து, அவர்களுக்கெதிரான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் பலர் ஆண்கள் ஒடுக்கப் பட்டிருக்கும் போது அதைக் கண்டு கொள்வதில்லை. உதாரணமாக FIRE என்ற திரைப்படத்தில் பெண்கள் பாலுறவு ரீதியாக ஒடுக்கப்படுவதையும், அவர்கள் ஒரு பாலுறவைத் தேர்ந்து எடுப்பதையும் நியாயமானதாக வெளிப்படுத்தும் போது - ஓரளவு அதே ரீதியில் பாதிக்கப்படும் அந்த வீட்டு வேலைக்காரன் வில்லன் போல் சித்திரிக்கப்படுவதும் அவனது உணர்வு கொச்சசைப்-படுத்தப்படுவதும் எந்தளவு நியாயமானதாக இருக்கிறது?*

நான் FIRE திரைப்படத்தைப் பார்க்கவில்லை. அது பற்றி நிறைய எழுதப்படுகின்றது. இவற்றையெல்லாம் படித்திருக்கிறேன். அப் பெண்கள் தேர்ந்தெடுக்கும் முடிவு கூட ஏதோ ஒரு அரசியல் சார்ந்ததாகவே இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் அந்த முடிவு ஏற்றுக் கொள்ளப் பட முடியாதது.

*ஈழத்து இலக்கியம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களது படைப்புகளைப் நிறையவே வாசித்திருக்கிறேன். ஜெயபாலன், உமா வரதராஜன், சட்டநாதன், அ.முத்துலிங்கம், டானியல், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் ஆகியவர்களது படைப்புக்களைப் படித்திருக்கிறேன். சட்டநாதன் தனது கதைத் தொகுதியை அனுப்பியிருந்தார். அவற்றிலுள்ள கதைகளில் சிலதை இன்னும் நன்றாகவே எழுதியிருக்கலாம் எனப் படுகிறது. பல கதைகள் நன்றாகவே வந்திருக்கின்றன. அதில் ஒரு கதை என்னை மிகவும் பாதித்தது. ஒருவர் பாதுகாப்புக்காகச் சைக்கிளை ஒரு வீட்டில் நிறுத்தி விட்டுச் செல்கிறார். திரும்ப வரும் போது சைக்கிளை முன்பு விட்ட இடத்தில் காணவில்லை. வீட்டின் முன்புறத்தில் மிகவும் பாதுகாப்பாக விடப்பட்டிருப்பதைக் காணுகி-றார். சைக்கிளை எடுத்து வரும் போது ஒரு சிறுமி அவரையே அவதானித்துக் கொண்டிருக்கின்றாள். சிறிது தூரம் சென்ற அவருக்கு தனது சைக்கிளைப் பாதுகாத்ததற்காக நன்றி கூடச் சொல்லாமல் வந்து விட்ட குற்றவுணர்வு தொடுகின்றது. இக்கதையைச் சட்டநாதன் மிகவும் நேர்த்தியாக எழுதியிருக்கின்றார். இவ்வாறான மென்மையான உணர்வுகள் எனக்குப் பிடிக்கின்றது. டானியலின் கதைகள் ஆரம்பத்தில் படிக்குப் போது ஒன்றும் விளங்காமல் இருந்தன. அவரது பேச்சு மொழியைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் அவற்றைப் படித்துப் பயிற்சி செய்ததன் பின்னர் அவரது கதைகளைப் படிக்கும் போது அவற்றுடன் ஒன்றிக்க முடிந்தது. இருந்தாலும் டானியலின் நாவலில் வரும் பெண்கள் பலவீனமானவர்களாகக் காட்டப்பட்டிருக்கின்றார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை. ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் 'பாலியாற்றங்கரையில்' என்ற நாவல் நன்றாக இருந்தது. நான் பெண்ணாக இருப்பதனால் தான், ஆண்கள் எனது படைப்புக்களை சிறப்பாகக் கூறுவதில்லை, ஆனால் பெண்கள் தமது கதைகளை நன்றாகக் கூறவேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். அக்கருத்துடன் என்னால் ஒத்துப் போக முடியவில்லை. ஈழத்து எழுத்தாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். தமது நிலத்தினை வைத்து பல கதைகள் எழுதுகின்றார்கள். நிலத்தோடு தொடர்புகள் அறுபட்ட அனுபவங்களை அவர்கள் கதைகளாக்குகின்ற போது, ஏதோ ஒரு வகையில் எனக்கும் அந்த அனுபவங்கள் இருப்பதால் அவை எனக்கு மிகவும் பிடிக்கின்றன.

*நீங்கள் எழுத்துலகில் ஈடுபடுவதற்கு வெங்கட் சாமிநாதன் உங்களுக்கு உதவியிருக்கின்றார். குறிப்பாக உங்கள் கருத்துக்கள் அவருக்குப் பிடித்திருக்கின்றன. நீங்கள் வெங்கட் சாமிநாதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்.?*

வெங்கட் சாமிநாதனுக்கும் எனக்கும் நீண்ட காலத் தொடர்பு இருந்து வந்தது. ஆரம்பத்தில் எனக்கு கிரியா ஊக்கியாக இருந்தார் .பல இலக்கிய கர்த்தாக்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவரும் அவரே. பிற மொழி இலக்கியங்களை அறிமுகம் செய்து வைத்தது மட்டுமின்றி, நவீன இலக்கியங்களையும் வாசிக்கத் தூண்டியவர். அவரோடு இலக்கிய ரீதியான தொடர்பு மாத்திரமின்றி அவரது குடும்பத்தோடும் எனக்குத் தொடர்பு இருந்தது. அவரோடு எனக்கிருந்த உறவை முறித்துக் கொள்வதற்கும் அவரே காரணமாக-வுமிருந்தார். வெ.சா.வின் விமர்சனம் பற்றி நான் ஒரு முறை கருத்துச் சொன்ன போது, அவர் அதை ஏற்றுக் கொள்ளாது, நான் -என்னைப் பற்றி விமர்சிக்கும் உரிமையை உனக்குத் தரவில்லை என்று கூறி, என்னைத் தனது வீட்டுக்கே வரத் தேவையில்லை என்று சொல்லி, உறவை முறித்துக் கொண்டு விட்டார். ஆனாலும், என் உயர்வுக்குக் காரணமானவர் என்ற வகையில் நான் அவரை இப்போதும் மதிக்கிறேன்.

*நீங்கள் தமிழகத்தில் தாய், தாய்க்குலம், தாய் வழிபாடு என்பது பற்றி ஆய்வு செய்து, அதை ஆங்கிலத்தில் வெளியிட்டு இருப்பதாகவும், அது*

வந்தது. ஆரம்பத்தில் எனக்கு கிரியா ஊக்கியாக இருந்தார் .பல இலக்கிய கர்த்தாக்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவரும் அவரே. பிற மொழி இலக்கியங்களை அறிமுகம் செய்து வைத்தது மட்டுமின்றி, நவீன இலக்கியங்களையும் வாசிக்கத் தூண்டியவர்.



"ஈழத்து எழுத்தாளர்களின் நிலத்தோடு பிணைந்த படைப்புக்கள் என்னை ஆகர்ஷிக்கின்றன"

— அம்பை —

அவரோடு இலக்கிய ரீதியான தொடர்பு மாத்திரமின்றி அவரது குடும்பத்தோடும் எனக்குத் தொடர்பு இருந்தது. அவரோடு எனக்கிருந்த உறவை முறித்துக் கொள்வதற்கும் அவரே காரணமாக-வுமிருந்தார். வெ.சா.வின் விமர்சனம் பற்றி நான் ஒரு முறை கருத்துச் சொன்ன போது, அவர் அதை ஏற்றுக் கொள்ளாது, நான் -என்னைப் பற்றி விமர்சிக்கும் உரிமையை உனக்குத் தரவில்லை என்று கூறி, என்னைத் தனது வீட்டுக்கே வரத் தேவையில்லை என்று சொல்லி, உறவை முறித்துக் கொண்டு விட்டார். ஆனாலும், என் உயர்வுக்குக் காரணமானவர் என்ற வகையில் நான் அவரை இப்போதும் மதிக்கிறேன்.

*நீங்கள் தமிழகத்தில்தாய், தாய்க்குலம், தாய்வழிபாடு என்பதுபற்றி ஆய்வு செய்து, அதை ஆங்கிலத்தில் வெளியிட்டு இருப்பதாகவும், அது பல சர்ச்சைகளை உண்டு பண்ணியிருப்பதாகவும் அறிகிறோம். அது பற்றி கொஞ்சம்சொல்லுங்கள்?*

அது ஈ.வெ.ரா. வின் திராவிட இயக்கம் பற்றியதாகும். அவர்கள் பெண்கள் உரிமைகள் பற்றி எவ்வளவோ பேசியிருந்தாலும், அவர்களது மொழி மாறாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழிப் பிரயோகத்தில் பெண்கள் மதிக்கப்படுவது போல் இருந்தாலும், இச் சொற்பிரயோகங்களினூடே பெண்களை ஒரு அடிமைத்தனத்தில் வைத்திருப்பதையே செய்திருக்-கின்றார்கள். இது பற்றியதாகவே அவ் ஆய்வு அமைந்துள்ளது.

*தமிழகச்சூழலில்இல்லாமல்டெல்லி போன்ற இடங்களில் வாழுவதனால் தான் இயல்பாகவே சுய மரியாதை இயக்கம், மற்றும் திராவிட இயக்கங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்றகருத்து நிலவுகிறது. அந்த வகையில்தான் உங்கள் கருத்தும் இருக்கும் என்று கொள்ளலாமா?*

அவ்வாறல்ல. நான் ஒரு வரலாற்று மாணவி. அந்த வகையில் இயக்கங்களின் பிழையான நடைமுறைகள் பற்றிக் கேள்வி எழுப்புவது எனது உரிமையாக இருக்கின்றது. இவ்வாறு எனக்கு உரிமை உண்டு என்று எழுதுவதாலேயே நான் அவ்வாறானதொரு கட்டுரையை எழுதினேன்.

*உங்களது கதைகளில் வரும் பாத்திரங்கள் பெரும்பாலும் மத்தியதர வர்க்கப் பெண்களாகவே இருக்கின்றனர் என்று ஒரு விமர்சகர் சுட்டிக் காட்டியுள்ளார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?*

ஆம், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் நகரம் சார்ந்த வாழ்க்கையை வாழ்கின்றவள். மத்திய தர வர்க்கத்தின் சூழலிலேயே வாழ்கின்றவள். அதனால் தான் எனது பாத்திரங்களும் அவ்வாறு இருக்கின்றன. கதை எழுத வேண்டும் என்பதற்காகவே கிராமங்களுக்குப் போய், இதை வைத்துக் கதை எழுதுவதில் எனக்கு உடன்பாடில்லை.

## 'மெத்தசேன' - 'வனத்தின் அழகு' - 'பிரின்ட் சிறீலங்கா -98'

பொழுதைப் பயனுள்ளதாய்க் கழிக்கிற ஏதாவது நிகழ்வுகள் தலைநகரில் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. மிக அண்மையில் கூட மூன்று கண்காட்சிகள் கலாபவனத்திலும், லயனல் வெண்ட்டிலும் இடம்பெற்றன. இதில் இரண்டு புகைப்படக் கண்காட்சிகள், ஒன்று Print Sri Lanka'98 ன் கண்காட்சி.

புகைப்படக் கண்காட்சிகளில் ஒன்று மெத்தசேனவுடையது. (Mettesena) 'சண்டே டைம்ஸ்' ஆங்கில வாராந்தரி பார்ப்பவர்களுக்கு இவரைத் தெரிந்திருக்கும். 'மிரர்' மெகசினுக்காக பெண்களை விதம் விதமாய்ப்படம் எடுப்பவர். ஆனால் கண்காட்சியில் அவரது தளம் முற்றிலும் மாறியிருக்கிறது. மிகுந்த கலை அழகுடன் இந்திய ராஜஸ்தானத்தை அப்படியே பதித்துக்கொண்டு வந்திருக்கிறார். அண்மையில் இந்தியா சென்றிருந்த இவர் ராஜஸ்தானத்து மக்களை, அவர்களின் பாரம் பரியங்களை தன் கெமரா மூலம் இலங்கைக்கு கொண்டு வந்திருக்கிறார். படங்களில் அழகு மட்டுமல்ல ஒரு சமூகத்தின் இருப்பையும் பிரதிபலித் திருக்கிறார். இவர் போன்றவர்கள் நம்நாட்டு போர்க்காலத்து மக்களிடம் செல்லவேண்டும். அங்குள்ள மக்களை, அவர்களின் அவலங்களை நகரத்து மாந்தர்களுக்கு கொண்டு வந்து காட்டவேண்டும். கல்யாண வீடுகளில் ஒன்றுக்கு இரண்டு கெமராவை மாட்டிக் கொண்டு திரியும் 'நம்ம கலைஞர்களே' நீங்களும் ஏதாவது பிரயோசனமாய்ச் செய்யுங்களேன்.

'வனத்தின் அழுகு' என்ற தலைப்பில் இன்னொரு புகைப்படக் கண்காட்சியை 'வனவாழ்க்கை புகைப்படச் சங்கம்' நடத்தியது. (மே 2 -5 ,1998) இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் சிலரின் அழகானதும், கலைத்துவமானதுமான படங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. கலைஞர்களுக்கிடையே போட்டியும் வைக்கப்பட்டு சில படங்கள் பரிசுக்குரியவையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன. இதில் கலந்துகொண்டவர்களில் மருந்துக்கும் சிறுபான்மையினரில் யாரும் இல்லை. 'நம்ம வாழ்க்கையில் இதுக்கெங்கே நேரம்?' என்று இருக்கிறார்களோ தெரியாது. என்றாலும் இவ்வாறானவைகளில் பங்கேற்பதன் மூலம் பல விடயங்களைப் பரிமாறிக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. இந்தச் சங்கத்தில் வருட சந்தா 100/= மூலமும், ஆயுள் சந்தா 1000/= மூலமும் (இயற்கை வனவிலங்கு தொடர்பான) புகைப் படக் கலைஞர்கள் சந்தாதாரராகலாம். இவர்களுடனான தொடர்புகளுக்கு Wildlife Trust Photographic Society, 18 Gregory's Road, Colombo 07. Tel, Fax: 696050

அடுத்த கண்காட்சியாக இடம்பெற்றது 98ம் ஆண்டில் வெளியான அச்சுப்பதிப்புக்களின் கண்காட்சி. விளம்பரங்கள், கலண்டர்கள், நூல்கள், டயரிகள், வாழ்த்துமடல்கள் என சர்வதேச தரத்தை எட்டும் வகையிலான இலங்கை அச்சகங்களின் பிரசவங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு -சிறந்தவற்றுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன - காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. இதில் 38 அச்சகங்கள் கலந்து கொண்டிருந்தன. தமிழர், முஸ்லிம்களின் அச்சகங்கள் கலந்து கொண்டிருந்தாலும் கிட்ட வந்திருக்காது. பல துறைகளில் போன்று அச்சக, வெளியீட்டுத்துறையிலும் நாம் தள்ளியே நிற்கிறோம். எமது நூல்களைப் பார்த்தாலே அது தெரியும். 'தெண்டைக்குத் தேவைக்குத்தான்' நமது அச்சகங்கள் நூல்களை அச்சிட்டுத் தள்ளுகின்றன. கலாரசனையே யாருக்கும் பெரும்பாலும் இருப்பதில்லை. இந்தக்கண்காட்சியைப் பார்த்தபோது இவ்வாறு மனக்கிலேசம்தான் ஏற்பட்டது. சில சகோதர சிங்கள அச்சக உரிமை யாளர்கள் தங்கள் ஊழியர்களை இதைப்பார்ப்பதற்கென்றே அனுப்பி வைத்திருந்தார்கள். அச்சகத் தொழிநுட்பத்தோடு நாம் என்ன உருப் படியாய் செய்யப்போகிறோம் என்ற கேள்விதான் எனக்கு எழுகிறது.

## சுவாரஸ்யமான அரசியல்

சூடான அரசியல் சமாச்சாரங்களுக்கு பேர் போனது டி.என்.எல் (T.N.L.= Teleshan Network Limited) தொலைக்காட்சி. பிரதிவெள்ளிதோறும் ஒளிபரப்பும் Always Breakdown அரசியல் காட்டூன் தொடர் சகலரிடமும் நன்கு பிரபலமானது. தென்னாசியாவிலேயே இவ்வாறானதொரு நிகழ்ச்சி முதல்தடவையாக TNLலிலேயே ஒளிப்பரப்பாகிறது எனத்தெரிவிக்கப்படு கிறது. Frontline எனும் கள நிலவரம் தொடர்பான பேட்டிகளும், சுவாரஸ் யமான முறையில் ஒளிப்பரப்பாகிறது. இதில் படைத்தரப்பு முக்கியஸ் தர்கள் கலந்து கொள்கிறார்கள். 'ஜனஹன்ட' எனும், மக்களும் அரசியல் வாதிகளும் கலந்து சூடாக கருத்துப்பரிமாறும் நிகழ்ச்சியொன்றும் TNLல் ஒளிபரப்பாகிறது.

மேற்குறித்த நிகழ்ச்சிகளில் ஒன்றான Frontline ல் கடந்தவாரம் (13, புதன், 98) முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக்கவும், முன்னாள் இராணுவ உயரதிகாரியும், கிழக்குத்தளபதியுமான லக்கி அல்கமவும் கலந்து கொண்டனர். 'ஐலன்ட்' பத்திரிகை ஆசிரியர் காமினி வீரக்கோன் இவர்களைப்பேட்டி கண்டார். சுவாரஸ்யமாகப் போன நிகழ்வில் இறுதியில் அரசின் கட்டாய ஆட்சேர்ப்புப் பற்றியும், படையிலிருந்து விலகிய 20 ஆயிரம் பேரை மீளக்கொண்டுவர அரசு எடுக்கும் முயற்சி பற்றியும் கேட்கப்பட்டது. இதற்கு நக்கலாக பதிலளித்தார் குணதிலக்க. ''90%மான படை நடவடிக்கை முடிந்து விட்டதென்று ஜனவரியில் சொல்லப்பட்டது. 96% முடிந்துவிட்டதென்று அண்மையில் சொன்னார் கள். மிகுதி 4%தானே. இதைச்செய்ய இருக்கிற ஆட்களே போதும்தானே. பிறகேன் ஓடிப்போனவர்கள் மீண்டும் சேரவேண்டும், கட்டாய இராணுவ சேவைக்கு ஆட்கள் சேர்க்க வேண்டும் என்று கூறுகிறார்களோ தெரியாது' என்றார். 'வாயைக் கொடுத்து வாங்கிக்கட்டுவது' என்று அரசுக்கு இதைச் சொல்லலாமா?

லக்கி அல்கம இன்னொரு விஷயத்தையும் சுட்டிக் காட்டினார். 'உலகி லேயே படை நடவடிக்கைகளை அரசியல்வாதிகள் தீர்மானிக்கிற ஒரே நாடு இலங்கை.'

அரசியல் சுவாரஸ்யமானது; அரசிய்ல்வாதிகளைப் போல்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# முகம் : எம் முகங்கள் அம் முகத்தில்

கடந்த வருடம் கோடையில் ''முகம்'' படம் ரொறன்ரோவில் திரையிடப்பட்டது. பிரான்சில் தயாரிக்கப்பட்டு ''அருந்ததி'' என்பவரால் இயக்கப்பட்டது. அருந்ததி கவிஞராக தமிழ் வாசகரால் முன்பு அறியப்பட்டவர்.

நல்ல விடயங்களும் முன்மாதிரிகளும் இலகுவாக தமிழர்களால் எப்படி ஒதுக்கப்படும் என்பதற்கு இந்தச் சினிமா முயற்சியும் இன்னொரு உதாரணம்.

பெரிய அளவில் விளம்பரம் செய்தும் ரொறன்ரோ தமிழ்க் குடிமக்களுக்குத் தெரியாமல் இரண்டொரு காட்சிகளுடன் சுருண்டு கொண்டது.

இதைப் பிரான்சில் இருந்து கொண்டு வந்த தயாரிப்பாளர் இப்படத்தைத் தயாரித்த செலவுடன் இங்கு வந்து போனசெலவையும் கூட்டிக் கொண்டு போனதுதான் மிச்சம்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் தப்பி ஓடிவந்த ஈழத் தமிழ் இளைஞர்களால் நிரம்பி வழிந்தது பரிஸ் நகரம். மூவாரயிமாண்டு சரித்திரத்தில் தமிழருக்கு இது புதிய அனுபவம். தலைமாற்றி, ஆள்மாற்றி, போடர் பாய்ந்து நெப்போலியன் மண்ணில் ஏற்பட்ட புதிய அனுபவம் - தெரியாத மொழி, புரியாத சூழல், இருக்க இடம் இல்லாத சங்கடம், வதிவிட அனுமதி இல்லாமை - இந்தத் துயரங்கள் ஒரு புறம். தொப்புள் கொடி அறுந்து தூக்கி எறியப்பட்டது போல் உறவுகளில் இருந்து துரத்தப்பட்ட துயர் மறுபுறம். இதனூடேயும் உய்ய விழையும் வாழ்வு. இதுதான் இச்சினிமா சொல்ல வரும் கதை.

தான் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட காலத்தை கவிதையாக்கி கமெராவால் சினிமா மொழியாக்கி இருக்கிறார் அருந்ததி.

கமெராவின் உத்திகள், உருக வைக்கும் இசை, மேதைத்தனம் மிக்க படத்தொகுப்பு, இவற்றை எதிர்பார்த்து பார்வையாளர்கள் இப்படத்தைப் பார்க்கப்போகவில்லை. அதனால் அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படவில்லை.

மகிழ்ச்சியைக் கொடுத்த விடயம் என்னவென்றால் - கதைக்கும் கமெராவுக்கும் இடையில் திரைக்கதைக்கும் நடிகர்களுக்கும் இடையில் அருந்ததி என்ற படைப்பாளி அற்புதமாய்ச் செயல்படுகிறார்.

கலங்க வைத்து சிரிக்க வைத்து மற்றத் திரைப்படங்களைப்போல் படம் நகர்ந்தாலும் பொய்யில்லாக் கதை. அலட்டல் இல்லாத நடிப்பு, ஒரு நல்ல சினிமாவுக்குரிய பல் அம்சங்கள் நிறைவாய் இருந்தன.

எல்லாம் சகசமாகி யாழ்ப்பாணத்தைத் தூக்கிக் கொண்டு லாச்சப்பலில் வைத்தாயிற்று. துக்கமும், ஏக்கமும் ஏன்? சந்தோசம் கொண்ட இந்த நினைவுகள் அப்போது இந்த வாழ்க்கை வாழ்ந்தவர்களின் மனத்தில் பஞ்சத்தில் பட்ட வடுப்போல இருக்க, இப்படம் காலம் காலமாய் ஒரு இலக்கிய சாட்சியாய் இருக்கும்.

**செல்வம் அருளானந்தம்**

# சங்கானை தொடங்கி ரொறன்ரோ வரை

**செல்வம் அருளானந்தம்**

இளவேனிற் காலம் தொடங்கிய ஒரு மாலைப் பொழுதில் காமினி நவரெட்னா என்ற ஒரு உண்மையான பத்திரிகையாளனை இங்கு நினைவு கூர்ந்தோம்.

இங்கு வாழும் தமிழ், சிங்கள பத்திரிகையாளர்கள், நல்ல விடயங்களுக்குத் தவறாது சமூகம் அளிக்கும் நண்பர்கள் உட்பட ஒரு முப்பது முப்பத்தைந்து பேர் வரை கூடி காமினி நவரெட்னாவைக் கௌரவித்தோம்.



இலங்கைப் பல்கலைக்கழக முனனாள் உப விரிவுரையாளர் ராஜேந்திரம் இணைப்பாளராகக் கூட்டத்தை நடத்த காமினியுடன் பழகியவர்களும் நண்பர்களுமான சேரனும், டி.பி.எஸ். ஜெயராஜாவும் முதலில் பேச, பின் கலந்துரையாடலுடன் கூட்டம் தொடர்ந்தது.

சேரனின் பேச்சு பலருக்கு முன்மாதிரி. ஒழுங்காக எழுதித் தயாரிக்கப்பட்டது. தன் இளமைக் காலத்தில் அவரைக் கண்ட நாள் முதல் ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவரில் கவர்ந்ததென்ன? அவரிடம் கற்றதென்ன? என்பவற்றை தன் ஆளுமைமிக்க மொழியில் விவரித்தார் சேரன். மொழி, மதம், இனம் என்ற குறுக்கங்களைத் தாண்டிய முகம் காமினி நவரெட்னவினுடையது என்றார்.

டி.பி.எஸ்.ஸின் பேச்சு எழுதித் தயாரிக்கப் படாவிட்டாலும் ஒழுங்காக இருந்தது. பத்திரிகையாளனாக அவரைக் கண்ட' நாள் முதல் ஒவ்வொரு சந்திப்பிலும் காமினி என்ற ஆளுமை தனித்துவம் மிக்கது என்றார் டி.பி.எஸ்.

சிதைந்து போகின்ற சிங்கள - தமிழ் உறவால் நாடே அழிந்து போகும் என்ற கவலை இறக்கும் வரை காமினியிடம் இருந்தது. நாடு இனப்பிரச்சினையால் அழிந்து கொண்டிருக்கிறது. தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்ற கவலை. தான் சாகும் போது கூட கவலை, வெப்பியாரம் கடைசி வரை இருந்தது என்று டி.பி.எஸ் சொன்னார்.

ஒரு பத்துப் பத்திரிகையாளர் சேர்ந்து குடிக்கும் தவறணையில் காமினி தனித்திருப்பார். அதற்குக் காரணம் மற்றப் பத்திரிகையாளர்களிடம் உள்ள தனிப்பட்டக் கோபம் அல்ல. இனப்பிரச்சினையில் அவர்கள் எழுத்து மூலம் சரியானதைச் சொல்லவில்லையே என்ற தார்மீக கோபமே என்று பல உதாரணங்களுடன் விவரித்தார்.

அவரின் பின் பேசியவர் சிங்களப் பத்திரிகையாளரான காமினி திஸ்ஸ நாயகா. அவர் பேசும் போது சிங்கள தமிழ் உறவும், தமிழ்ப் பிரச்சினையும் தனிப்பட்டவர்களின் நல்லெண்ணத்தால் தீர்த்து வைக்கக் கூடியது என்ற தோரணையில் பேசினார்.

அவர் பேசியதைத் தொடர்ந்து கேள்வி எழுப்பியவர் என்.கே. மகாலிங்கம். அந்நியோன்யமாக இருந்த சிங்கள தமிழ் உறவு ஏன் சீர்குலைந்தது? தனிப்பட்டவர்களின் நல்லெண்ணம் மட்டும் தமிழ்ப் பிரச்சினையை தீர்த்து விட முடியுமா? காமினி நவரெட்னா, ஜே.ஆர். ஜயவர்த்தனா இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்று நம்பியதும், காமினிக்கும் ஜயவர்த்தனாவுக்கும் இருந்த நட்புப்போதுமானது என்று நம்பியதும் எவ்வளவு அப்பாவித்தனமானது என்றார். அக்கேள்வி அஞ்சலி என்ற நிகழ்வைத் தாண்டி வாதப்பிரதிவாதங்களை எழுப்பின.

அரசியல்வாதிகளே மக்களைப் பிரித்து விட்டார்கள் என்று இன்னொரு சிங்களப் பத்திரிகையாளர் அக்கூட்டத்தில் சொல்ல, எனக்குப் பக்கத்தில் இருந்த ஒருவர் என் காதுக்குள் 'சங்கானைத் தொடங்கி ஸ்காபரோ வரை' கடந்த இருபது வருடங்களாக இதைக் கேட்டுப் புளித்துப்போயிற்று என்று புறுபுறுத்தார். அப்பத்திரிகையாளர் தொடர்ந்து தான் ஒரு மோசமான சூழ்நிலையில் யாழ்ப்பாணம் சென்று தமிழ் மக்களுடன் உரையாடி விட்டு எந்தச் சேதமும் இன்றி திரும்பி வந்ததாகவும் பொதுமக்கள் வேறு, அரசியல் வேறு

→19

# விமுக்தி (மீட்சி) (Salvation)

அ.றஜீசன்

ஒருவன் கைகளால் அபிநயிக்கிறான். அவன் விதியாகவும் இருக்கலாம், இறைவனாகவும் இருக்கலாம் அல்லது அவனுக்குள் இருக்கும் அவனேயாகவும் இருக்கலாம். அவன் வாழ்வைத் தொடங்குகின்றான். குழந்தையை இழந்த சிறுவன், தாய் இன்னொருவரை மணம்முடிக்க அந்த மனிதரால் வெறுத்தொதுக்கப்பட்டவாறே அவ்வறுமை உழலும் வீட்டில் வளர்கிறான். அவனுக்கு குமாரி எனும் அவன் வயது ஒத்த சிறுமியுடன் ஸ்நேகம் ஏற்படுகிறது. அவள் சிறுவயதிலேயே அந்த கிராமத்திலிருந்து நகரத்திற்கு கொழும்பிற்கு போகிறாள். இவனோ இப்போது வளர்ந்து விட்டான். கிராமத்து இளைஞனாக, மிகுந்த அப்பாவியாக வளர்ந்து நிற்கின்றான். சதா எருமைகள் மேய்ப்பதே அவன் தொழில். ஆனால் அவன் அதை பெரிதும் விரும்புகிறான். அவள் வருகின்றாள். அவன் பால்ய ஸ்நேகிதி. கொழும்பில் தான் நல்ல வேலையில் இருப்பதாகவும், தன்னுடன் வருமாறும் கூறுகிறாள். காதல் கொள்கிறாள். அவனுடன் பாலியல் உறவு வைக்கிறாள். தன் விலாசத்தைக் கொடுத்துவிட்டுச் செல்ல அவன் அந்த கிராமத்திலிருந்து கொழும்பிற்கு வருகிறான். கொழும்பு நகரம் அவனை தன் வயப்படுத்துகிறது. கிராமத்து வாழ்வியல் மனிதனை நகரம் நெருக்குகிறது. காதலியின் முகவரியைத் தொலைத்து விட்டவன் ஒரு பத்திரிகையாளனின் உதவியுடன் சிரமங்களிற்கு மத்தியில் அவளைக் கண்டு பிடிக்கிறான். பின்பு தான் அவனுக்குத் தெரிகின்றது அவள் ஒரு பாலியல் தொழிலாளி என. அவளின் மூலம் சிரா எனும் மனிதனுடன் அறிமுகமாகின்றான். பணத்திற்காக எந்த வேலையையும் செய்யும் மனிதன் அவன். தன் காதலியை எப்படியாவது மாற்றி தன் கிராமத்திற்கே கூட்டிச் செல்லலாம் எனும் நம்பிக்கையுடன் அவர்களுடன் தங்குகின்றான். ஆனால் அவள் பணத்தாசை கொண்டு மேலும் மேலும் பாலியல் தொழிலில் முன்னேறுகிறாள். நகரம் அவனை மேலும் நெருக்குகிறது. சிராவை கொலை செய்கிறான். குமாரியை; காதலியை தன்னுடன் வருமாறுகூற அவள் தன் தொழிலில் மேலும் பல பெண்களை ஈடுபடுத்தி தான் முதலாளியாக விரும்புகிறாள். அவன் அவனால் பாதிக்கப்பட இருந்த இளஞ்சிறுமியுடன் மீள தன் கிராமத்திற்கு திரும்பி அங்கு அமைதியாகவும், சந்தோசமாகவும் வாழ்ந்து கொள்கிறான். அவன் காதலி பணத்தாசை பிடித்து இறுதியில் துணைக்கு யாருமின்றித் தனிமையில் அநாதையாக சீவிக்கிறாள்.

இது பிரியந்த கொலம்பகேயின் இரண்டாவது சினிமாவான 'விமுக்தி'யின் கதை. கிராமிய இளைஞனை நகரம் எவ்வாறு நெருக்குகிறது என்பதையும், பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்களைப் பற்றியதாகவும் இப்படம் இரு தளங்களில் பயணிக்கிறது. இந்தக் கிராமம், நகரம் எனும் விடயம் (Subject) சிங்கள சினிமாக்களில் அடிக்கடி கையாளப்பட்டு வரும் ஒரு விஷயமாகும். தரமான சிங்கள சினிமாவை வெளியிடும் 5வது சுற்று (Fifth Circuit) வெளியீட்டு வரிசையில் அலோகா பிலிம்ஸ் ஸ்தாபனத்தினரால் வெளியிடப்படும் இச்சினிமா பெண்களை மிகவும் மட்டமாக விளிப்பதன் மூலம் தன்னுடைய கதையைக் கொண்டு செல்கின்றது.

இப்படத்தில் வரும் பாலியல் தொழிலாளியான குமாரி முதலாளி வர்க்கமாகவே காட்டப்படுகின்றாள். ஆனால் உண்மையான நிலவரம் என்னவெனில் முதலாளித்துவ சுரண்டல்கள் தான் ஒரு பாலியல் தொழிலாளியின் உருவாக்கத்திற்கும், ஒரு பெண்ணை வேறு மார்க்கமின்றி பாலியல் தொழிலில் ஈடுபடவைப்பதற்கும் ஏதுவாகின்றது. எந்தப் பெண்ணும் விரும்பி இந்தத் தொழிலை ஏற்பது என்பது யதார்த்தத்திற்கு முரணானது. ஆனால் இங்கோ குமாரி வெறும் வசதி வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கும், ஆடம்பரமாக வாழ்வதற்கும் தனக்குரிய நல்ல தெரிவுகளை விட்டுவிட்டு இதனைத் தெரிந்தெடுக்கின்றாள். பின் அதில் இருந்து மீள சந்தர்ப்பம் வருகின்ற போதெல்லாம் அதனை உதாசீனம் செய்கின்றாள். அதுவும் ஆணாதிக்க வலைக்குள் அகப்பட்ட அவளை அதே ஆண்வர்க்கமே மீட்டெடுக்க முனைவதாகவும் காட்டிய பின் அதனைக்கூட அவள் மறுதலிப்பதாகக் காட்டப்படுகின்றது. இது ஆண் வர்க்கத்தை உயர்த்தி பெண்களை இழிவுப்படுத்தும் விதமாகவே அமைந்து விடுகின்றது.

இச்சினிமா பேசும் மற்றைய முக்கிய விடயம் நகரத்து நெருக்கடிகள் கிராமத்து மக்களின் வாழ்வை நாசமாக்குகிறது என்பது. கிராமத்து அப்பாவி இளைஞன் போதைப் பழக்கம் கொள்வது, இறுதியில் கொலைகாரனாகவே மாறவேண்டி இருப்பது போன்ற காட்சிகள் இந்த விடயத்தை ஓரளவு வெளிப்படுத்துகின்றன. ஆனால் கிராமத்து இளைஞனிற்கு பணத்தின் மீது ஆசையே இல்லை என்பதாகக் காட்டுவது ஓரளவிற்கு அபத்தமாகவே தோன்றுகிறது.

சிங்கள சினிமா வியாபார ரீதியில் மிக மோசமாக பின்நோக்கி செல்வதாகவும், அரங்கு உரிமையாளர்கள் உள்ளூர்த் திரைப்படங்களை வாங்க மறுப்பதாகவும் கூறப்படுகின்றது. இதற்குக் காரணம் உள்ளூர் படங்களை விட இறக்குமதியாகும் தமிழ், ஆங்கில, இந்தித் திரைப்படங்களின் தொழிநுட்ப தரத்தை ரசிகர்கள் விரும்புவதும் மற்றும் ரி.வியின் ஆக்கிரமிப்பும் என்று கூறுகிறார்கள். ஆனால் இவற்றையும் மீறி 'சிகின தேசயென்', 'பவதுக்க', 'லொக்குதுவ' போன்ற படங்கள் வெற்றி பெற்று விடுகின்றன. இதற்குக் காரணம் எமது வாழ்வுடன் ஒத்த நிகழ்வுகளின் சித்திரிப்பும், நல்ல கதையம்சமும். ஆனால் விமுக்தி போன்ற படங்களைப் பார்க்கும் போது சிங்கள சினிமாவின் எதிர்காலம் மோசமானதாகவே இருக்கும் போல் தெரிகிறது. புகைமூட்டங்கள் போன்ற தெளிவற்ற காட்சிகள், கவனயீனமான படத்தொகுப்பு (எடிட்டிங்) என்பன விமுக்தியை எம்மிடம் இருந்து மேலும் மேலும் அந்நியப்படுத்துகின்றது.

நெருடலை ஏற்படுத்தும் குளோசப் காட்சிகள், காட்சிகளுடன் இணையாத சங்கீதம் என்பவை எமக்கு மேலும் அந்நியத்தைக் கொடுக்கின்றது. இப்படம் வெளிவரமுன்பு சினிமா வட்டாரத்தில் இது ஏற்படுத்தி இருந்த எதிர்பார்ப்பிற்கு சிறிதாயினும் ஏற்றவகையில் விமுக்தி அமையாதது ரசிகர்களின் துரதிருஷ்டமே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பேசப்படாத கதைகள்!

- ரத்னா



(இறுதிப்பகுதி)

### பெண்களின் இனவிருத்திப் பிரச்சினைகள்

பெண் எனின் திருமணம் செய்ய வேண்டும், மறுக்காமல் பிள்ளைகளும் பெற வேண்டும் என்ற நியாயம் கடை பிடிக்கப்படும் சமூகத்தில் இனவிருத்தித் தொடர்பான பிரச்சினைகள் அதிகம் பெண்களுக்கு ஏற்படுவது ஆச்சரியத்துக்குரியதல்ல. பெண்கள் தாய்மைப்பேறு அடைவதினால் தான் பெரிதும் மதிக்கப்படுகின்றார்கள். இதனாலே தான் அரச மட்டத்திலும், தாய்மையுறும் பெண்கள் திரிபோஷா வழங்கப்பட்டு விசேட கவனிப்புக்குள்ளாகுகின்றனர். எனினும், இப்பெண்கள் பிரசவம், பிரசவம் சார்ந்த மரணத்தை தழுவுகின்றமை குறிப்பிடத்தக்கது. 1998ம் ஆண்டை, 'பாதுகாப்பான தாய்மை ஆண்டு' என உலக சுகாதார ஸ்தாபனம் தொனிப் பொருளாக்கிய தன் மூலம் இப்பிரச்சினையின் விளைவுகளை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

அனைத்து விடயங்களிலும் நமக்கு அதிகம் நினைவூட்டப்பட வேண்டிய நபர்களாக இருக்கும் மலையகப் பெண்களை இவ்விடயத்தில் மறத்தல் இயலாது. மலையகப் பகுதிகளில் இருக்கும் பிரசவ வைத்தியசாலைகள் தேசிய தரத்தைக் கொண்டவை அல்ல. அத்தோடு பிரசவத்துக்காக கொண்டு செல்லப்படும் பெண்கள் போக்குவரத்துக் குறைபாடு காரணமாக உயிரை இழக்கின்றனர்.

மலையகப் பகுதிகளில் தொழில் புரிந்த அரச சார்பற்ற நிறுவன ஊழியர் ஒருவரின் கருத்துப்படி, குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சையான எல்.ஆர்.டி. சிகிச்சையை ரூ.500 கிடைப்பதனாலேயே அப்பெண்கள் மேற்கொள்கின்றனர் எனக்குறிப்பிட்டிருந்தார். அரசாங்க மட்டத்தில் இவர்கள் தொடர்பான அக்கறைகளும் மெச்சும் படியாக இல்லை. பெரும் எதிர்பார்ப்பையூட்டிய மகளிர் பிரகடனத்தில் கூட தோட்டப்புறப் பெண்கள் தொடர்பாக எந்த விடயமும் சேர்த்துக் கொள்ளப் படவில்லை.

அரசாங்க, தனியார் பிரசவ வைத்தியசாலைகளின் தரம், சேவை, படுக்கை வசதியின்மை, தொற்று நோய்களின் அபாயம், தாதிமார், வைத்தியர்களின் அசமந்தம் என்பன தாய்மாரின் மரணத்திற்கு ஏதுவாகி விடுகின்றன. சில வைத்தியசாலைகளின் சேவைகள் பொருளாதாரப் பலத்தின் அடிப்படையில் தான் தீர்மானிக்கப்படுகின்றன.

### குறை போஷாக்கு மட்டம்

பெண்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டுவிட்டுத் திரும்பிய ஆய்வாளரிடம் ஆய்வைப் பற்றிய விபரங்கள் கேட்ட போது அவர் ஆக்ரோஷமாக அளித்த பதில், 'அவர்களுக்கு முதலில் சாப்பிட ஏதாவது கொடுங்கள், பிறகு ஆய்வைப் பற்றி யோசிப்போம்'.

குடும்பப் பொருளாதாரம் தொடர்பான அக்கறைகள், குடும்பச்சுமை, உணவு குடும்பத்தாரிடையே அதிகளவு பகிரப்படல், போஷாக்கு மட்டம் தொடர்பாக குடும்பங்களில் நிலவும் அச்மத்துவம், பொருட்களின் விலை உயர்வு என்பன இதற்குப் பிரதான காரணங்களாக அமைந்து விடுகின்றன. பொதுவாகவே, பெற்றோர்கள் மத்தியில் உணவு தொடர்பாக அசமத்துவம் நிலவி வருகின்றது.

உதாரணமாக ஆண் குழந்தைகள் அதிக நிறை உணவுகளைப் பெறுகிறவர்களாகவும், பெண் குழந்தைகள் பூப்பெய்தல், தாய்மையடைதல் என்ற விதிவிலக்குகளைத் தவிர போஷாக்கு மட்டங்கள் குறைந்த உணவுகளைப் பெறுகிறவர்களாகவும் உள்ளனர். இந்நிலைமை இன வேறுபாடுகளின்றி காணப்படுகின்றது. அதேபோல், குடும்ப மட்டத்தில் தாய்மார்கள், குழந்தைகளதும் கணவன்மார்களதும் உணவு விடயத்தில் அக்கறை கொள்ளும் அளவிற்கு தம் உணவு பற்றி அக்கறை கொள்வதில்லை. ஏனெனில், குடும்ப உழைப்பினால் ஏற்படும் சக்தி விரயம் தொடர்பாக ஏனையவர்களிடம் போதிய அறிவின்மையும் இங்கு செல்வாக்குச் செலுத்துகின்றது.

நடுத்தரவயது, பெண்களின் உடல் நலம் குறிப்பாக 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பொருளாதாரத்தில் வகிக்கும் பங்கு என்பன அவர்களது சுகாதாரம், போஷணை தொடர்பாக அக்கறை எடுக்கும் தேவையைக் குறித்து நிற்கின்றது. குறிப்பாக ஏனைய பெண்கள் போன்றல்லாது, இவ்வயதுப் பெண்கள் அதிக உடலியல்/ உளவியல் பிரச்சினைகளுக்காக சிகிச்சைக்கு செல்லும் போது, வைத்தியர்கள் 'இந்த வயதில் அப்படித்தான்' எனக் கூறி ஏதோ இரண்டொரு மாத்திரகளை வழங்கி அனுப்புகின்றமையை எத்தனையோ பேர் நேரடி அனுபவத்தில் கண்டிருப்பர்.

### பேசப்படாத விடயமான உளவியல் பிரச்சினைகள்

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான இவ் அரை நூற்றாண்டில், தற்கொலை புரிபவர்களின் விகிதாசாரம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆண்கள், தற்கொலை விகிதாசாரத்தில் ஹங்கேரியாவிற்கு அடுத்தபடியாகவும், பெண்கள் தற்கொலை விகிதாசாரத்தில் முதலிடத்திலும் இலங்கை உள்ளது. இதுவரை குறிப்பிட்ட விடயங்கள் பெண்களின் உடலியல் பிரச்சினைகளாக இருக்கின்ற போதிலும், இத்தற்கொலைகள் உளவியல் ரீதியான பலவீனத்தின் ஆபத்தினை வெளிக்காட்டியுள்ளது.

1977ற்குப்பின், அதாவது திறந்த பொருளாதாரக் கொள்கையின் பின்னர் இந்நிலைமை அதிகரித்துச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஸ்தாபிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் பெண்களே அதிகம் தற்கொலை புரிகின்றனர். இப் பெண்கள் தொடர்பாக நம் சமூகம் கொண்டிருக்கும் கற்பிதங்கள் அவர்களின் உளவியல் பலவீனத்திற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பலராலும் மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்ற போதிலும், இலங்கை சமூகத்தில் காணப்படும் அடிப்படைக் குறைபாடுகள் இங்கு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. நமது சமூகத்தில் தனிப்பிரச்சினைகள் தொடர்பான கருத்தாடலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. அதிலும் பெண்கள் தமது உளவியல் ரீதியான பிரச்சினைகளை வெளிப் படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர். அரசும் உளவியல் நலன் தொடர்பாக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை எனலாம். அக்கறையிருந்திருப்பின் வீதிக்கு வீதி ஒரு கவுன்சிலிங் அமைக்கப்பட்டிருக்கும். இந்த வகையில் இலங்கையில் அதுவும், தலைநகரை அண்டி இருக்கும் சுமித்திரயோ, பெண்களுக்கான உதவி அமைப்பு (Women in Need), சஹன போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பெருவெற்றியை அளிக்கவில்லை என்றே தோன்றுகிறது. அத்துடன் நடுத்தர வர்க்க பெண்களிடையே இவ் அமைப்புக்கள் தொடர்பான அக்கறை மிகக் குறைவு எனலாம்.

### பாலியல் தொழிலாளிகள்

அண்மையில் கல்கத்தாவில் விபச்சாரப் பெண்கள் மாநாடு இடம் பெற்றது. ஆசிய நாடுகளில் உள்ள விபச்சாரம் புரியும் பெண்கள் இதில் கலந்து கொண்டு தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தனர். இதில் முக்கியமானது தமது தொழில் நிமித்தம் சுகாதாரப் பாதுகாப்பினை பெற்றுத் தருதல் வேண்டும் என்ற கோரிக்கையாகும். இலங்கையிலிருந்து இம்மாநாட்டுக்கு எந்தப் பிரதிநிதிகளும் செல்லவில்லை. இதன் மூலம் இலங்கையில் விபச்சாரம் புரிபவர்கள் இல்லை என்ற எண்ணம் ஏற்படலாம். இருந்த போதிலும் இன்று கொழும்பையும், கொழும்பைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் பல பிரபலஸ்தர்களால் நடாத்தப்படும் விபசார நிலையங்களில் பெண்கள் சுரண்டலுக்குள்ளாகின்றனர். விபசார நிலையங்களின் 'விதிகளை' மீறுபவர்கள் இரவு ராணிகளாக வீதிகளில் தமது வாடிக்கையாளர்களைத் தேடி அலைகின்றனர். யுத்தப் பிரதேசங்களில், இராணுவத் தரிப்பிடங்கள் விபசார மையங்களாகி வருகின்றன.

அனுராதபுரம் இன்று இராணுவத்தினரின் தரிப்பு பிரதேசமாக மாறியுள்ளது. இதேபோல் சுதந்திர வர்த்தக வலயங்களும் மாறி வருகின்றன. எனினும், ஆண்களின் பாலியல் தேவைகளை ஏற்றுக் கொள்ளும் சமூகம், பெண்களின் பாலியல் நோய்களையும், சமூக நோய்களையும் கருத்திலெடுப்பதில்லை. பாதுகாப்பான விபச்சாரத்திற்கான உரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சட்ட ரீதியாக பெண்களே இவ்விடயத்துக்காக அதிகம் தண்டனைக்குள்ளாகின்றனர். பெண்கள் அமைப்புகள் இவ்விடயத்தில் பெரும்பாலும் மௌனம் சாதித்து வருகின்றன.

இலங்கைப் பெண்களின் கல்வியறிவு வீதம் (84%) ஏனைய தெற்காசிய நாடுகளை விடவும் உயர்ந்ததாக இருக்கின்றமையை நாம் பெருந்தன்மையுடன் கூறிக்கொள்ளும் அதேவேளை, இலங்கைப் பெண்களின் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் பெருந்தன்மை கொள்ளக் கூடியதாக இல்லையென்பதையே மேற்கூறிய விடயங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பெண்கள் இயக்கங்கள், இவ்விடயத்தில் அக்கறை காட்டுவது நல்லதொரு விடயமாகும். ஆய்வுகளின் மூலம் உண்மை நிலவரங்களை வெளிப்படுத்த், அரசுக்கு அழுத்தம் கொடுக்க அவை ஓரளவுக்கு முயற்சிக்கின்றன. எனினும் பலமான, கூட்டான அசமத்துவமான கருத்தியல்களை உடைத்தெறிய அவைகளால் முடியாதுள்ளது. அத்துடன் அரச சார்பற்ற அமைப்பு என்ற போர்வைக்குள் இருந்து செயலாற்றுவது அவற்றின் நடவடிக்கைகளின் நோக்கத்தை மீள் பரிசீலனை செய்யத் தூண்டுகின்றது.

பெண்களின் சுகாதாரம் தொடர்பான அக்கறைகள், கொள்கைகள் என்பனவற்றை பறைசாற்றும் அரசு, ஆணாதிக்க சமூக அமைப்பின் செல்வாக்குகளை தாங்கி நிற்கின்றமை பெரும் மாற்றத்தை கொண்டுவரும் என நம்புவதற்கில்லைத் தான்.

இந்த வகையில் பெண்ணுக்கு தன் உடல் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் சுதந்திரம் இன்னும் எட்ட முடியாத வெகுதூரத்தில் உள்ளது என்றே துயரத்துடன் கூற வேண்டியுள்ளது. அவளது உடல் ஆணாதிக்க அமைப்பினால் நிர்வகிக்கப்படுவதினால் தான் சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்களிலும், பிரசவ ஆஸ்பத்திரிகளிலும், விபசார நிலையங்களிலும் அவள் சோரம் போய்க் கொண்டிருக்கின்றாள்.

மாதராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல்வேண்டுமோ அம்மா?



“பெண்ணுக்கு தன் உடல் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் சுதந்திரம் இன்னும் எட்ட முடியாத வெகு தூரத்திலே உள்ளது”

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நாம அவனளுக்குச் செஞ்சதுக்குத்தான் நமக்குச் செஞ்சானலே...'' என்று மாப் பெனைஞ்சு கொண்டிருந்த மாமி விரக்தியாச் சொல்றா. அவட மகள நான் கல்யாணஞ் செஞ்ச இந்த மூணுவருஷத்துல பல முறை இப்படிக் கதைச்சிருக்கா. அவ்வளவுக்கு நெஞ்சு நெறஞ்ச விரக்தி. இருக்காத பின்ன...? மூணு சின்னப் புள்ளைகளோட இருந்த அவட புருஷன 'அவன்கள்' நடு வீதியில வைச்சுச் சுட்டான்கள... சும்மா இருந்தவர் தானே...

இது நடந்து பத்து வருஷத்துக்கு மேலாச்சு. இன்னும் நெஞ்சுக்குள்ளயும், கண்ணுக் குள்ளயும் இருக்கிற மாதிரி கதைப்பா. கதைக்கக்குள்ள கண்ணெல்லாம் குளமாயிரும். என்ட மனிசியையும் அது சரியாப் பாதிச்சிருக்கோணும். வாப்பாவத் தேடிக்கிட்டு சின்னச் 'ஷொப்பர்' பைசிக்கிள்ள இவதான் போனாவாம்.

இவவும் நெறயத்தரம் எனக்கு நல்லா கண்ணசந்துட்டுபோற டைம்ல கதைச்சிருக்கா. நானும் பெரிய்ய அறுவ என்ட மாதிரித்தான் கேட்டிட்டிருப்பன். அதை, அதுக்குள்ள இருக்கிற வேதனையை அவங்களோட நெருங்கி. உள்வாங்கக்குள்ளதான் வெளங்குது.

இப்ப கொஞ்சத்துக்கு மொதத்தான் வெடிச்சத்தம் கேட்டிச்சு. அதுவும் பக்கத்துல. அதாலதான் இந்தக் கதையும் வந்திச்சு. ஊருக்குள்ள விழ்ற ஒவ்வொரு வெடிச் சத்தமும் இவங்களுக்கு அத ஞாபகப்படுத்துது போல.

'இருபது முப்பது பேருக்கு ராவு ராவா இடியப்பம் அவிச்சுக்கொடுத்திருக்கம்...' 'அக்கா அக்கா எண்டுட்டுத்தான் வருவாங்கள்'' விட்டுவிட்டு ஒவ்வொண்டா, ஞாபகப்படுத்தி கதைக்கிறா. சுத்தியும் கடும் இருட்டா இருக்குது. எட்டாம் பிறை கொஞ்சம் பெரிசாத்தான் கிடக்குது. எண்டாலும் பெரிய வெளிச்சமில்லை. பக்கத்துல இருக்கிற பொலிஸ் ஸ்டேஷன்ல சுத்தியும் பூட்டியிருக்கிற 'ஸேர்ச் லைட்' அடிக்கடி சுத்தி வெளிச்சம் காட்டிட்டு இருக்கு. விடிஞ்சா பெருநாள். அதுக்குள்ள வெடிச்சத்தம் கேட்டு கொழப்பிட்டு. முறுக்குக்கு மாபெனஞ்சிட்டு இருக்காங்க. சூல் லாம்புதான் கொளுத்தியிருக்கு. இன்னும் அடுப்பு மூட்டல. எப்ப பெனஞ்சி எப்ப சுட்டு முடிக்கிற? வெளிய இருக்கப் பயமா இருக்கண்டுதான் தூங்கப் போன என்னையும் கூப்பிட்டு இருப்பாட்டி இருக்கு. காலைச் சுத்தி சுத்தி நுளம்பு வேற கடிக்குது.

'என்ன நுளம்பா கடிக்குது' மனிசி கேக்கிறா. 'இல்ல பாம்பு'' -

'கொஞ்ச இருங்க அடுப்பு மூட்டக்குள உரிமட்ட பத்தவைச்சு விடுறன்.

சொன்ன மாதிரி பத்த வைச்சுட்டா. கண்ணுக் குள்ளயும், மூக்குக்குள்ளயும் புகை நுளையுது. நுளம்புக்கடிய விட இது பரவாயில்ல.

''இனிம, பட்பட்டென்று சுட்டுடலாம்.'' மாமிதான் சொல்லி ட்டு பெரிய தாச்சிச் சட்டிக்குள்ள ஒவ்வொண்டா போடுறா. மனிசி குசினி அடுப்புல தண்ணி வைக்கிறா. கோப்பி ஊத்துறதுக்குப் போல. ரெண்டு பேரும் என்ன தூங்காம பண்ற ஐடியாதான். நாளைக்கு பெருநாள் தானே. முழிப்பம்.

''நல்ல நாள் பெருநாளிள யாரைச் சுட்டான் களோ. இங்கால கிட் டத்தான் கேட்டிச்சு''. மா மிதான் திரும்பவும் கதைக்கிறா. ''நல்ல நாள்ளயும் சும்மா இருக்கிறான்கள் இல்லயே.'' - இது மனிசி. போட்ட முறுக்கு முறுகிருச்சிப்போல. எண்ணையை வடிச்சு எடுக்கிறா. மனிசி ரெண்டு கொண்டு வந்தா. ''ஆறுனதுக்குப் பொறவு சாப்பிடுங்க.''

அந்த ஏரியாவுக்குள்ள நாங்களும் பக்கத்து வீட்டு கண்ணாவும், (கண்ணா: மிகவும் வயதான பெண்களை இவ்வாறு அழைக்கி றார்கள்) எதிர்த்தாப்பால இருக்கிற பொலிஸ் ஸ்டேஷன்ல இருக்கிறவன்களுந்தான் முழிச்சிக்கிட்டு இருப்பம் போல. கண்ணாட குடிசைப்பக்கம் இருந்து கதை கேட்குது. அவவும், அவட பேத்தியும் தான் தனியா இருக்காங்க.

''என்ன கண்ணா தூங்கயில்லையா'' மனிசிதான் சத்தம் வைக்கிறா. 'எங்க தூங்குறது. மகன் வாறன் எண்டான், வெடிச் சத்தமும் கேட்டிச்சு. கடையெல்லாம் பூட்டிட்டு வந்திட்டானோ என்னவோ.... '' கண்ணா சொல்றா.

அவட மகன் டவுனுக்குள்ள கடை வெச்சிருக் கிறான். தேத்தண்ணிக் கட. மத்தக்கடயவிட லேட்டாகித்தான் பூட்டுவாங்க. அவன், மனிசி புள்ளயளோட கொஞ்சம் தள்ளித்தான் இருக்கான். நாளைக்குப் பெருநாள் தானே. சாமான் ஏதும் கொண்டு வருவான் போல. அதான் ஒன்பது ஒன்பதரையாகியும் முழிச்சுட்டு இருக்காங்க.

நாயளும்கொரைக்கத் தொடங்கிட்டு. ஒவ்வொண்டாத் தொடங்கி ஊர் நாயளெல்லாம் ஒண்டாச்சத்தம் போடும். இந்த மொற லீவுல வந்த மொதநாளே மனிசி ஒரு நாய்க்கதை சொல்லியிருந்தா. சிரிப்பாயிருந்தாலும் கொஞ்ச நாளா ஊரெல்லாம் அதே கததானாம். ''அந்த நாய்தானாக்கும் திரியுது''. எண்டு மனிசி சொல்ல மாமி சிரிக்கிறா.

அந்த நாய்க்கதை இதுதான்: (மனிசிதான் சொல்றா)



''அந்த வட்டத்துக்குள்ள ஒருத்தி இருக்கா. (இங்க வட்டம் என்கிறது எண்ட மனுஷியின் ஊருக்குப்பக்கத்துல கடற்கரையோரமா இருக்கிற ஒரு சிறிய மீன்பிடிப் பிரதேசத்தைக் குறிக்குது) அவ வெளிநாட்டுள இருந்து வார ஆட்கள்ட அந்த இந்த உடுப்புச்சாமான்கள வாங்கி ஊடு ஊடாய் பொயிட்டு விக்கிறவ. இப்பிடி ஊருக்குள்ள போன இவ ஒரு வீட்ல கொழுவி இருந்த ஒருத்தர்ட சேட்ட தூக்கிட்டு வந்துட்டா. அதுக்குள்ள அம்பதாயிரம் காசு, லைசன்ஸ், பாஸ்போட்டெல்லாம் இருந்தரிக்கி அத எடுத்துட்டு வந்த இவ காச மட்டும் எடுத்துட்டு, மத்ததெல்லாம் பத்தவெச்சிருக்கா. காசில, வீட்டைச்சுத்தி வேலி அடைச்சிட்டு யாரோ ஒரு ஆலிம்சாட்டைச் சொல்லி வீட்ட காவல் பண்ணியிருக்கா. காசு தொலைச்சாள் எங்கெல்லாமோ தேடி பொலிசுலயும் சொல்லியிருக்கார். ஆரம்பத்துல இவ மேல சந்தேகம் வரல்ல. பொறகுதான் சந்தேகம் வந்து விசாரிச்சுப்பார்த்தா இவதான் ஆள். அவட்ட பொயிட்டு கேட்க சத்தியம் பண்ணிட்டாவாம் எடுக்கல்லையெண்டு. ஆனா அந்த ஆளுக்கு அவவுள தான் சந்தேகம். அவவும் சந்தேகப் படுற மாதிரித் தான் நடந்திருக்கா. இவருக்கு கோவம் வந்து ஒனக்கு செய்யிறன் வேலையெண்டுட்டு இன்னொரு ஆலிம்சாட்டை நாயொண்டை வசியம் செய்து ஏவிவிட்டிருக்கிறாரு. அந்த நாய்தான் - பெரிய கருப்பு நாய்யாம், நாக்குநெலம் மட்டும் தொங்குதாம். - இப்ப ஊரெல்லாம் திரியுதாம். ஆட்கள் பயந்துபோய்க் கெடக்குறாங்க. அந்த நாய் அவட வீட்டு ரோட்டாலெல்லாம் திரியுதாம், அவட வளவுக்குள்ள மட்டும் போகுதில்லை யாம். அவவும் காவல் பண்ணி வைச்சிருக்கா தானே அதான்.''

மனிசி நல்ல சுவாரசியமா கதை சொல்லுவா. நான் லீவுல வந்தண்டுதான் இந்தக்கதையைச் சொன்னா. இப்பயும் அந்த நாய்தான் கொரைக்குதெண்டு முக்கால் வாசிப்பேருக்கு நெனப்பு.

மாமி கொஞ்சங் கொஞ்சமா முறுக்கு சுட்டு முடிக்கிறா. ரெண்டு பெரிய அங்கர் டின் நெறய நெறச்சாச்சி. மனிசி டிசைன் டிசைனா கடைசி மாவையும் பிளிஞ்சு விடுறா. இப்ப கொஞ்சம் வெளிச்சமாக்கெடக்கு.

வாசல்ல அரவங் கேட்குது. சின்ன மங்கிய டோச் பத்திப்பத்தி நூருது. நாயும் கொரைக்குது. லாம்பத் தூக்கி ஒசத்திப்பாக் கிறன். கண்ணாட மகன் வாறான். தோள்ல புள்ள படுக்குது. கையில ஷொப்பிங் பேக். என்னோட மொதப்படிச்சவன். 'என்ன மச்சான் வெடி?' என்கிறன். நகரத்துக்குள்ள ஒத்தன சுட்டுட்டாங்கள்மச்சான். ஹஸனோ, ஹுஸனோ.. புள்ளக்கும் காயமாம்...'' சொல்லிட்டு உம்மாகிட்டப் போறான். அவங்களும் மொதல்ல இதத்தான் கேப்பாங்க.

முறுக்கு வேல முடிஞ்சுது போல. சாமான மெல்லாம் உள்ளுக்குக் கொண்டு போறாங்க.

''யாரெண்டு தெரியாது பாவம். நல்லநாள் பெருநாள்ல சுட்டிருக்காங்க. கொல்லையில போவாங்க. பெருநாள் எண்டாவது பாக்கிறாங்களா. வாப்பாவையும் இப்பிடித்தானே சுட்டான்கள். எண்ட மனசு என்னமா துடிச்சிச்சு தெரியுமா?'' வெப்புசாரத்தில் மாமி திரும்பவும் கதைக்கத் தொடங்குறா. கதைச்சித்தான் என்ன செய்யிறது?

'பேசாம போய் படுங்கம்மா. பெருநாள் கொத்துவாக்கு (குத்பா: மார்க்கப் பிரசங்கம்) போகணும் சொல்லிட்டு மனிசி தண்ணியெடுத்துட்டு வாரா. நான் வாளியில தண்ணியள்ளிக் கொண்டு வாசலடியில வைக்கிறன். ராவயில ஐந்தாறுதரம் ஒண்டுக்கு போகவேண்டிக் கெடக்கு. என்ன நீர்க்கடுப்போ தெரியாது. சரியான புழுக்கமாகவும் கெடக்கு. காத்த நாமதான் உசுப்பிவிடோனும் போல. சுத்திவர மரங்கள் இருந்தும் வேலயில்ல. மனிசி 'ஜன்னல்ல தொறப்பமா?'' என்கிறா. நான் 'வேணாம்'கிறன். எனக்கு சரியா பயமாக் கெடக்கு.

விடிய முழிச்சுப்பாக்கிறன். மனிசி தேத்தண்ணியோட நிக்கிறா. குளிச்சும் போட்டா. பெருநாள் கொத்துவா பொம்பளயளுக்குத்தான் மொத நடக்கும். அவங்கபோயிட்டு வந்து சமையல் வேலையைத் தொடங்கோணும். ஆம்புளயள் பொறகுதான் போவாங்க.

எனக்கு ராவு சுட்ட ஆளப்பாக்கோணும்போல இருந்திச்சு. குளிச்சு முடிச்சி லோங்ச போட்டுட்டு வெளிக்கிட்டன். 'கொத்துவாக்கு போயிட்டு கெதியா வாங்க, சாப்பிடோணும்' என்கிறா மனிசி. நோன்புப் பெருநாளயில தான் கொத்துவாக்கு மொதல்ல சாப்பிடு வாங்க. ஹஜ்ஜுப் பெருநாளயில பொறகு தான். தலையாட்டுறன். நேரா பின்ரோட்டால சைக்கிள மிதிக்கிறன். எனக்கு முன்னுக்கும் கொஞ்சப் பேர் போறாங்க. கிறவல் மண் புழுதிகௌப்பிமொகத்தில அடிக்குது.

அந்த வீட்டடிக்குகிட்ட போக சனக்கூட்டமாய் இருந்துச்சி. பொலிஸ் பொடியங்களும் நிக்கிறாங்க. ஒவ்வொரு ஆளாப்போய் மையத்த பாத்துட்டு வாறாங்க. சைக்கிள நிப்பாட்டிட்டு நானும் போறன். போத்தியிருக்க வெள்ளச் சீலையைத்தூக்கி ஒராள் காட்டுறார். பாக்கிறன். முகத்துல சீலத்துண்டால நிறையக் கட்டுப்போட்டிருக்கு. ''மொகத்துக்குத்தான் வெச்சிப்பிடிச்சுருக்காங்க'' பக்கத்துல நிண்டவர் சொல்றார். 'புள்ள எங்க?', 'அதுக்கும் காயம். மலைக்கு (திருகோணமலை) கொண்டு போயிருக்காங்க'.

ஊராக்களெல்லாம் ஆள் மாறி மாறிவந்து பாக்கிறாங்க. ஆளுக்கு ஆள் ஒவ்வொரு கதைகள். 'கதைக்கவும் பயமாக் கெடக்கு' என்கிறார் ஒரு காக்கா.ஒவ்வொருத்தர்ட நிண்டும் ஒவ்வொரு கதையா கேக்கிறன். இண்டைக்கு பெருநாள் வேற. லுகருக்கு முதல் அடக்கோணும் எண்டுதான் எல்லோரும் சொல்லுறாங்க. 'அவர்ற ஆக்களுக்கு சொல்லியனுப்பியிருக்கு. லோஞ்சில வாராங்களாம். வந்தபொறகு அடக்குவோம்' என்கிறார்கள். 'எதற்கும் அவங்க வரட்டுமே' என்கிறார் இன்னொராள். கூடிக்கூடி கதைச்சிட்டுத்தான் இருக்காங்க. என்ன செய்யிறது'. ரோட்டோரத்துல ஆக்களோட ஆக்களா நிக்கிறன்.

ஓ..... வென்று ஒப்பாரிச்சத்தம் கூடிக்கேக்குது. ஆக்கள் வந்துட்டாங்க போல. லோஞ்சும் இப்பத்தான் வந்த சத்தம் கேட்டுச்சு. போய் பார்க்கறன். ஆம்புள பொம்புள எண்டு நெறயப்பேர் கூடியிருந்து அழுவுறாங்கள். ஊர் ஆக்கள் ஹஸன்ட வாப்பாவைக்கூட்டிப்போய் கதைக்கிறாங்க. 'மையத்த ஒடன அடக்கிரோணும். என்ன செய்யலாம்' என்கிறார்க . 'அவனப்பாத்தே கணநாள் வாப்பா.... எல்லாரும் வாராங்க. மையத்தோட மொகத்தையாவது ஒருக்கா காட்டிட்டு அடக்குங்க வாப்பா' என்று புலம்பிக்கொண்டு சொல்றார்.

ஒவ்வொரு பள்ளியிலயும் ஒவ்வொரு நேரத்துல கொத்துவா நடக்குது. டைம்மும் போய்க்கொண்டு இருக்கு. கடைசியாத் தொழுவுற பள்ளிக்குப் போய்த் தொழோணும். மெயின் ரோட்டால விட்டுப்போறன். எல்லாப் பள்ளியிலயும் தொழுகை முடிஞ்சு ஆக்கள் வாராங்க. கடைசியா பசார் பள்ளிக்குப் போறன். அங்க தான் தக்பீர் (பெருநாள் தினங்களில் விஷேடமாகச் சொல்லப்படும் இறை வாழ்த்து) கேட்குது.

இந்த முறை லீவுல வந்ததில இருந்து ஒரே பயமாத்தான் கெடக்கு. ஊர் நெலம வரவர மோசமாவது. எங்கேயும் போகேலா. ராப்பகலா வெடிச்சத்தம். வீட்டுக்குப்பக்கத்துல வேற பொலிஸ் ஸ்டேஷன். தாக்கினா நாம அவ்வளவுதான்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேத்து பெரிய 'பாலப்பக்கம்' போனன். என்ட சின்னவயசு அங்கதான் கழிஞ்சிச்சு. ஷோக்கான ஊர். உம்மம்மாட ஊட்ல இப்ப வேற ஆட்கள் இருக்கிறாங்க. ஊடும், ஊட்டைச்சுத்தி பெரிய வளவும், வளவுக்கங்கால வயலும், வயலுக்கு நடுவுல ஆறும் எண்டு என்னபசுமையாத்தான் இருந்துச்சி. ஆக்களும் அப்படித்தான். வயல் வெட்டைக்குள்ளாள ஒன்டரை மைல் நடந்து ஸ்கூலுக்கு போனது, பொட்டைகளோட சேர்ந்து கிட்டி விளையாடினது, கதிர்பொறக் கப் போனது, நெல்லுக்குத்தப்போனது எண்டு, எல்லாம் ஞாபகத்துல வருகுது.

என்னாமாக்கெடந்த நாட்கள். என்னாமாக் கெடந்த ஊர். இப்ப எப்படிக்கெடக்குது? வெறிச்சோடி பாலைவனமாதிரி. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு திக்கில இருக்காங்க. கொஞ்ச நாள் உம்மம்மாட வீட்ல புலிப்பொடியன்கள் இருந்தான்களாம். பொறகு இந்தியன் ஆமி, இலங்க ஆமி எண்டு எல்லாரும் அந்த வீட்ல இருந்தாங்களாம். ஒவ்வொரு முறை வந்தாலும் இங்காலப் பக்கம் வந்து பாத்துட்டுத்தான் போவன். ஊட்ல எல்லாம் தொளை, தொளையாய்க் கிடக்குது.

வளவுக்குள்ள நெறயத் தென்ன மரமும் நிக்குது. இளனி குடிப்போம் எண்டு போனா, ஆக்கள் விடமாட்டாங்கள். மிதி வெடி இருக்கும் எண்டு பயம் காட்டுவாங்க.

இப்பதான் இங்காலப் பக்கம் ஆக்கள் கொஞ்சம் கொஞ்மா வந்து குடியேறுறாங்க. பள்ளிவாசலச் சுத்தியும் கடைகள் போட்டிருக்காங்க. மொத ஒரு மினி பசார் மாதிரி இருந்துச்சு. அந்த நெல இப்போதைக்கு திரும்ப வராது போலகெடக்குது. எப்பயெண்டாலும் ஓடுறதுக்கு ரெடியாத்தான் ஆக்கள் இப்பவும் இருக்காங்க.

பின்னேரமும் ஒருக்கா பெரியபாலப்பக்கம் போகோனும்.

பசிக்குது. நேரா ஊட்டுக்குத்தான் சைக்கிள விடுறன். ரோட்டும் வெறிச்சோடிக்கிடக்குது. இந்த வெயில்ல யாருதான் திரிவாங்க.

மனிசி சாப்பாட்ட போட்டுட்டு பாத்திட்டு நிக்கிறா. 'எந்தப்பள்ளியில தொழுதீங்க. நகரத்துக்குள்ள போனிங்களாக்கும்.....' கேள்வியோட வறவேற்கிறா. வீட்டுக்குள்ள வர ஹஸன் தான் கண்ணுக்குள்ள வந்தான். ''போய்ப்பாத்தீங்களா...'', 'ஓம் தலையைச் சுத்தித்தான் சுட்டிருக்காங்க...' மொகத்தால சிலிர்த்துக் காட்டினா. அவன்ட மௌத்த நெனைச்சிட்டு நான் புட்டும், ஈரல் கறியும் சாப்பிட்டன். வேற என்னதான் செய்யிறது. இப்ப இங்க இதெல்லாம் சாதாரணமா போயிட்டு. சுட்ட மா, கொண்ட மா, அடக்கின மா, நம்மட பாட்டுல இருந்தமா எண்டு எல்லாரும் மாறிக்கிடக்கிறாங்க.

இண்டைக்கு அறுக்குறதுக்கு எண்டு கட்டிவைச்ச கோழிய மனிசிட தம்பி கொண்டு போறான். பள்ளிவாசல் மோதினார்தான் (தொழுகைக்கு அழைப்பவர்) அறுக்குறவர். இண்டைக்கு பகலைக்கும் நல்ல புடிதான்.

மனிசியும் மாமியும் மத்தியானச் சாப்பாட்டு வேலையில இறங்கிட்டாங்க. நம்ம சும்மா காய ஏலாது. வெளியில போவம். சைக்கிள மணலில தள்ளிக்கொண்டு 'வாரன் இங்கால பொயிட்டு' என்கிறன். 'லுகர் தொழுதுட்டு ஒடன வாங்க' மனிசிதான். லுகருக்குப் பொறகும் சாப்பாடுதானே.

திரும்பவும் மையத்து ஊட்டுக்குத்தான் போறன். ஆக்கள் இன்னமும் கூடியிருக்காங்க. லுகர் தொழுத உடனேயே மையத்தை அடக்கப்போறதா சொன்னாங்க. கொஞ்ச நேரம் நின்னுட்டுப்போவம்.

வெளியில நிக்கிறன். ஆமி ட்றக் ஒண்டு வருது. அந்தத் திருப்பத்துல நிப்பாட்டிட்டு மூன்டு பேர் இறங்கி வாறாங்க. எல்லாரும் அங்காலதான் பாக்கிறாங்க. ஒருத்தன் பெரியவன் போல. இடுப்புல பிஸ்டல் இருக்குது. எல்லாரும் வழிவிட வீட்டுக்குள்ள போய் மையத்தப் பாக்கிறான். பொறகு வெளியில வந்து அங்கிருந்த எல்லோரையும் கூப்பிடுறான். ஆக்கள் வட்டமாய்க் கூடுறாங்கள். ஒருத்தனையும் போக விடாதீங்க. சிங்களத்தில சொல்லுறத ஒருத்தன் மொழி பெயர்க்கிறான். 'என்ன நடந்திச்சி. யாருக்கு இதப்பத்தி தெரியும்' என்கிறான். எல்லோரும் ஒரு பொடியன காட்டுறாங்க. 'இவன்தான் அவன்ட கூட்டாளி காய்ச்சல் எண்டு மருந்தெல்லாம் எடுத்துக் கொடுத்தவன்' என்கிறார்கள். வாட்டசாட்டமாய் ஒத்தன் முன் தெரிகிறான்.

''அதால நாலுபேர் தொப்பிபோட்டுட்டு வந்து இந்த லேனுக்குள்ளால நுழைஞ்சி உள்ளுக்குப்போய் இரண்டு பேர் சுட்டாங்கள். சுட்டுட்டு வந்தவழியாலேயே போனாங்கள்' எண்டு விலாவாரியாகச் சொல்லுறான்.

இன்னும் என்னவெல்லாமோ கேக்கக்கேக்க ஊர் ஆக்கள் ஒவ்வொன்டாய்ச் சொல்லுறாங்க . நான் ஆக்களின்ற வாயப்பாத்துக் கொண்டு நிக்கிறன். ஆமிக்காரன் ஒவ்வொருத்தனாய் துருவித்துருவிப் பாக்கிறான்


ஒருத்தன்ட பெயரைச்சொல்லி ஆமிக்காரன் கேக்கிறான். எனக்கு பெயர் சரியா காதுல விழயில்ல. அந்தப்பொடியன்தான் முன்னுக்கு வாறான். 'எங்களோட வா' என்கிறான் ஆமி பெரியவன். ஆக்கள் ஆள் மாறி ஆள் பாக்கிறாங்க. ''யாரும் கேம்புக்கு வரவேண்டாம்'' என்கிறான் அவன். இவன் எல்லோரையும் பார்த்துட்டு அவங்களுக்குப் பின்னால போறான். ஆக்கள் குசுகுசுக்கிறாங்கள். புதுச்சாரனும், சட்டையும் போட்டிருக்கிற அவனை ட்றக்கின் பின்னால் ஏத்துறாங்க. புளுதி கிளப்பிக்கொண்டு போகுது அது.

செய்தி சேக்கப்போனவன் மாதிரி எல்லாத்தையும் பாத்துக்கொண்டு நிக்கிறன். என்ன நடந்து இருக்கும் எண்டு கொஞ்சம் கொஞ்மா படுது. ஆக்கள்ட கதையிலயும் வெளங்குது.

நேரா வீட்டத்தான் வாரன். 'என்ன நடந்திச்சி... அங்கதான் போனீங்களாக்கும்' என்கிறாள் மனிசி. 'குடிக்க ஏதும் தாவேன்' என்கிறன். 'இருங்க உம்மா கோல்மன்ஸ் கரைக்கிறா' என்கிறவள் கதை கேட்கிறா. எல்லாத்தையும் சொல்லுறன்.

''பாருங்க அவனை.....'' என்றவள் 'நம்மடவனளும்தான்' என்கிறாள்.

கோல்மன்ஸைக் குடிக்கிறன். அடுப்பில் கோழிக்கறி மனக்குது. தொழுதுட்டு வந்தா ஒரு புடி புடிக்கலாம். மையத்துக்கும் போகக் கெடக்காது. வெய்யில். சாப்பிட்டுட்டுப் படுக்கவேண்டியது தான். வேறு என்ன செய்யிறது'. என்னன்ன நடக்கபோகுது எண்டு யாருக்குத்தான் தெரியுது. 'பாங்கு சொல்ல மட்டும் லேசாச்சாய்வம்.'



# ஒரு பூவும் புயலும்

பெண்ணே!

சின்னச் சிறைக்குள்
சிலிர்த்துப்போன
உன்
ஊமை விழிகள் என்ன
உரைத்தன?

இரும்புக் கம்பிகளுக்குள்
இதயம் வேள்வித் தீயாய்
வெந்து கொண்டிருக்குமே!

நான்கு தினங்கள் தான்
நான்
அரசியல் கைதியாய்
அடைபட்டிருந்தேன்

யார் நீ
யாழ்ப்பாணப் பெண்ணா?

எத்தனை மாதங்கள்?

இளமையின் ஏக்கத்தை
இரும்புக் கூண்டுக்குள்
புதைத்து வைத்துக்கொண்டு
பதைத்து நின்றாயே!


என்ன
குற்றமிழைத்தாய்?

நெற்றியிலே பொட்டிட்டு
தெருவில்
நிமிர்ந்து நடந்தாயா?

காவலரண்களின் கடின
கேள்விகளுக்கு
கொச்சை சிங்களத்தில் பதிலை
கொட்டித் தீர்த்தாயா?
கவலைப்படாதே!
சந்தேக நபர் என்று
சட்டத்தின் பிடியில்
சிக்காமல் இருப்பதற்கு
நீ என்ன
சிங்களப் பெண்ணா?

வாயின் மொழி
வாழ்வின் உரிமையை
விலங்கிடச் செய்வதா?

பூந்தென்றல் நீ
புயலிடம் சிக்கி புதைந்து போக
மொழி என்ன உனக்கு
மரணப் பரிசா?



இனவாத இருளில்
பிணமாகிப் போகும்
இந்த தேசத்தின் போக்கில்
எரியும் திரியாகி
உன்னைப் போல்
எத்தனை இளசுகள்
சிறைகளின்
கோர இருளில்
குற்றுயிராய்க் கிடக்கும்!



காக்கிச் சட்டையின்
கனத்த கரங்களால்
உன் பெண்மையின்
பூவின் மென்மையை
காத்திட முடியுமா?


விலங்குகளோடும் உன்
விழியின் வசீகரம்
அன்று
வெள்ளியாய் ஒளிர்ந்தது!

விடுதலையின் வாய்ப்பாட்டை
உதடுகள்
உச்சரித்து நின்றன.

இன்று
எந்த முகாமில்
முடங்கிக் கிடக்கிறாய்?

வதை முகாம்களின்
புதை குழிகளில்
புதைந்திருக்கின்றாயா?

தங்கையே!
புரியாமல் நான்
தவித்துக்கொண்டிக்கிறேன்.



ஏ. அஸீஸ் நிலாருத்தீன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நான்காவது ஈரானியத் திரைப்பட விழா : "போரின் முகங்கள்"

எம்.கே.எம்.ஷகீப்




நான்காவது ஈரானியத் திரைப்பட விழா இம்முறை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டப திரையரங்கில் ஏப். 22 - ஏப். 28 வரை நடைபெற்றது. ஈரானிய 'பராபி (Farabi) சினிமா பவுண்டேஷன், ஈரானியத் தூதரக கலாசாரப் பிரிவு ஆகியவற்றின் அனுசரணையுடன் ஆசியத் திரைப்படச் சங்கம் (Asian Film Centre) இவ்விழாவை ஒழுங்கு செய்திருந்தது.

அண்மைக் காலங்களில் சர்வதேச திரைப் பட மட்டத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றுவரும் ஈரானியத் திரைப்படங்கள், இலங்கை ரசிகர்களின் அவதானிப்பைப் பெற்றிருப்பதையும் இதுவரை நடந்த விழாக்களிலிருந்து அறிய முடிகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் தூண்டு கோலாய் இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஒன்று திரைப்பட மட்டத்தில் கலை, தொழிநுட்ப ரீதியில் ஈரானியப் படங்களின் தரம், படவிழாக்களில் அது பெறும் இடம் ஆகியவற்றை முன்கொண்டு ரசிக மட்டம் உருவாகியமை. அடுத்தது, அதியுயர் அடிப்படைவாத நாடாகவும், பழமைவாத நாடாகவும் மேற்கு நாடுகளால் பட்டியலிடப்பட்டிருக்கும் ஈரான் 'என்ன படங்களைத் தான் தரப்போகின்றது பார்ப்போம்...' என்ற உந்துதல்.

இந்த இரண்டு காரணங்களோடும் இலங்கையில் நடைபெற்ற முதலாவது ஈரானியத் திரைப்பட விழாவில் பங்கு பற்றியவர்கள் காரணங்களுக்கப்பால், 'நல்ல திரைப்படங்கள்' என்ற பொதுமுடிவுக்கு வந்திருப்பதை பலருடன் கதைக்கிற போது அறிய முடிகிறது.

வழமையாக ஒவ்வொரு நாட்டினதும் திரைப்பட விழாக்களின் போது, அந்த நாட்டின் நல்ல படங்களை, அவர்களது கலாசாரங்களைப் பிரதிபலிக்கிற படங்களைத் தான் காண்பிப்பார்கள். ஈரானியப் படவிழாவிலும் அப்படித் தான். ஆனால் இம்முறை 'யுத்தகாலத்துப் படங்கள்' என்ற பொதுத் தலைப்பில் சில படங்களைக் காண்பித்திருந்தார்கள். யுத்தக் காலத்துப் படங்கள் என்றால் வெறும் சண்டைப் படங்களல்ல. அக்காலத்தில் நிகழ்கிற வெவ்வேறு நிகழ்வுகள் பற்றிய படங்கள். என்றாலும் முன்னைய படவிழாவில் இருந்த 'வெரைட்டி' இதில் இல்லையென்பது பலரும் சொல்லிக் கொண்டது தான். அத்துடன் இம்முறை படங்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய இன்னொன்று ஒரே நெறியாளரின் (இப்றாஹீம் ஹத்தாமிகியா) நான்கு படங்கள் காண்பிக்கப்பட்டமை.

ஈரானியப் படங்களை குறிப்பாக இம்முறை திரையிடப்பட்ட படங்களை சில வரலாற்று, கலாசாரப் பின்னணிகளோடு விளங்க வேண்டிய தேவையிருக்கிறது. 1978 ஈரானில் அயத்துல்லா கொமெயினியின் தலைமையில் இடம்பெற்ற இஸ்லாமியப் புரட்சியின் பின், ஈரான் இஸ்லாமிய கலாசாரப் பாதையில் மீளுருவாக்கம் பெறுகிறது. மேற்கின், குறிப்பாக அமெரிக்காவின் கலாசார, சியல் ஆதிக்கங்களைக் களைந்து முற்றிலும் வேறுபாதையில் செல்ல ஆரம்பிக்கிறது. இந்தப் பாதையில் பின்னர் அண்டை நாடான ஈராக்குடன் இடம் பெறும் பலவருட வளைகுடாப் போர் என்பவை இப்படங்களைப் பற்றி அறிய பின்னணியாக இருக்கின்றது.

புரட்சிக்குப் பின்னால் ஈரானில் எடுக்கப் பட்ட படங்கள், கலாசார வரம்புகளுக் குட்பட்ட படங்களாகவே அமைகின்றன. இவ்வரம்புகளிடையே மிக நல்ல படங்களையும் எடுக்க முடியும் என்று நிறுவிய நாடு ஈரான். அத்துடன் இப்படங்கள் மூலம் ஒரு பிரச்சார உத்தியையும் அது கைக்கொண்டு வருகிறது.

இம்முறை காட்டப்பட்ட படங்கள் ஓர் விடுதலை இயக்கம் தயாரிக்கின்ற பிரச்சாரப் படங்களின் வாடையை ஒத்தது. (ஈராக்கும் சினிமாத் துறையில் கால் பதித்திருக்கும் ஒரு நாடாயின் அதுவும் இது மாதிரிப் படங்கள் எடுத்திருக்கும் என நண்பர் ஒருவர் சுட்டிக் காட்டினார்.) எனினும் சினிமா என்ற ஊடகத்தை தொழிநுட்ப ரீதியாக பயன்படுத்தியிருக்கும் விதத்தில் தான் வித்தியாசமும், சிறப்பும் தெரிகிறது. இவ்வாறான யுத்தப் படங்களில் சிலது உண்மையிலேயே யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் எடுக்கப் பட்டவை என ஈரானிய தூதரக கலாசார நிலையத்துடன் தொடர்புடைய ஒருவர் தெரிவித்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

இனி படங்கள் பற்றிப் பார்ப்போம்.

முதலாவது காண்பிக்கப்பட்ட படம் அஹ்மத் ரிஸா தர்வீஷ் இயக்கிய Land of the Sun. மிகக் கடுமையாக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பிரதேசத்தின் முற்றுகையிடப்பட்ட வைத்திய சாலையிலிருந்து சில நோயாளிகளை வெளிக்கொண்டு செல்வதற்கு எடுக்கப்படும் பிரயத்தனமே இப்படம். கஸ்ரா எனும் வைத்தியரும், ஹானியா எனும் சமூக சேவகியுமே இப்படத்தின் பிரதான பாத்திரங்கள். எல்லாம் அழிந்த நிலையில், இருக்கின்ற ஒரு அம்புலன்ஸிலும், ஒரு ஜீப்பிலும் சில போராளிகளின் உதவியுடன் நோயாளர்களை அழைத்துச் செல்கிறார்கள். இவர்களுடன் ஓர் ஈராக்கிய இராணுவத்தினனையும் பணயக் கைதியாய் அழைத்துச் செல்கிறார்கள். செல்லும் வழியிலும் தாக்குதல்கள், இன்னல்களெனத் தொடர ஒவ்வொருவராய் மடிகிறார்கள். கடைசியில் வைத்தியர், சமூகசேவகி உட்பட ஐவரும், பேழையில் தூக்கிவரப்பட்ட சிறு குழந்தையும் எஞ்சுகிறார்கள். இவர்களும் பிரதான வீதியொன்றில் இருபக்கமாய்ப் பிரிகின்றார்கள். குழந்தையை ஹானியாவும், கஸ்ராவும் (மிகப்பயந்து போயிருந்த இவரை இறுதியில் சூழ்நிலை துப்பாக்கி ஏந்தச் செய்கிறது.) எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். கைதியும் இவர்களுடன் தான் வருகிறான். இறுதியில் இவர்கள் எதிரியின் எல்லையருகே தான் வருகிறார்கள். தப்பிக்க வழியில்லாத நிலையில் ஏரியில் இருக்கும் எதிரியின் சிறுபடகில் தப்பிச் செல்லுமாறு இவர்களுடன் ஆரம்ப முதலே வந்த கைதி சொல்கிறான். எனினும், நினைத்ததைப் போல் ஒன்றும் நடக்கவில்லை. ஏந்திய துப்பாக்கியைத் துடுப்பாக்கி படகு வலிக்கிறான். நகரவில்லை. துப்பாக்கியால் நகர்த்தக்கூட முடியவில்லை. தூக்கி எறிகிறான். துப்பாக்கிகளால் சிலவேளைகளில் ஒன்றுமேயில்லைப் போல். குண்டுத் தாக்குதலுக்குட்படும் படகிலிருந்து ஆற்றில் குதிக்கிறார்கள். குழந்தை இருந்த பேழையும் நீரில் அடித்துச் செல்லப் படுகிறது. பிரிந்த மூவரும் கைதியாகிறார்கள். இவர்கள் எஞ்சுகிறார்கள்.

இந்தப்படத்தின் ஆரம்பத்தில் இறைதூதர் மூஸா (Moses) பற்றிய குர் ஆன் வசனம் காண்பிக்கப்படுகிறது. 'பிர் அவ்ன்' (பாரவோன் மன்னன் பைபிளின்படி) மன்னனுக்கு அஞ்சி தன் குழந்தையை பேழையிலிட்டு ஆற்றில் விடுகிற சம்பவத்தை தொனித்தே இப்படம் பின்னப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த இரண்டு படங்களும் (The Immigrant, The Scout) யுத்த களத்துப் படங்கள். Immigrant என்பது தகவல் பரிமாறுவதற்காக அனுப்பப்படும் ஒரு சிறிய வானூர்தியை குறிக்கிறது. இதை அனுப்பித் தகவலறிந்து எதிரியின் எல்லை வரை சென்று தாக்குதல் நடத்தும் இளைஞர்களின் தியாகத்தையும், வீரத்தையும், நட்பையும் வெளிக்காட்டுகிறது படம். இந்த வானூர்தியை தயாரித்துச் செலுத்துபவர்களின் தொழிநுட்பச் செயற்பாடுகளைவிட அவர்களின் மனோநிலைகளை வெளிப்படுத்துவதையும், சிந்தனாச் செயற்பாடுகளையும் கொண்டு வருவதே இப்படத்தின் தொனியாக இருக்கிறது. இயக்குனரும் அவ்வாறு தான் இப்படம் பற்றி தன் கருத்தையும் கூறியுள்ளார்.

The Scout தொடர்பு துண்டிக்கப்பட்ட ஒரு போர்த்தளத்துக்கு தனியனாகச் சென்று அங்கிருப்பவர்களுடன் இணைந்து சண்டையிட்டு மடியும் ஒருவனது கதை. இதுபற்றி இயக்குனர் இப்படிக் குறிப்பிடுகிறார். 'இப்படம் யுத்தக் கலாசாரம் பற்றிப்பேசுகிறது. யுத்தக்களத்து நிலைமைகளை விவரணமாகச் சொல்ல முயன்றுள்ளேன்'. இந்தப் படத்தின் இறுதியில் வரும் சம்பவம் அதிக ரசிகர்களுக்கு அதிருப்தியாய் உள்ளது. எதிரிகள் புடை சூழ தனியே அகப்படுகிறான் இளைஞன். சிறிது நேரத்தில் எல்லோரும் இறந்து கிடக்கிறார்கள். எப்படி இறக்கிறார்கள் என்பது காட்டப் படவில்லை. அற்புதமாய் நிகழ்கிறது. யுத்தக்களங்களில் அற்புதங்கள் நிகழ்வதுண்டு என்ற இஸ்லாமிய நம்பிக்கையை இது வெளிப்படுத்துவதாய் இருக்கலாம் எனத் தான் நினைக்க வேண்டியுள்ளது.

காட்டப்பட்ட படங்களில் நல்ல படத் தர வரிசையில் Minoo Watch Towerக்கு மூன்றாம் இடத்தைக் கொடுக்கலாம்.

''மினூ பாரசீக மொழியில் மூன்று அர்த்தங்களுடையது. (1)ஈராக் அருகேயுள்ள ஈரானியத் தீவொன்றைக் குறிக்கிறது. (2) மினூ என்றால் சொர்க்கம். (3) பெண்களுக்குரிய பெயர். யுத்த காலத்தில் அதிக கண்காணிப்புக் கோபுரங்கள் கட்டப் பட்டிருந்தன. இன்றும் அவைகளில் சில இந்தப் பூமியில் சின்னங்களாய் உள்ளன. 'மினூ வொச் டவர்' - கோபுரங்களினதும், மினூக்களினதும் கதை'' - என்கிறது படம் பற்றிய குறிப்பு.

'கொன்னூஸ்' எனும் பறவை பற்றிய கற்பனைக் கதையின் திறந்த வியாக்கியானம் தான் இந்தப்படம், என்கிறார் இயக்குனர். நல்ல முறையில் எடுக்கப் பட்டிருக்கிறது படம். இறந்த, நிகழ்காலச் சம்பவங்களை சமதளத்தில் படம் பிடித்திருப்பது வித்தியாசமாகவே இருக்கிறது.

அடுத்த படம் Leily is With me. ஒரு நகைச்சுவைப்படம். ஈரானிய மக்கள் அனைவருமாக போர்க்களத்தில் இருக்கின்றவேளை, பயந்த, ஒளிந்து போர்க்களம் போகாதவர்களுக்கு 'அடி' கொடுக்கும் வகையில் எடுக்கப்பட்ட படம். களத்துக்குப் போகப்பயந்த ஒருவர் எதிரியின் எல்லைக்கு அப்பால் வரை சென்று RPG தூக்க வேண்டிய நிலைக்கு ஆளாவதை சுவைபடச் சொல்லும் படம்.

அடுத்தபடம் தான் உச்சத்தைத் தொட்டு, எல்லோரையும் சிலிர்க்க வைத்த படம். Scent of Joseph's Shirt. இறந்து விட்டதாக எல்லோரும் சொன்ன மகனை தந்தையும், இன்னும் இருக்கிறார் என்று இறந்த சகோதரனை தங்கையும் எதிர்பார்த்து நிற்கும் கதை. போர்க்களம் சென்றிருப்பவர்களுக்காய் உறவினர்கள் எவ்வாறு ஏங்குகிறார்கள் என்பதையும், சில நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் வீண்போவதில்லையென்பதையும் தத்ரூபமாக சொல்கிறது படம். இதில் பிரதான பாத்திரமேற்பவர்கள் நடிப்பு அபாரம்.

தன் சகோதரன் இறந்து விட்டான் என்று உணர்ந்த பின்னும், தனது மகன் வந்தது போல் உனது சகோதரனும் வருவான் என்ற நம்பிக்கையை, இழப்பின் தவிப்பை, கிடைப்பில் மகிழ்வை அந்தப் பெண்ணுக்கு ஏற்படுத்துவதில் தன் நடிப்புத் திறமையை வெளிப்படுத்துகிறார் வயதான பாத்திரமேற்று நடிக்கும் நடிகர்.

இங்கு தலைப்பு மொழிமாற்றம் பற்றி ஒரு குறிப்புச் சொல்ல வேண்டும். குர் - ஆனில் கூறப்பட்டிருக்கும் சில இறை தூதர்களின் பெயர்கள் பைபிளிலும் உள்ளன. அவற்றுக்கு பொதுவான மொழிபெயர்ப்பு வழங்கப்படுகிறது. உதாரணமாக மூஸா = மோஸஸ், ஈஸா= ஜீஸஸ், யூஸுப்= ஜோஸப், இதே பெயரை சாதாரண ஒருவர் கொண்டிருந்தால் அதற்கு பைபிளின் மொழி பெயர்ப்பு வழங்கத் தேவையில்லை. படத்தில் வயதானவரின் மகனின் பெயர் யூஸுப். இது சாதாரண, ஒருவரைச் சுட்டுகிற பெயர். இது குர் - ஆன் குறிப்பிடும் யூஸுபாகவோ பைபிள் குறிப்பிடும் ஜோஸப்பாகவோ இருக்க வேண்டியதில்லை. ஆரம்பத்தில் தலைப்பு குழப்பம் [illegible]கிறது.

இன்னொரு புறம் பார்க்கையில், வரலாற்று (யூஸுபின் = ஜோஸப்பின்) கதையை ஞாபகப்படுத்துவதற்காய் இவ்வாறு பயன்படுத்தியிருக்கலாம் என்றும் தோன்றுகிறது. சகோதரர்கள் யூஸுபை பாழ் கிணற்றில் தள்ளிவிட்டு, அவரின் சட்டையில் ரத்தத்தைப்பூசி தங்கள் சகோதரனை ஓநாய் கொன்று தின்று விட்டதாக யூஸுபில் அதிக அன்பு செலுத்தும் தந்தையிடம் சொல்கிறார்கள். இதை அவர் நம்பவில்லை. அவன் உயிரோடிருக்கிறான் என்றே நம்பிக் கொண்டிருக்கிறார். அப்படித்தான் நடக்கிறது. இதுதான் படத்தின் கதையாகவும் விரிகிறது. (விளக்கத்திற்காய் குர் - ஆனில் யூஸுப்பற்றியுள்ளதையும், பைபிளில் ஜோஸப்பற்றியுள்ளதையும் வாசிக்க.)

கடைசிப்படம் Fire in the Harvest. ஈரானில் வாழும் அராபியர்கள் பற்றிய படம். அராபிய முதலாளி ஒருவன் ஈராக்கியர்களுடன் இணைந்து கிராமத்தையும், மக்களையும் பணயம் வைக்கிறான். என்றாலும், மக்கள் ஈரானியப் போராட்டத்துக்கே ஆதரவளிக்கிறார்கள். இவர்களில் இருந்த ஒரு இளைஞனும், சிறுவனும் ஆயுதம் ஏந்துகிறார்கள். இதில் பிரதான பாத்திரம் முதலாளியின் எருமைகளை மேய்க்கும் சிறுவன் தான். யுத்தம் அவனை எவ்வாறு உள்வாங்கி ஆயுதம் தூக்க வைக்கிறது என்பது தான் படம். இரண்டாமிடத்தில் வைக்கலாம்.

பொதுவாக ஈரானியப் படங்களில் ஈரானியத் தனித்துவத்தூடே சர்வதேசத் தரம் தெரிகிறது. குறைந்த பாத்திரங்களூடே அலுப்புத்தராத வகையில் கதை நகர்வதும் சிறப்பம்சமாகவே தெரிகிறது. 'இந்தப் படங்களில் ஒன்றும் யுத்தத்தின் அவலத்தைக் காட்டி மனித அழிவு யுத்தம் வேண்டாம்' என்பதை ஒலிப்பதாக இல்லை என்று நண்பர் ஒருவர் சுட்டிக் காட்டியதும் இங்கு கவனிக்கத்தக்கது. என்றாலும் ஈராக்குடன் இருந்த ஈரானியச் சூழல் அதற்கு வழிவகுக்கவில்லை போல் தான் தெரிகிறது. ஈரான் மட்டுமல்ல ஆக்கிரமிப்புக்கெதிரான எந்தப் போராட்டச் சக்தியினதும் பார்வை போராட்டத்தை நோக்கி மக்களை ஈர்ப்பதாகவே இருக்கும். இஸ்லாமியத் தளத்தில் போராட்டத்துக்கு இன்னொரு பார்வையும் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எதுவாக இருந்தாலும் சினிமா என்றி ரீதியில் வெற்றி பெற்றுள்ளது தான் சிறப்பு.

→ 17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒன்றுபடும் பார்ப்பனியம்! பார்ப்பனியம்! பார்ப்பனியம்! பார்ப்பனியம்! பார்ப்பனியம்!

எஸ். வி. ஆர்.

(இறுதிப்பகுதி)

2

இனி 'பார்ப்பனன் - பாம்பு' விஷயத்திற்கு வருவோம். பி.ராமமூர்த்தி எழுதுகிறார்: ''பிற்காலத்தில் அவர் (பெரியார்) பிராமணர் எதிர்ப்பிலும் இறங்கியிருக்கின்றார். இந்த எதிர்ப்பு 'பாம்பையும் பார்ப்பனனையும் கண்டால் பாம்பை விட்டுவிட்டு பார்ப்பனனை அடி' என்று பேசும். அள்வுக்குப் போயிற்று'' (ப.153) இது நாக்கில் நரம்பில்லாமல் பேசுவதுதான் என்று பி. ராமமூர்த்திக்கே உறைத்திருக்குமோ என்னவோ. அதனால் தான் அவர் அடுத்த பக்கத்திலேயே (ப.154) எழுதுகிறார். 'ஈவெ.ரா. பெரியாருக்கு அந்தக்காலத்தில் சாதிபாகுபாடுகளையும், வர்ணாஸ்ரமத்தையும், அதில் பிராமணன் மற்றெல்லாரையும் விட பிறப்பால் மேலோன் என்றுள்ள பார்ப்பனியத்தின் மேல்தான் கடுங்கோபமும், ஆவேசமும் தவிர, தனிப்பட்ட முறையில் எந்தப் பிராமணனிடமும் பகைமையோதுவேஷமோ இருந்ததாகச் சொல்ல முடியாது. சொல்லப் போனால் பல பிராமணர்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் அவருடைய நம்பிக்கைக்குப்பாத்திரமான நண்பர்களாக இருந்தனர். இராஜாஜி வாழ்நாள் பூராவும் அவருடைய நெருங்கிய நம்பிக்கைக்குரிய நண்பர்''.

பார்ப்பனன் - பாம்பு பற்றிய விஷயம் ஒரு வடநாட்டுப் பழமொழி என்பதையும், ஏறத்தாழ இதே போன்ற விஷயம் பெரியாருக்கு ஏற்றிச் சொல்லப் பட்டதைப் பெரியார் ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்பேயே மறுத்திருக்கிறார் என்பதையும் கூறி சி. சிவசேகரத்தின் '40 ஆண்டு சந்தேகத்தையும் 'சரிநிகரி'ல் ஏற்கெனவே தீர்த்து வைத்திருப்பதுடன், திராவிடர் கழகத்தின் அதிகார பூர்வமான/ அதிகார பூர்வமற்ற பேச்சாளனோ பிரதிநிதியோ நான், அல்லன் என்றும், இன்று வரை நான் மார்க்சியவாதியாகவே இருக்கிறேன் என்றும் ஏற்கெனவே கூறியுள்ளேன். பெரியாரின் கூற்றுகளுக்கும், திராவிடர் கழகத்தினர் கூற்றுகளுக்குமிடையே வேறுபாடு காண்பவர்கள், அதற்கான விளக்கத்தைக் கேட்டுப் பெற வேண்டியது கி. வீரமணியிடமிருந்துதானேயன்றி என்னிடமிருந்து அல்ல என்றும் கூறியுள்ளேன். அப்படியிருக்க, ''இயக்கத்தின் தலைவர் என்கிற வகையில் இதில் பெரியாருக்கு எந்தப் பொறுப்புமே கிடையாதா?'' என்று என்னை அதட்டுகிறார் சூரியசந்திரன்! நான் அவரிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன்: பி. ராமமூர்த்தியின் நூலிலுள்ள அபத்தங்கள், ஆகாசப் புளுகுகளை கி. வீரமணி பட்டியலிட்டுக் காட்டியுள்ளாரே (அவற்றில் சிலவற்றை மேலே குறிப்பிட்டுள்ளேன்) - அவற்றுக்கான பொறுப்பை பி. ராமமூர்த்தியோ, சி.பி.எம் - இன் பொலிட்பீரோவோ ஏற்றுக்கொண்டதுண்டா? 'தீக்கதிர்' 22-2-84 இதழில் வீரமணி மீது அவதூறு பொழிந்து தள்ளியதுதான் பி.ஆரால் செய்ய முடிந்ததெல்லாம். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோர் உயிரோடு இருப்பதாக வைத்துக்கொள்வோம். 'மார்க்சிஸ்ட்' என்கிற பெயரில் இயங்குகிறதே ஒரு கட்சி, அதனுடைய சமூக ஜனநாயகத் திருத்தல் வாதத்திற்கு அவர்கள் மூவரும் பொறுப்பேற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

'பி. ராமமூர்த்தி: ஒரு போராட்டச் செம்மலின் வாழ்க்கைப் பயணம்' என்ற தலைப்பில் அவருடைய கட்சியைச்சேர்ந்தவராலேயே எழுதப்பட்ட ஒரு நூலிலிருந்துதான் 'தகவல்'களையும் மேற்கோள்களையும் சூரியசந்திரன் எடுத்துக்காட்டுகிறார். ஆனால் நானோ, என்னால் ஆதாரம் காட்டும் நூலின் ஆசிரியரான கி.வீரமணியின் அன்புக்கோ, ஆதரவுக்கோ பாத்திரமானவனல்லன். 'இனத்துரோகி' என்று அவரது பத்திரிகையால் பட்டஞ் சூட்டப்பட்டவன். எந்த அரசியல் (கட்சி) நோக்கமும் எனக்குக் கிடையாது. ஓரிரு நாடாளுமன்றச் சீட்டுகளுக்காகச் சீரழிந்த பூர்ஷ்வாக் கட்சிகளுக்கு வால் பிடித்துத் திரியும், அவற்றின் அரசியல் தரகர்களாகச் செயல்படும், சரிந்து விழுந்துள்ள காங்கிரசைத் தூக்கி நிறுத்தும் வேலையைச் செய்து கொண்டிருக்கும் ஒரு 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முன்னாள்; இன்னாள் தலைவர்களைத் தூற்ற வேண்டிய தேவை எனக்கில்லை.

பி.ராமமூர்த்தியின் திருமணம் பற்றிக் குறிப்பிடும் சூரியசந்திரன், பி.ராமமூர்த்தியைப் போலவே முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்: ''இந்தத் திருமணம், சீர்திருத்தத் திருமண விளம்பரம் இல்லாமலே நடந்தது'' என்கிறார். (சுயமரியாதை இயக்கத்தினரை மறைமுகமாகக் கிண்டல் செய்யும் வாசகம் இது.) அடுத்த வரியிலேயே அந்தத் திருமணமும், விளம்பரம் செய்யப்பட்ட நிகழ்ச்சி தான் என்பதை ஒப்புக்கொள்கிறார். ''இதற்கான வரவேற்பு நிகழ்ச்சியைக் கட்சித்தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்''. காவல்துறையினரின் பாலியல் வன்முறைக்கு இலக்கான பத்மினி என்ற பெண்மணியை சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த ஒரு இளைஞர் திருமணம் செய்து கொள்ள முன்வந்ததைப் பத்மினிக்கு அவர் ''மறுவாழ்வு கொடுக்க வந்த''தாக விளம்பரப் படுத்தி, பாலியல் வன்முறைக்கு ஆளாகிய பெண்களைக் காட்சிப் பொருட்களாகத் தங்கள் மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் காட்டி வரும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 'விளம்பரம்' பற்றி 'கொமண்ட்' அடிக்கக் கூடாது.

3

கலப்புத்திருமணம், சாதியுணர்வையொழிக்க, சாதிகளை ஒழிக்க பல வழிமுறைகளில் ஒன்றாக இருக்க முடியுமேயன்றி அதுவே சாதியொழிப்பாகிவிடாது. அதன் மூலமாக மட்டுமே ஒருவர் தனது சாதியுணர்வையும், தனது பார்ப்பனியத்தையும் பார்ப்பனஜாதி அபிமானத்தையும் நீக்கிக்கொள்ளமுடியாது. ''இடையறாமல் ஒருவர் தன்னைப்புரட்சிகரமாக மாற்றிக்கொள்ளுதல்'' என்று மாவோ கூறியதைப்போலத்தான் பார்ப்பனியத்தை நீக்கிக் கொள்ளுதல் என்பதும். கலப்புத் திருமணம் செய்து கொள்வதாலும், சிக்கன் பிரியாணி சாப்பிடுவதாலும் மட்டுமே ஒரு பார்ப்பனரால் பார்ப்பனத் தன்மையை நீக்கிக்கொள்ள முடியாது என்பதற்கு சீரிய எடுத்துக்காட்டுகளாக இருப்பவர்கள் மணி சங்கர அய்யரும், சுப்பிரமணியம் சுவாமியும் ஆவர் - காலஞ்சென்ற இந்திரா காந்தியும் , ராஜீவ் காந்தியும் போல. சூரிய சந்திரனின் 'புரட்சிகர அனுபவம்' எனக்கில்லாமலிருக்கலாம். ஆனால் எனது வாழ்க்கை அனுபவம் பெரியாரின் கூற்றிலுள்ள உண்மையை உணருமாறு செய்துள்ளது.

''இராஜாஜி பஞ்சமர் வீட்டில் சாப்பிடுவார்; சங்கராச்சாரி பஞ்சமனைக் கண்டதற்குக் குளிப்பார்;சிலர் நிழல் பட்டதற்குக் குளிப்பர்; சிலர் தொட்டதற்குக் குளிப்பர். 'பஞ்சம்' ஆணையோ பெண்ணையோ திருமணம் செய்துகொண்டு பார்ப்பனராகவே இருப்பர்'' (விடுதலை- 4.3.69)

பி.ராமமூர்த்தி தனது நூலில் ஏராளமான இடங்களில் அறிந்தோ அறியாமலோ தனது ஜாதி அபிமானத்தைக் காட்டியுள்ளதைக் கி. வீரமணியின் நூலை (குறிப்பாக 'பி.ராமமூர்த்தியின் ஜாதிவெறி' என்ற அத்தியாயத்தை) அக்கறை எடுத்துப் படிக்க முயற்சி செய்யும் மார்க்சியர்களால் புரிந்து கொள்ளமுடியும்.

இது தொடர்பாக ஓரிரு விஷயங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனெனில் பி.ராமமூர்த்தியின் நூலில் சில பக்கங்களில் ஆர்.எஸ்.எஸ். வாடை அடிக்கிறது என்ற எனது கூற்றுக்கு ஆதாரம் காட்டவேண்டுமல்லவா? 'பிராமணச்சடங்குகளும் பகுத்தறிவுவாதங்களும்' என்ற அத்தியாயத்தில் 226ம் பக்கத்தில் பி.ராமமூர்த்தி எழுதுகிறார்: ''இந்து மதத்தினால் அனுஷ்டிக்கப்படும் வைதீகச் சடங்குகளையும், மூட நம்பிக்கைகளையும் பிறப்பினால் மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற பாகுபாடுகள் அமுலாக்கப்பட்டு வருவதையும், அண்ணாதுரை அவருக்கே உரித்தான நல்ல பாணியில் சாடியிருக்கிறார். இது முற்றிலும் சரி. ஆனால் மூட நம்பிக்கைகள் என்பதைப் பொறுத்தவரையில் அவை இந்து மதத்தில் மட்டுமா இருக்கின்றன? கிறிஸ்தவ மதத்தில் இல்லையா...? பூமி உருண்டை வடிவமுள்ளது என்று மேலை நாடுகளில் முதன் முதலில் கண்டுபிடித்தவர் கலிலியோ. அதற்காக அவரைக் கழுவிலேற்றினார்கள்'' (இத்தாலியிலும் கூட கழுமரம் இருந்தது என்பது பி.ஆரின் கண்டுபிடிப்பு.)

ஒரு நாட்டில் எந்த மதக்கொள்கை பெரும்பான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோ, எந்த மதம் ஆதிக்க மதமாக உள்ளதோ அதை முதன்மையான குறியிலக்காகக் கொள்வதுதானே இயல்பு? இந்தியாவிலும், தமிழகத்திலும் கிறிஸ்தவம், இஸ்லாம், சீக்கியம், பௌத்தம் முதலியன சிறுபான்மை மதங்கள். எனினும் பெரியாரின் இயக்கம் சிறுபான்மை மத மூட நம்பிக்கைகளை விமர்சிக்காமலில்லை.

ஆனால், இந்து மதத்தையும் பார்ப்பனியத்தையும் விமர்சிப்பவர்களைப் பார்த்து இந்து முன்னணி - ஆர்.எஸ்.எஸ். இராமகோபாலன்கள் கேட்பதுவும் இதுதான்: ''முஸ்லிம்களின் குரானை ஏன் விமர்சிக்க மாட்டேன் என்கிறீர்கள்? பைபிளை ஏன் விமர்சிக்க மறுக்கிறீர்கள்? இந்து மதத்தில் மட்டும்தான் மூட நம்பிக்கை உள்ளதா?''.

மனுநூல் பற்றிய பி.ராமமூர்த்தியின் கருத்து இது: ''மனுதர்மத்தை மற்றவர்கள் மிகவும் சாதாரணமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அதில் பாராட்டப்படவேண்டிய அம்சங்களெல்லாம் நிறைய இருக்கிறது''. காங்கிரஸ்காரர்கள் கொண்டு வர இருந்த சட்டம் பற்றிக் கூறுகிறார்: ''இந்தக்கடன் நிவாரணச் சட்டம், மனுஸ்மிருதியில் கூறப்பட்டுள்ள பாம்டுபாட் என்ற கடன் விஷயமான தத்துவத்தை அப்படியே எடுத்துக்கொண்டது. மனுஸ்மிருதி பார்ப்பனியத்தை நிலைநாட்டுவதற்காக எழுதப்பட்ட சட்டநூல் என்பது முற்றிலும் உண்மை. அதற்காக அதில் கூறப்பட்டுள்ள இந்த நல்ல தத்துவத்தையும் கைவிட்டு விடலாமா என்பதைத் திராவிடக் கழகத்தினருக்குச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும்'' (ப.123). அதாவது மலத்தில் அரிசி பொறுக்கச் சொல்கிறார் பி.ஆர்.

பி.ராமமூர்த்தியின் நூலைத் திறனாய்வு செய்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' மதுரைப் பதிப்பில் ஏ.கோபாலன் என்பார் (அவரும் பிறப்பால் பார்ப்பனர்) எழுதிய மதிப்புரையின் சில பகுதிகள் கீழ்வருமாறு. ''தி.க., தி.மு.க.வின் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கைகளை எதிர்க்கப்புகும் ராமமூர்த்தி தனிப்பட்ட சில பார்ப்பனர்களின் தொண்டுகளை மிகைப்படுத்திக் கூறியுள்ளார். இது அவர் எடுத்துக்கொண்ட வழக்கிற்குத் தேவையற்ற ஒன்றாகும். இதற்கு உதாரணமாக ஜமீன்தாரி ஒழிப்புப் பற்றிக்குறிப்பிடுகையில் பார்ப்பனர்களிடம் முற்போக்கு எண்ணங்கள் உள்ளன எனக்காட்டுவதற்கு மனுதர்ம நூலிலிருந்து ஒரு செய்யுளை எடுத்துக் காட்டாகக் காட்டுகின்ற அளவிற்குச் செல்வதைக் காட்டலாம். மேலும் பார்ப்பனர் பலர் தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்குச் சென்று விட்டதால் தமிழ் நாட்டில் பார்ப்பனிய எதிர்ப்பு என்பது பொருளற்றது என்று உரிமை கொண்டாடும் பி.ராமமூர்த்தி, அதற்கு எவ்வித புள்ளிவிபரமும் காட்டவில்லை..... சந்தேகிக்க முடியாத கம்யூனிஸ்டாக ராமமூர்த்தி இருந்தாலும் அவர் பிறப்பால் பார்ப்பனராக இருப்பது அவரது அணுகுமுறையைப் பெரிதும் பாதித்துள்ளது. எனவே அவரது முயற்சிகள் சந்தேகத்துக்குரியவையாகின்றன...'' (வீரமணி நூல். 567-568).

பி.ராமமூர்த்தியின் ஜாதி அபிமானம் குறித்த வேறு சில தகவல்கள், தோழர் வ. கீதாவும் நானும் எழுதியுள்ள 'பெரியார்: சுயமரியாதை சமதர்மம்' நூலிலும், மிக அண்மையில் வெளிவந்துள்ள எனது, 'பெரியார்: ஓகஸ்ட் 15' நூலிலும் தக்க ஆதாரங்களுடன் - 'மார்க்சிஸ்ட்' தோழர்களின் Self Evident Truths போலல்லாமல் - தரப்பட்டுள்ளன.

பார்ப்பனியம் என்ற கருத்தாக்கம் பார்ப்பனரின் நடைமுறைகள், நெறிகள் ஆகியவற்றினைக்குறிப்பதில் தொடங்கி, இந்தியத் தேசிய அரசியலையும் பார்ப்பன - பனியா இந்து - இந்திய தேச அரசின் கருத்தியலையும் குறிக்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. அதனால்தான் இந்திய இராணுவம் ஈழத்திற்கு அனுப்பப்பட்டதையும், அது அங்கு நடத்திய கொடுஞ்செயல்களையும் ஆதரித்து, நியாயப்படுத்தியவர்களும் இயற்கை நீதிக்கும், மனித உரிமைகளுக்கும் முரணாக 26 பேருக்குத் தூக்குத்தண்டனை வழங்கியதைப் பாராட்டுபவர்களும் பார்ப்பனியர்களே. இந்தப் பார்ப்பனியர்களிலும் கூட முதன்மையானவர்களாகவும், முக்கியமானவர்களாகவும் இருப்பவர்கள் பார்ப்பனர்கள்தாம். சோ, மாலன், என்.ராம் போன்ற பிரபல பத்திரிகையாளர்கள் தங்கள் 'கருத்தியல்'களைக் கடந்து ஒன்றுபட்டு நிற்பது இத்தகைய விஷயங்களில்தான். ○

*பார்ப்பனியம் என்ற கருத்தாக்கம் பார்ப்பனரின் நடைமுறைகள், நெறிகள் ஆகியவற்றினைக்குறிப்பதில் தொடங்கி, இந்தியத் தேசிய அரசியலையும் பார்ப்பன - பனியா இந்து - இந்திய தேச அரசின் கருத்தியலையும் குறிக்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. அதனால்தான் இந்திய இராணுவம் ஈழத்திற்கு அனுப்பப்பட்டதையும், அது அங்கு நடத்திய கொடுஞ்செயல்களையும் ஆதரித்து, நியாயப்படுத்தியவர்களும் இயற்கை நீதிக்கும், மனித உரிமைகளுக்கும் முரணாக 26 பேருக்குத் தூக்குத்தண்டனை வழங்கியதைப் பாராட்டுபவர்களும் பார்ப்பனியர்களே. இந்தப் பார்ப்பனியர்களிலும் கூட முதன்மையானவர்களாகவும், முக்கியமானவர்களாகவும் இருப்பவர்கள் பார்ப்பனர்கள்தாம். சோ, மாலன், என்.ராம் போன்ற பிரபல பத்திரிகையாளர்கள் தங்கள் 'கருத்தியல்'களைக் கடந்து ஒன்றுபட்டு நிற்பது இத்தகைய விஷயங்களில்தான்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## நூல் விமர்சனம்

# ஈழத்தவர் வரலாறு : வரலாற்றின் தவறுகள்!

ஈழத்தவர் வரலாறு
கலாநிதி க.குணராசா

பூபாலசிங்கம் பதிப்பகம்
விலை ரூபா. 200.00

நிர்வாகத்துறை, கல்வித்துறை, இலக்கியத்துறை ஆகிய முத்துறைகளில் தன் திறனை ஆழப்பதித்ததன் மூலம் தமிழ்ப் பேசும் உலகினால் நன்கு அறியப்பட்டவரான'' கலாநிதி குணராசாவின் ''நல்லை நகர் நூல்'' என்ற மாபெரும் வரலாற்று ஆய்வு நூலைப் பூபாலசிங்கம் புத்தகசாலையினர் வெளியிட்டதினால் ஏற்பட்ட இனிப்பான அனுபவத்தின் காரணமாக அதே ஆசிரியரின் இரண்டாவது வரலாற்று ஆய்வு நூலான ''ஈழத்தவர் வரலாறு'' என்ற நூலைத் தமிழ் கூறு நல்லுலகிற்குச் சமர்ப்பித்துள்ளனர். காலத்தின் தேவையை நிறைவு செய்யக் கூடிய இத்தகைய வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆசிரியர் முற்றிலும் ஏன், பல வகைகளிலும் தகுதியானவர் என வெளியீட்டளாரான ஸ்ரீதர் சிங் சான்று வழங்கியுள்ளார். அதற்கு மேலாக, மெய்மையை முன் வைக்க நினைக்கும் வரலாற்று மாணவன் ஒருவனுக்குள்ள உரிமையைப் பூரணமாக எடுத்துக் கொண்டேன் என முன்னுரையில் குறிப்பிடும் புவியியல் மாணவனான குணராசா. புத்தகத்தினைப் படிக்கப் போகும் பெருமக்கள் சில இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்று எச்சரிக்கையும் செய்கிறார்.

அறிவு பூர்வமாகவும், ஆய்வு பூர்வமாகவும் தமிழ் மக்களதும், தமிழ் மன்னர்களினதும் வரலாற்றை இந் நூல் சித்திரிக்கின்றது என்ற ஸ்ரீதர் சிங்கின் செப்புரையைக் கேட்டு ஆர்வமுடன் படிக்கும் வாசகர்கள் குணராசா கூறுவது போன்று சில கசப்பான விடயங்களை ஜீரணிக்க வேண்டிய சங்கடத்தையே அடைந்து கொள்வார்கள். யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் சிறந்த அச்சுப் பதிப்புடன் 184பக்கங்களுடன் இவ் ஈழத்தவர் வரலாறு என்ற நூல் வெளிவந்துள்ளது.

''வரலாறு என்ற நிலையைக் கடந்து வரலாற்று ஆய்வு'' என்ற உயர் நிலைக்குச் சென்றுள்ள ஈழத்தவர் வரலாறு என்ற இந்நூலில் நொய்தலான பிணைப்புக்களைக் கண்டறிந்து வரலாற்றுச் சங்கிலியை முழுமையாக்குகின்ற ஒரு பணியைச் செய்த வரலாற்று அறிஞராகக் குணராசா தன்னை இனங் காட்டுகின்றார். தனது நூலில் மூன்று தலைமுறையினரான வரலாற்றறிஞர்களை இனங்காணும் நூலாசிரியர் இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் தமிழ் மன்னர்களதும், அவர்கள் சார்ந்த மக்களதும் முதன்மை சரிவரக் கணிப்பீடு செய்யப்படவில்லை எனக்குறிப்பிடுகிறார். அப்படியாயின் மூன்று தலைமுறை அறிஞர்கள் இதுவரை செய்யாததை இப்பொழுது தான் செய்துள்ளதாகக் கூறுகின்றாரா? இவர் பாராட்டும் மூன்று தலைமுறை அறிஞர்கள் எவரும் இவரைப் போல் ''வரலாறு என்பது இனப் போராட்டங்களின் விளைவே'' எனக் கூறியதாகத் தெரியவில்லை.

தமிழர்களான இவர்களைத் தவிர இம் மூன்று தலைமுறை சார்ந்த வரலாற்றை அறிவார்ந்த தளத்தில் நின்று ஆராய்ந்த எத்தனையோ சிங்கள வரலாற்றறிஞர்கள் உள்ளனர். லெஸ்லி குணவர்த்தன, லியனகமகே, சிறிவீர போன்ற வரலாற்று ஆய்வாளர்கள், வரலாற்றிலிருந்த சிங்களச் சார்பை எதிர்த்து இலங்கை வரலாறு பற்றிய விஞ்ஞான பூர்வமான நிலைப்பாட்டை முன்வைத்துள்ளது பற்றிய எவ்வித பிரக்ஞையுமின்றி ஆசிரியர் இந் நூலை எழுதியுள்ளார். இந் நூல் ஒரு அதீத ஆய்வு என்பதினால் இத்தகைய விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லையோ?

''வரலாறு என்ற நிலையைக் கடந்து, வரலாற்று ஆய்வு என்ற உயர்நிலைக்கு இந்நூல் சென்றுள்ளது.'' (பக்கம் -VI) எனத் தன்னைத்தானே மதிப்பீடு செய்து கொள்ளும் நூலாசிரியர், முற்றாகவே சிற்றம்பலம், தனபாக்கியம், குணசிங்கம் போன்றோரின் வரலாற்று நூல்கள், கட்டுரைகளில் தங்கி நின்று தனது அனுமானங்களை நிறுவ முயலும் இந்நூலுக்கு ''வரலாற்று ஆய்வு'' என்ற பட்டம் எவ்வாறு பொருந்தும்? பண்டைய வரலாற்றை இவ்வாறான இரண்டாம் நிலைச் சான்றுகளைக் கொண்டு பாட நூலாக எழுதலாமேயன்றி ஒரு வரலாற்று ஆய்வைச் செய்ய முடியாது என்பதைப் புவியியல் மாணவரான குணராசாவுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பது உண்மை தான்.

முதல் ஏழு அத்தியாயங்களில் முக்கியு வரலாற்று நிகழ்வுக்கான ஆதாரமாகத் தமது கட்டுரைகளையே நூலாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். மூன்று தலைமுறை வரலாற்று அறிஞர்களுக்குள் அடங்காத இவரது வரலாற்றுக் கட்டுரைகளை முக்கிய சான்றாதாரங்களாக எவ்வாறு கருத முடியும்? நாகர்கள், திராவிடர்களே என்பதை மூன்று தலைமுறை வரலாற்றறிஞர்கள் நிறுவியுள்ளார்கள் எனக்கூறும் ஆசிரியர், நியாண்டல்தால் மனிதரின் சுவடொத்த பலாங்கொட எலும்புச்சுவடுகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது (பக்.13) தன்னையே அகழ்வாய்வு நிபுணராக மேற்கொள் காட்டுகின்றமை புல்லரிக்க வைக்கின்றது.

முக்கியமாக, பண்டைய மக்கள் குடியேறியிருந்த இடங்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது தமது கட்டுரைகளையும், சிறு நூல்களையுமே ஆதாரமாகக் குறிப்பிடுகின்றார். இலங்கை வரலாற்றறிஞர்களையும், நூல்களையும் எடுத்ததெற்கெல்லாம் மேற்கோள் காட்டும் ஆசிரியர், அதே வரிசையில் வைத்து எண்ணத் தக்கதாகத் தமது புவியியல் கட்டுரைகளையும் வைக்க முற்பட்டுள்ளார்.

மேற்கோள் என்ற விடயத்தை நோக்கும்போது குணராசாவின் ''மேற்கோள் கோட்பாடு'' என்னவென்று புரியவில்லை.

இவர் மேற்கோள் காட்டிச் செல்லும் பாணியைப் பார்த்தால் அதன்படி அவர் எழுதியுள்ள ஒவ்வொரு வசனத்துக்கும் மேற்கோள் தேவைப்படுகின்றது.

'ஈழத்தவர் வரலாறு' என்று நூலுக்குத் தலைப்பிட்ட ஆசிரியர் யாரை ஈழத்தவர் என்று கருதுகின்றார் என்பதைத் தெளிவுபடுத்தாதது நூலின் ஒரு அடிப்படையான குறைபாடாகும். தலைப்பைத் தவிர, வேறு எங்கும் ஈழத்தவர் என்ற சொல் பயன்படுத்தப்படவே இல்லை. முதலாவது அத்தியாயத்தில் ஈழத்தவர் (2) என்ற துணைத் தலைப்பு மட்டுமே உண்டு. அதன் கீழ் கூட அதற்கான சரியான வரையறை இல்லை. இத் தலைப்பின் கீழ் (2.1) இயக்கர், (2.2) நாகர், (2.3) திராவிடர் என்று தலைப்பிட்டு, இறுதியில் (2.4) ஆரியர் வருகை எனக் குறிப்பிடுவதன் மூலம் ஈழத்தவர் என்பதால் இலங்கை நாட்டு மக்கள் சகலரையும் கருதுகிறார் என்று தெரிகின்றது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் ''ஈழத்தவர் வரலாறு'' என்றதும் தமிழ் மக்களின் வரலாறு என்று மயங்கி, தமிழர்கள் ஏதோ தமது வரலாற்றைத் தான் செங்கை ஆழியான் ஆராய்ந்து எழுதியுள்ளார் என்று கருதி, பரவலாக வாங்கிவிடுவார்கள் என்ற அவருக்கேயுரிய தனித்துவமான வர்த்தக நோக்குடன் இந்நூலுக்கு அவர் தலைப்பிட்டிருக்கலாமோ என்ற ஐயம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இத்தகைய இரட்டை வேடம் சிலவேளை புனைகதைகளுக்கு பொருத்தமாக இருக்கலாம். ஆனால் முறையியலுடன் கூடிய ஆய்வுகளுக்குப் பொருந்தாதென்பதை ஆசிரியர் அறியாதது வியப்பில்லைத் தான்.

தமிழ், சிங்கள இனத்துவவாதம், தேசியவாதம் என்பன 20ம் நூற்றாண்டுக்குரியன. பண்டைக்காலத்தில் இன்று போல் இவ்வுணர்வுகளின் அடிப்படையில் மக்கள் திரட்டப்படவில்லை. எல்லாளன் - கைமுனு யுத்தம் மற்றும் சிங்கள - தமிழ் அரசர்களின் யுத்தங்கள் யாவும் இந்த இனவுணர்வுகளுக்கு அப்பால், இரு ஆட்சியாளரின் ஆதிபத்திய அவாவின் விளைவாகவே ஏற்பட்டன. எல்லாளனின் படையில் சிங்களவர்களும் இருந்தனர். எல்லாளன் பௌத்த சமயத்தை மதித்து நடந்தான். இறந்த எல்லாளனுக்கு உரிய மரியாதையைக் கைமுனு செலுத்தினான் என்ற விடயங்களுக்கு முக்கியத்துவமளித்துப் பண்டைய இலங்கை வரலாற்றுக்குப் பூசப்பட்ட இனவாத சாயங்களைப் பல சிங்கள ஆய்வாளர்களே அழித்து விட்டனர் என்பதெல்லாம் இலங்கை வரலாற்று ஆய்வில் பழங்கதையாகி விட்டது.

இலங்கை வரலாற்றுக்குப் பல சிங்கள இனவாத வரலாற்றாசிரியர்கள் இனவாத சாயம் பூசி ஆராய்ந்ததெல்லாம் விஞ்ஞான பூர்வமான சிங்கள வரலாற்று ஆய்வாளர்களினாலேயே நிராகரிக்கப்பட்டு விட்டன. இந் நிலையில் குணராசா, இப்பழைய இனவாத சிங்கள ஆய்வாளர்களின் தோளோடு தோள் நின்று, அவர்களுடைய நிராகரிக்கப்பட்ட ஆய்வுகளையே தமது ''இனவாத வரலாற்றுத் தத்துவத்துக்கு''த் துணையாகக் கொள்வது வரலாறு பற்றிய அவரின் அறியாமையையே காட்டி நிற்கின்றது. அவரினால் புகழ்ந்து கூறப்படும் மூன்று தலைமுறை ஆய்வாளர்களுடன் (?) சிறிது நேரம் கலந்துரையாடியிருந்தால் கூட இப் புதிய ஆய்வுகள் பற்றி மிக விபரமாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டிருக்கும்.

சிங்கள ஆய்வாளர்களின் பிற்கால ஆய்வுகள், பார்வைகள் பற்றிய எதுவித பிரக்ஞையுமற்றவராக குணராசா இந்நூலை எழுதியுள்ளார். சிங்கள வரலாற்றுப் பாடசாலைப் பாட நூல்கள் கைமுனு - எல்லாளன் யுத்தத்தைச் சிங்கள - தமிழ் யுத்தமாக வர்ணித்திருப்பது தவறு என எத்தனையோ வரலாற்றாசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். பழைய கதையாகிவிட்ட இவையாவற்றையும் கவனத்திற் கொள்ளாத ஆசிரியர், சிங்கள இனவாத ஆய்வாளர்களின் தமிழ்ப் பதிப்பாகவே இந்நூலை வெளிக் கொணர்ந்துள்ளார்.

தமிழ் மன்னர்களின் நல்லாட்சி, மேன்மை, அவர்கள் பல சந்தர்ப்பங்களில் இலங்கையில் ஆட்சிபுரிந்தமை போன்றவை வேறொரு விடயம். இதனை வரலாறாக எழுதவேண்டிய தேவை உள்ளது என்பது எல்லோருக்கும் உடன்பாடான விடயமே. ஆனால் இத்தகைய எல்லைகளைக் கடந்து ''இலங்கை வரலாறு மட்டுமல்லாது உலக வரலாறே இனங்களுக்கிடையிலான போராட்டங்கள்'' எனத் தன்னால் சமாளிக்க முடியாத ஒரு கட்டுக்கோப்புக்குள் தன்னைத் தானே சிறைவைக்க ஆசிரியர் முற்பட்டிருப்பது படு சிறுபிள்ளைத்தனமான கேலிக் கூத்து.

உலகளாவிய தத்துவத்தை முன்வைத்த கால் மார்க்ஸின் முக்கிய கோட்பாடு ''வரலாற்றினோட்டத்துக்கு அவர் வழங்கிய பொருளாதார விளக்கமாகும்''. கால் மார்க்சின் இச் சிந்தனையே பல விமர்சனங்களுக்கு உள்ளானது. ஆயினும் உலக வரலாற்றின் போக்குகளையும், ஓட்டத்தினையும் விளங்கிக் கொள்ள அவரது கருத்து, பயனுடையதாக விளங்கிய விடத்து இது பற்றிய எதுவித பிரக்ஞையுமின்றித் தன்னை அறியாமலேயே ஓர் உலகளாவிய வரலாற்றுக் கோட்பாட்டிற்கு மாறான ஒரு கோட்பாட்டைக் குணராசா முன்வைக்கிறார்.

உலக வரலாறே இனங்களுக்கிடையிலான போராட்டம் எனக்கூறும் குணராசா, சோவியத், சீனப் புரட்சிகள், பிரெஞ்சுப் புரட்சி மற்றும் ஏனைய உலக வரலாற்று நிகழ்வுகளை அவரின் பார்வையில் எப்படி நோக்குவது. தமிழ் வாசகர்களுக்குச் சரியான வரலாற்றறிவைப் புகட்டாது விட்டால் நூலாசிரியரை யாரும் குறை கூறமாட்டார்கள். ஆனால் அவர்களை மேலும் முட்டாள்களாக்கும் வகையில் போலித் தத்துவங்களை யாழ்ப்பாணத்தின் பிரபல பதிப்பகத்தினூடாக முன்வைப்பதைச் சகிக்க முடியாது. இவர் கூறுவதைத் தான் வரலாற்றுத் தத்துவம் என்று ஏற்குமளவுக்குத் தமிழ் வாசகர்களுக்கு அறிவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது என்று நினைக்கிறாரா? இத்தகைய ஜனரஞ்சகமான எழுத்துக்கள் சூரியனின் கதை, சந்திரனின் கதை, பூமித்தாய் போன்ற புவியியல் நூல்களுக்கு சிலவேளை பொருத்தமாக இருக்கும்.

முன்னுரையில் (பக். VI - VIII) பல கருதுகோள்கள் ஆசிரியரினால் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. வரலாற்று ஆய்வில் இவ்வாறான கருதுகோள்களுக்கு இடமில்லை. கருதுகோள்களை உருவாக்கி வரலாற்று ஆய்வுகளைச் செய்வது வரலாற்றாசிரியர்களுக்கே கேள்விப்படாத ஒரு விடயம். ஆர்னோல்ட் ரொயின்பி, ஏ.ஜே.பி.ரெயிலர் போன்ற வரலாற்று அறிஞர்கள் இப்படியா வரலாற்று ஆய்வுகளைச் செய்தனர். இவர் பாராட்டும் மூன்று தலைமுறை வரலாற்றறிஞர்கள் இத்தகைய கேலிக்கூத்தான முறையிலா ஆய்வு செய்தனர். கருதுகோள் என்றால் என்ன? அதன் வகைகள் யாது? ஆய்வு முறையியலில் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? ஓர் ஆய்வில் எத்தனை கருதுகோள்களைத் தெரிந்தெடுக்க வேண்டும்? அளவுக்கு அதிகமான கருதுகோள்களை ஓர் ஆய்வில் பயன்



படுத்த முடியுமா என்ற முறையியலின் (Methodology) அடிப்படை அம்சங்களையே விளங்கிக் கொள்ளாத குணராசா தனது கலாநிதிப்பட்ட ஆய்வில் பயன்படுத்திய கருதுகோள் விடயத்தை வரலாற்று ஆய்வுகளுக்குப் பயன்படுத்தியதன் மூலம் ஆய்வின் பரிட்சயமின்மையை வெளிப்படுத்திவிட்டார்.

இலக்கிய, கல்வெட்டு மற்றும் இன்னோரன்ன சான்றாதார்ரங்களை ஒப்புநோக்கிக் கற்பனைகள், பொய்மைகளைத் தவிர்த்து நிதானமாக, நடுநிலை நின்று வரலாறு உருவாக்கப்படுகின்றது. எழுதப்பட்ட வரலாறு, கிடைக்கும் புதிய சான்றாதாரங்களுக்கேற்ப திருத்தப்படுகின்றது. இவரது கருதுகோள்கள் வரலாற்று ஆய்வின் முடிவுகளாகவே வரவேண்டும். ஆசிரியரினால் முன்வைக்கப்பட்ட கருதுகோள்கள் பிறரின் வரலாற்று ஆய்வுகளிலிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றதேயன்றி வரலாற்று ஆய்வுக்கான ஓர் அடிப்படையை வகுத்துத் தரவில்லை.

இக்கருதுகோளை முன்வைத்த ஆசிரியர் பின்பு அவற்றை மறந்து விட்டார். இக்கருதுகோள்கள் அவருடைய ஆய்வில் எந்த இடத்திலும் தொடர்பு படுத்தப்படவில்லை. ஒரு வகையில் சரியானதாகவும் தோன்றுகிறது. ஏனெனில் வரலாற்று ஆய்வில் இவ்வாறு தொடர்புபடுத்த முடியாது என்பதைப் பின்னர் எழுதும் போது உணர்ந்திருப்பார். முன்னுரையில் உள்ள கருதுகோள்கள் இறுதிவரை அநாதைகளாகவே நிற்கின்றன. வாசகர்களே தமது விவேகத்தைப் பயன்படுத்தி தொடர்பு படுத்திக் கொள்ளட்டும் என்று இதனை ஓர் ஒப்படையாகத் தமது 'வாசக மாணவர்களுக்குக்' கொடுத்தாரோ தெரியவில்லை.

குணராசாவுக்கு வரலாற்று ஆய்விலோ அல்லது அது தொடர்பான எழுத்திலோ எதுவித பயிற்சியும், அனுபவமுமில்லை என்பதற்கு முழு நூலுமே சான்று பகர்கின்றது. இலக்கியங்களும், சாசனங்களும் வரலாற்று ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டாலும் அவை எழுந்த நோக்கம் வேறு. அவற்றில் உள்ள கற்பனையான, சிறிய சிறிய கிளைக் கதைகள், புனைகதைகள் மற்றும் உண்மை வரலாற்றுக்குப் புறம்பான செய்திகள், நிகழ்வுகள் என்பவற்றையெல்லாம் ஒதுக்கி அவற்றில் தொக்கி நிற்கும் உண்மை வரலாற்றுச் சம்பவங்களை இனங்கண்டு, வேறு சமகாலச் சான்றுகளுடன் இணைத்து, ஒப்பிட்டு, வரலாறை எழுதுவது இலகுவான பணியன்று. பல ஆயிரம் சம்பவங்களை இலக்கியங்களிலிருந்து திரட்டி அப்படியே எழுதி விட்டால் அது வரலாறாகி விடாது. கைதேர்ந்த வரலாற்றாசிரியர்கள், இச் சான்றுகளின் அடிப்படையில் ஒரு தெளிவான வரலாற்றை இனங்கண்டு வாசகர்களிடம் சமர்ப்பிப்பர். இத்தகைய பின்புலத்தில் நோக்கும் போது, ஈழத்தவர் வரலாறு என்ற இந்நூல் அதற்கு எதிரான திசையிலேயே செல்கின்றது. ஏராளமான தொடர்பற்ற சம்பவங்களின் தொகுப்பாகவே உள்ளதேயன்றி தெளிவான ஒரு வரலாற்றின் ஓட்டத்தைக் காண முடியவில்லை. ஆதாரங்களை மேற்கோள் காட்டுவது மட்டும் வரலாறாகிவிடாது. ஆதாரங்களிலிருந்து தெளிவான ஒரு வரலாற்றைக் கிரகிக்க வேண்டும். ஆதாரங்களுக்கான வியாக்கியானங்களிலிருந்து வரலாறு உருவாக்கப்படுகின்றது. கருத்து வேறுபாடுகள் இவ்வியாக்கியானங்களிலிருந்தே தோன்றுகின்றன. நூலில் ஓர் இடத்திலாவது பிற வரலாற்று ஆய்வாளர்களின் வியாக்கியானங்களை, வரலாற்று எழுத்துக்களைச் சான்றுகளுடன் மறுத்துரைக்க நூலாசிரியர் முயலவில்லை. ஆய்வு அனுபவமின்மை பளிச்சென வெளிப்படுகின்றது.

பிரதானமாக, தமிழர்களின் பிற்காலக் குடியேற்றம் பற்றிய இந்திரபாலாவின் கருத்துக்கள் எதுவும் நூலில் சொல்லப் படவில்லை. இந்திரபாலாவின் கருத்துக்கள் கே.எம்.டி.சில்வா போன்ற வரலாற்றாசிரியர்களால் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை மறுத்துரைக்கப் பெரிதும் பயன்படுத்தப்பட்டவை என்பது யாவரும் அறிந்த விடயம்.

மூன்று தலைமுறை ஆய்வாளர்கள் புதிய ஆதாரங்களுடன் எழுதியவற்றைத் தனது ''வரலாறு என்பது இனப்போராட்டம்'' என்ற புதிய தத்துவத்துக்குத் தவறாகப் பயன்படுத்துகிறார். முற்றிலும் மூன்று தலைமுறை ஆய்வாளர்களின் முடிவுகளைப்பயன்படுத்தி ''ஈழத்து வரலாற்றுச் சங்கிலியின் நொய்தலான இழைகளை இணைக்க (பக் -VII) முற்படும் ஆசிரியர் தனது நூலை எவ்வாறு ஓர் ஆய்வு நூல் என உரிமை பாராட்ட முடியும்?

நிலப்பயன்பாடு, நீர்வளம் பற்றிய தனது புவியியல் முதுகலைமாணிப்பட்ட ஆய்வினையும் வரலாற்று ஆதாரமாக மேற்கோள் காட்டுவது (பக்.74) நகைப்புக்குரியது. ''குவேனி'' பற்றிய அவரது நாவலையும் கூட விட்டு வைக்கவில்லை. மேலும் விளக்கம் பெறுவதற்கு வாசகர்கள் போதாக்குறைக்கு இந் நாவல்லையும் வாங்கி வாசிக்க வேண்டுமாம். (பக்.24) வரலாற்று நூலுக்கு வரலாற்றுச் சான்றாதாரங்கள் பற்றிய ஓர் ஆய்வுரை தேவை. குறிப்பாக, மகாவம்சம் எந்தளவுக்கு ஓர் ஆதாரமாகப் பயன்படக் கூடியது என்பது பற்றிய விளக்கம் எதுவுமில்லாமல் கண்மூடித்தனமாக அதனைப் பயன்படுத்தியுள்ளார். அது மாத்திரமன்றி குண்டுச் சட்டியில் குதிரை யோட்டும் சில மூன்றாம் தலைமுறை ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளைப் ப்யன்படுத்தியமை மேலும் ஒரு கேலிக்கூத்தான விடயம். எனவே இனியாவது இத்தகைய போலி ஆய்வுகளை நிறுத்தி, உங்களுக்கேயுரிய துறைகளில் காத்திரமான படைப்புக்களை வெளிக் கொணர வேண்டுமென பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். தமிழரின் வரலாறு தொடர்பாக இனிமேலாவது நல்ல நூல் ஒன்றை வெளியிட வேண்டுமென பூபாலசிங்கம் பதிப்பகத்தினரையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

○

-சசிராணி-

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Double Game

## வாசு!



*நாங்கள் உங்களை மூன்றாவது சக்தியொன்றைக் கட்டியெழுப்புமாறோ அல்லது அரசிலிருந்து விலகி எதிர்க் கட்சியில் அமருமாறோ கூறவில்லை. ஆனால் நீங்கள் எடுக்கும் இச் செயல் நடவடிக்கைகளினுள் வாசுதேவ நாணயக்காரவும் டபிள் கேம் (Double Game) காரர் ஒருவரெனச் சிலர் நினைக்க இடமுள்ளது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

இதனை ஏமாற்று வேலை என்று தானே சொல்லுகிறீர்கள்? அதாவது அந்தப் பக்கமும் கதைக்கிறேன், இந்தப் பக்கமும் கதைக்கிறேன், மேலோட்டமாகப் பார்த்தால், ஆம். அரசுக்கு எதிராகவும் கதைக்கிறேன், ஆனால், அரசுடன் இருக்கிறேன்... உண்மை... இதுதான் இங்குள்ள சிக்கலின் தன்மை ஆகும். உண்மை உலகிலுள்ளது இதுதான். அதனாலேயே இதன் தன்மை இவ்வாறு தெரிகிறது. நான் அரசாங்கத்தைப் பாதுகாக்கிறேன்தான். ஆனால் அரசாங்கம் மீது தாக்குதல் தொடுப்போர் யார் என்ற பக்கத்தைப் பார்த்தே அதனைச் செய்கிறேன். தாக்குதல் தொடுப்பது இனவாதிகளானாலும், அதேபோலத் தாக்குதல் தொடுப்பது ஐ.தே.க.யினரானாலும் அரசாங்கத்தைப் பாதுகாக்கிறேன். அதேசமயம் இப்போலி தனியார்மயப்படுத்தல் என்ற பேரில் செய்யப்பட்டுவரும் மக்கள் சொத்துக்கள் கொள்ளை, ஏமாற்று, தொழிலாளர்களின் மீதான அடக்குமுறைகள், தபால் சேவையில் இன்று இடம்பெற்றுவரும் அடக்குமுறைகள், தீமை விளைவிக்கும் ஒடுக்குமுறைச் சட்ட திட்டங்கள் ஆகியனவற்றுக்கு எதிராக நான் அரசு மீது தாக்குதல் தொடுக்கிறேன். இது டபிள் கேம் அல்ல, நான் டபிள் கேம் காரனுமல்ல.

*தபால் ஊழியர்களின் ஆர்ப்பாட்ட இயக்கத்துக்குக் கடந்த சில தினங்களுக்கு முன்பு நீங்கள் போனீர்கள். ஆனால் அங்கு கூடியிருந்தவர்கள் உங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்கள் உங்களுக்கு வெளிப்படையாகவே நீங்கள் டபிள் கேம் காரர் என்று சொன்னார்கள். அதாவது பொது மக்கள் இப்போது உங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்பதைத்தானே?*

நான் தபால் ஊழியர்களது எதிர்ப்பு இயக்கம் ஒன்றுக்கு ஆதரவு தெரிவிக்கவே அங்கு போய் இருந்தேன். உண்மையான தபால் ஊழியர்களுக்கு என்னைப்பற்றித் தெரியும். அவர்கள் என்னை வரவேற்றார்கள். என்னைப் பேச அழைத்த நேரத்தில் எழுந்த பெரும் கோஷம் அதனைத் தெளிவாகக் காட்டியது. ஆனாலும் அங்கிருந்து எனக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், எனது பழைய நண்பர்கள் சிலரே. நவ சம சமாஜக் கட்சியில் என்னுடன் ஒன்றாகப் பணிபுரிந்த, எனக்குத் தெரிந்த சிலரேயாவர். அவர்கள்தான் "ஹு..." எனச் சத்தமிட்டு எனக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களாவர். அரசாங்கத்திலிருந்து வெளியே வந்தே என்னை எதிர்ப்பு நடவடிககைகளில் ஈடுபட வருமாறு அவர்கள் சொல்லுகிறார்கள், அது அவர்களுடைய கருத்தே. ஆனால் தபால் ஊழியர்கள் எனக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அவர்கள், நவ சம சமாஜக் கட்சியின் 40 அல்லது 50 பேர் செய்த அச்செய்கையை எதிர்த்தனர். பரந்தளவில் மக்களின் எதிர்ப்பொன்று எழுந்ததென இதனூடாகக் கருதுவது பிழையானதாகும்.

*இது போன்ற ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு வழங்கியபடியே மறுபுறம் இந்த ஆர்ப்பாட்டங்களுக்குப் பொறுப்பான அரசின் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகச் செயற்படுவது பற்றி வெறுப்பொன்று உங்களினுள் எழுவதில்லையா?*

நான் சொன்னேன்தானே...? இது எனது தெரிவல்ல. அது அவ்வாறு அமைந்துள்ளது. நாம் எதிர்க்கட்சியில் அமரவேண்டும் என்பதுதான் எனது தெரிவும், ஆனால் நான் பொ.ஐ.மு.யிலேயே இருக்கிறேன், பொ.ஐ.மு.யில் ஒன்றாக இருந்தபடியே நாட்டின் பிற்போக்குச் சக்தியொன்றுக்கு நாட்டில் இடங்கொடாது செயற்படுவதுடன், சரியான இடத்தில் நான் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கும் போகிறேன். அரசிலிருந்து கொண்டு இதனைச் செய்வது கடினமானதுதான். ஆனாலும், அதனைவிட எனக்குச் செய்ய எதுவுமில்லை, ஏனெனில் எனது கட்சியின் முடிவின்படியே நான் செயற்படுகிறேன்.

*அண்மையில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் சப்ரகமு மாகாணத்தின் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளர் நீங்கள்தான் என்ற சாடைகள் ஆங்காங்கு தெரிகின்றன. அதில் உண்மை ஏதாவது உள்ளதா?*

எனக்குத் தெரிந்தவரை அதில் உண்மை ஏதுமில்லை. சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையும், பொ.ஐ.மு.வை இன்று நெறிப்படுத்தும் தலைமையும், என்றும் அதற்கு அனுமதியளிக்குமென என்னால், நினைத்துப் பார்க்கவும் முடியாது. அவ்வாறு ஏதாவது நடந்து, முதலமைச்சர் அபேட்சகராகுமாறு கோரினால், எமது கட்சிக்கு உடன்பாடானால், எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் அதனை எனது பாணியிலேயே செய்வேன். நான் முதலமைச்சர் பதவிக்கான தேர்தலைப் பொதுத் தேர்தலை நடத்திய விதத்தை விடப் புதிய பாணியிலேயே நடத்துவேன். அரசாங்கத்துக்கு வெள்ளையடித்துக்கொண்டு மட்டும் என்னால், முதலமைச்சர் வேட்பாளர் பதவிக்கான வேலையைச் செய்ய முடியாது.

*இரத்தினபுரி மாவட்டப் பொ. ஐ. மு.(லி.ச.ச.க.)ப் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவுடனான 'திவயின - 1998.05.10' பத்திரிகையின் கலந்துரையாடலிலிருந்து.....*

தமிழில் : சி. செ. ராஜா.

## மருத்துவம்...

இப்பிரதேசத்தில் வைத்தியசாலைகளுக்கு வரும் பெருமளவு மருந்துப் பொருட்கள், அட்டனில் உள்ள பிரபல மருந்தகங்களைச் சென்றடைகின்றன. வைத்தியர்கள் இக்கடைகளில் போய் மருந்து வாங்குமாறு 60/= முதல் 200/ வரை வாங்கிக் கொண்டு துண்டு கொடுக்கிறார்கள்.

பசறை அரசாங்க வைத்தியசாலையிலும், கரவனெல்ல வைத்திய்சாலையிலும், பதுளை வைத்தியசாலையிலும், தமிழ்த் தாய்மார், சிசுக்கள், நோயாளிகள் அநியாயமாக கொல்லப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

3

தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மருந்தகங்கள் நிலை இன்னும் மோசமானதாகும். கடந்த 10 வருடமாக பதிவு செய்யப்படாத மருந்து கலக்குனர்களைக் கொண்டு தோட்ட வைத்திய அதிகாரி முறை இன்னும் அமுலில் உள்ளது. முறையான வைத்தியக் கல்வியோ, பயிற்சியோ, தகைமையோ இல்லாத இவர்கள் பலரது தயவால் பதவிக்கு வந்தவர்களாவர்.

பொகவந்தலாவ, செகம்பியன் தோட்ட மருந்தகத்தில் கடமைபுரியும் பெண் வைத்தியர் நோயாளியை இனவெறியுடன் திட்டுவது, தாக்குவது, பலவந்தமாக பணம் பறிப்பது, குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எதிராக பிரச்சாரம் செய்துவரும் தொண்டர் நிறுவன ஊழியர்களை அவமதிப்பது, கருத்தடை செய்யுமாறு நிர்ப்பந்திப்பது போன்ற அடாவடித்தனங்களில் பல ஆண்டுகளாகவே ஈடுபட்டு வருகிறார்கள். தோட்ட மருந்துகளைக் கொண்டு பொகவந்தலாவ தோட்ட வைத்தியர் ஒருவர் தனிப்பட்ட வைத்தியசாலை நடத்தி வருகின்றார். தென்மதுரை தோட்ட வைத்தியரோ கருத்தடைக்கு ஆள் திரட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். சின்ன எலிப்படை தோட்ட வைத்தியர் தனிப்பட்ட கிளினிக் நடத்துகிறார். லெட்சுமி தோட்ட வைத்தியர் சில்வா ஓய்வுபெற்ற பின்னரும் வைத்திய சேவை புரிவதோடு வைத்திய நிலையத்தையே தனிப்பட்ட வைத்தியசாலையாக மாற்றி வியாபாரம் செய்து வருகிறார். இங்கு காணப்படும் இரண்டு சுவரொட்டிகளும் கருத்தடையின் மகத்துவம் பற்றியே பேசுகின்றன. 1994ம் ஆண்டு முடிவடைந்த அயன் வில்லைகளே இன்னும் கர்ப்பிணித்தாய்மாருக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. தோட்ட அம்புலன்ஸ் வாகனம் ஒரு நாளைக்கு ஒரு தரம் மட்டுமே தோட்டப்பிரிவுக்கு போகவேண்டும் என்பதோடு பணம் கொடுக்காத நோயாளிகளை பொகவந்தலாவை அரசின் வைத்தியசாலைக்கு அனுப்புகின்றார். தோட்ட சமூகநல நிதியத்துக்கு போலி மாதாந்த வேலைத்திட்டம் அனுப்பி பொய்கூறிவருவதோடு, இவர் சிறுவர் நிலையங்கள், லயன்கள் எதனையும் போய் பார்வையிடுவதில்லை. இத்தோட்டத்தின் இன்னொருபிரிவான எலிப்படை வைத்தியசாலை கட்டப்பட்டு 10 வருடமாக நிரந்தரமாக மூடப்பட்டிருக்கிறது.

இத்தோட்டத்தில் அம்மை நோயினால் ஜானகி என்ற 17வயது மாணவி மரணித்ததும், மிக அண்மைக் காலத்தில் வயிற்றோட்டம், வாந்திபேதி, புற்றுநோய், மாரடைப்பு காரணமாக பலர் திடீர் திடீர் என சிறுவர் முதல் பெரியோர் வரை மரணித்து வருவதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். மேலும் ஒரே டிவிசனில் 5 மனநோயாளர்கள் காணப்படுவதோடு இவர்கள் தமது மனநோயுடன் மலையில் வேலை செய்ய வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

மிக அண்மையில் எலிப்படைத் தோட்டத்தில் லயத்திலேயே பிரசவமான ஒரு தாய் சாக்கில் சுற்றப்பட்டு வைத்தியசாலைக்கு இழுத்துச் செல்லப்பட்ட அவலம் நேர்ந்துள்ளது.

தோட்டங்களில் பிரசவ தாய்மார் தமது பிரசவத்திற்கு 7 நாட்களுக்கு முன்னர் வைத்தியசாலைக்குள் அனுமதிக்கப்பட்டு நிறையுணவும், தக்க பராமரிப்பும் வழங்கப்படுவதோடு பிறப்பின் பின் 7 நாட்கள் வைத்தியசாலையிலேயே பராமரிக்கப்பட வேண்டும். இதற்கான நிதியும் ஒதுக்கப்படுகிறது. ஆனால் இதனை அமுல்படுத்த தோட்ட வைத்தியர்கள், தாதிமார் முன்வருவதில்லை. ஆனால் இதற்கான பணம் பிரசுவ சகாய நிதியில் இருந்து அறவிடப்படுகின்றது. மேலும் தாய்மாருக்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பளத்துடன் கூடிய விடுமுறையோ அல்லது அதற்கான கொடுப்பனவுகளோ வழங்கப்பட்டுவதில்லை.

ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளின் பிறப்புக்களின் பின்னர் கட்டாய கருத்தடைக்கு 90% தாய்மார் நிர்ப்பந்திக்கப்படுவதோடு இதனை திட்டமிட்ட வகையில் தோட்ட நலன்புரி அலுவலர்கள், மருந்து கங்காணிகள், தாதிகள், வைத்தியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக பல்வேறு அழுத்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- இலகு வேலை தருவதாகக் கூறுவது.
- பலர் முன்னிலையில் அவமானப் படும்படியாக திட்டுவது.
- மருத்துவ வசதிகளை மறுப்பது.
- வஞ்சகமான முறையில் மனமாற்றம் செய்வது.
- போலி நட்போடு உபதேசம் புரிவது.
- பணம் கிடைக்குமென்று ஆசை வார்த்தை கூறுவது.
- தாயின் உடல் நலக் கேடுகுறித்து எதுவும் கூறாதிருப்பது.
- பின் விளைவுகள் பற்றிக் கூறாதிருப்பது.
- சிறந்த கல்வி, சிறந்த குடும்பம் பற்றி ஆசை காட்டுவது

போன்ற முறைகள் மூலம் கருத்தடை செய்யப்படுகின்றது. மேலும் பிள்ளை பெறுவதில் தற்காலீகமாக தாமதத்தை ஏற்படுத்தி ஊசிகளை தாய்மார் அறியாமலேயே செலுத்துவது, கருத்தடை, கருவள அழிப்புக்கான மாத்திரைகளைக் கொடுப்பது உட்பட பல வழிகளில் கருத்தடை செய்யப்படுகின்றது.

நாவலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் தாய்மாரின் அனுமதியின்றி கருத்தடை செய்யப்படுவதோடு அதற்கான ஊசியும் ஏற்றப்படுவதாக பெயர் குறிப்பிட விரும்பாத குடும்பநல சங்க உறுப்பினர் ஒருவரே குறிப்பிட்டுள்ளார்.

4

மலையக தமிழரின் அரசியல் அபிலாஷைகளை மழுங்கடிக்கவும், அவர்களது சமவாய்ப்புக்கான கோரிக்கைகளை பலவீனப்படுத்தவும் சிங்கள பௌத்த இனவெறி அரசு புரிந்துவரும் அடக்குமுறை வடிவங்களில் ஒன்றாக மருத்துவக் காலனியம் காணப்படுகிறது.

அன்னிய ஏகாதிபத்தியங்களால் மூன்றாம் உலகின் மீது திணிக்கப்பட்ட இக்காலனியம், மூன்றாம் உலகின் ஒடுக்க முறை அரசுகளால் தேசிய இனங்களுக்கெதிராக பயன்படுத்தப் படுகின்றது.

கோதுமை விளையாத மண்ணில் மாவில்லாவிடின் வாழ்வில்லை என்ற நிலை காணப்படுவது கூட காலனித்துவத்தின் இரும்புப் பிடியை பறைசாற்றுவதாகவே அமைந்துள்ளமை கண்கூடு.

இந்த வகையில், ஆங்கில மருத்துவத்துடன் இனவெறியும், மதவெறியும், திமிரும் கலந்த வைத்தியத்துறை காலனியம் மலையகத் தமிழருக்கு எதிராக மிகவும் திட்டமிட்ட வகையில் பயன்படுத்தப்படுகின்றது.

இந்நிலைமையை கண்டும் காணதிருக்கும் தொழிற்சங்கங்கள், அமைச்சர்கள், தோட்ட வைத்தியசாலைகள் அரசுடமையாக்கப்பட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமெனக் கூறக்கூடும். ஆனால் தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்பு 1050 ஆக இருந்த பாடசாலைகள் 825 ஆக சுருங்கிப் போனதைப் போல தோட்ட வைத்தியசாலைகளும் மாறலாம். வைத்தியர்களாகவும், தாதிகளாகவும் வரும் வாய்ப்பு இன்னும் 50 ஆண்டுகளுக்கு மலையகத் தமிழருக்கு கிடைக்கப் போவதில்லை. அப்படியானால் மருத்துவத்தேவை மலையக தமிழருக்கு ஒரு மரணவாயில் மட்டுமேயாகும்.

## ஜே.வி.பி. ..

இருக்கிறது. தமது ஜனநாயக உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கவும், வெகுஜன வேலைகளை இயக்குவதற்கான அரசாங்க வளங்களைப் பயன்படுத்துவதற்குமாகப் பாராளுமன்ற வழிமுறையை உயர்ந்தபட்சம் பயன்படுத்தி வருவதாகவே தோன்றுகிறது. கடந்த காலங்களில், 1977 பொதுத் தேர்தல், 1979 உள்ளூராட்சி சபைத் தேர்தல், 1981 மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல், 1982 ஜனாதிபதித் தேர்தல், 1994 பொதுத் தேர்தல், 1994 ஜனாதிபதித் தேர்தல், 1997 உள்ளூராட்சி சபைத் தேர்தல் என இதுவரை சகல தேர்தல்களையும் ஏனைய இடது சாரிக் கட்சிகளுக்கெல்லாம் முன்னுதாரணமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறதென்று கூறலாம். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கிறது. மாகாண சபை முறைமைக்கு ஜே.வி.பி. எதிரானதாயினும் தேர்தலைப் பயன்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

மக்கள் மத்தியில் காலூன்ற வேண்டுமெனில், வெகுஜன வேலைகளைப் பலப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே பாராளுமன்ற வழிமுறையைக் கூறி வருகிறது. ஆனால் இதுவே ஒரு இருப்பாகி, சந்தர்ப்பவாத அமைப்பாக ஆகிவிடுமா என்ற சந்தேகம் பரவலாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. எவ்வாறாயினும் இன்றைய அரச அடக்குமுறைக்கான முஸ்தீபுகளுக்கு முகம் கொடுப்பதாயிருந்தால் இந்த வகை வியூகங்கள் அவசியமே. இன்னுமொரு முறை தேடி அழிக்கப்பட்டால் முன்னர் போலத் தலமறைவாவதில்லை. அடக்குமுறைக்கு முகம் கொடுத்துக் கொண்டே ஜனநாயக செயற்பாடுகளுக்காகப் போராடுவோம் என்று இன்று கூறி வருவது கடந்த காலங்களிலிருந்து பெற்ற பாடங்களின் விளைவே என்று கூறலாம். ஆனால் கடந்த காலங்களில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய சகல முக்கியமான பாடங்களிலும் இந்தத் திருத்தம் இருக்கிறதா என்பது தான் பலரிடமுள்ள முக்கிய கேள்வி.

## சங்கானை...

என்றும் தன எடுகோளை விளக்கினார்.

இந்த அரசியல்வாதிகளைத் தோற்றுவித்தவர்கள் யார்? அவர்களுக்கு வாக்களிப்பவர்கள் யார் என்ற கேள்விகள் எழுப்பப்படவில்லை?

இன்றைய தலைமுறையின் கேள்வியான இனிமேல் சமாதான வாழ்வு பற்றிக் கதைப்பது என்றால் பிரிந்து போன சிறி லங்காவும், தமிழ் ஈழமும் எப்படிச் சுமுகமாக நட்புடன் வாழலாம் என்ற பாரதி மோகனின் கேள்வியும் அடக்கப்பட்டது.

தனிமனிதர்களின் நட்பினால் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படுமென்றால் பிரேமதாசாவுக்கும், ஜே.ஆருக்கும் இல்லாத தமிழ்ச் சிநேகமா? பிரேமதாசவுடன் அதிக நட்புடன் பழகியவர்களும் நம்பிக்கைக் குரியவர்களும் தமிழர்களே. அதேபோல ஜே.ஆர் ஜயவர்த்தனாவும், அரசியல் வேறு நட்பு வேறு. இக்கேள்விகள் அங்கு எழுப்பப்படாதவை. இன்னும் சிங்களப் பத்திரிகையாளர்களும் நல்லெண்ணவாதிகளும் ஐம்பது வருடங்கள் பின்தங்கி இருக்கிறார்கள். இன்றைய யதார்த்தத்தை உணராதவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் இக் கருத்தோட்டம் தான் இன்னும் பல முற்போக்காளர்களிடமும், பத்திரிகையாளர்களிடமும், புத்திஜீவிகளிடமும் இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது கருத்துக்களை விட ஆளுமையில் நம்பிக்கை வைத்த காலத்தைக் கடந்து தமிழ் இளைஞர்கள் எங்கோ சென்றுவிட்டனர் என்பதை உணர முடிந்தது.

கடந்து போன வரலாற்றில் தத்துவங்களாலும் முற்போக்கு எண்ணங்களாலும் உணர்ச்சிவசப் பட்டிருக்கிறோம். கைகோர்த்து நடந்திருக்கிறோம். மொழி என்ன? மதமென்ன? என்று பரவசப்பட்டிருக்கிறோம். நிட்டூரமான நிசங்கள் தலைதூக்கிய போது தத்துவங்கள் தலைமறைவாக, நல்லெண்ணங்கள் நாணிக்கோணி நடந்த கதையைத் தான் கண்டிருக்கிறோம்.

எங்கள் பிரச்சினை எங்களுக்குத்தான் தெரியும். எங்களால் தான் அதை உணர முடியும். எங்களால் தான் அதற்கு தீர்வு சொல்லவும் முடியும். கண்ணை மூடுவதால் பிரச்சினைகள் தீர்ந்து விடுவதில்லை. இப்படிப்பட்ட அநேக கேள்விகளுடன் பலர் அக்கூட்டத்தை விட்டுச் சென்றனர்.

எது எப்படியிருப்பினும் நல்லதொரு கலந்துரையாடல் புரிந்துணர்வுடன் நடந்தது. காமினி நினைவு பின் தள்ளப்பட்டாலும் அவர் சாதிக்க நினைத்தது பற்றிப்பேசினோம் என்ற திருப்தியுடன் கலைந்து சென்றோம். அதைத்தான் அவர் விரும்பி இருப்பார் என்பது எமது நம்பிக்கை.

## நான்காவது..

ஒரே தொனிப்பொருளென்றாலும் நல்லதானதும், உச்சமானதுமான படங்களே இம்முறையும் காண்பிக்கப் பட்டன. மிகப் 'பாதுகாப்பான' இடத்தில் காண்பிக்கப் பட்டதென்றாலும் மண்டபம் நிறையுமளவுக்கு திரைப்பட ரசிகர்கள் கலந்து கொண்டார்கள். தமிழ் ரசிகர்கள் பலர் 'இடத்தின் கெடுபிடித்தன்மையால் வரமுடியாததையிட்டு கவலையும் தெரிவித்தார்கள்.

முன்பு Sarah, The Boot, Cyclist தந்த நிறைவை இம்முறை Scent of Joseph's Shirt தந்ததை குறிப்பிட்டாகத் தான் வேண்டும். இனிவரும் காலங்களிலும் ஒரே தொனிப் பொருளிலில்லாத நல்ல படங்களைத் தருவார்கள் என்று ஏற்பாட்டாளர்களிடம் எதிர்பார்க்கிறோம்.

*குறிப்பு: இவ்ஈரானியப்படங்களைத் தவறவிட்டவர்கள் இதன் வீடியோப் பிரதிகளை இலங்கையிலுள்ள ஈரானியத் தூதரக கலாசார பிரிவில் பெற்றுப் பார்க்கலாம்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.

தொலை மடல் : 594229.

# மனமுண்டா?

ஐ.நா. செயலாளரின் விசேட தூதுவர் ஒலேரா ஒட்டுண்ணு வந்து சென்றிருக்கிறார்.

தங்கியிருந்த ஒரு வார காலத்துள் அவர் தமது சக்திக்கு அதிகமாகவே நிறையப் பேரைச் சந்தித்திருக்கிறார், நீண்ட தூரங்களுக்குச் சென்று வந்திருக்கிறார், நாட்டின் பிரச்சினைக்குரிய பல விடயங்கள் தொடர்பாகக் கவனத்திற்குரிய பல ஒப்புதல்களுக்குக் காரணமாகியிருக்கிறார்.

வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்படும் சிறுவர்கள் தொடர்பான அவரது அவதானிப்புகள் அறிக்கையாக வெளிவரும் போது அது இந்த நாட்டின் அரசியலில் ஒரு முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக அமையும் என்பதில் ஐயமில்லை

ஆனால், ஐ.நா. வின் விசேட தூதுவராக வந்த ஒலேரா ஒட்டுண்ணுவின் அறிக்கை சொல்லப் போகின்ற விடயங்களை விட, அவை இந்நாட்டு அரசியலில் ஏற்படுத்தப் போகின்ற தாக்கங்களை விட முக்கயமான ஒரு விடயம் இருக்கின்றது.

அதுதான் இன்று நடந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதும், இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட இரு தரப்பும் இதய சுத்தியுடன் ஈடுபடுவதுமாகும்.

பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் தொடங்கப்பட்ட அரசியல் தீர்வு முயற்சிகளின் வடிவமான ஆரம்ப முன் மொழிவுகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல வெறும் நீதியமைச்சரின் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கும் பல்லாயிரக் கணக்கான தூசு தட்டப்படாத பைல்களுடன் இன்னொரு பைலாகப் போய் விழுந்து விட்டது. இதிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட எந்தவித நடைமுறைப் பெறுமானமுமற்ற ஒரு சில 'அரசியல் திருத்த' சரத்துக்கள் மட்டும் இப்போது தீர்வு என்ற பெயரில் உலா வருகின்றன.

யுத்தம் "வெற்றி நிச்சியம்" என்ற மகுடத்துடன் இரண்டாவது ஆண்டாகத் தொடர்கிறது.

யுத்த முனையின் உக்கிரத்திலும் அதற்கான தயாரிப்பிலும் குவிக்கப்பட்டிருக்கின்ற கவனம் நாட்டில் மனித வளம் முற்று முழுதாக சேதமுற்றுப் போவதைக் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. இந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படாமல், அதைச் செயற்படுத்த உரிய அரசியல் தீர்வு முயற்சிகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படாமல் நாடு உருப்படுவதற்கான வாய்ப்புக்கள் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலை பற்றி இன்றைய அரசாங்கத் தலைவர்கள் யாருக்கும்– ஜனாதிபதி உட்பட – பூரண பிரக்ஞையிருப்பதாகத் தெரியவில்லை.

யுத்த வேள்விக்காக மேலும் மேலும் பலிக்கடாக்களைத் திரட்டும் முயற்சியிலேயே தீவிரமாக இருக்கிறது அரசு.

இறுதியாக இந்தக் களப்பலி முயற்சிக்காக பாடசாலைகளை நோக்கிப் போகவும் அரசு தயாராகிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் ஒட்டுண்ணு அவர்களின் இலங்கை விஜயம் நாட்டை அழிவிலிருந்து பாதுகாக்கும் ஒரு புதிய வாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளது.

புலிகள் ஒட்டுண்ணு அவர்களுடனான பேச்சின் போது பல முக்கியமான உறுதி மொழிகளை வழங்கி இருக்கிறார்கள். தமது இயக்கத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான வயதெல்லை, வடக்கு முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் போன்றவை இவற்றுள் மிகுந்த கவனத்திற்குரியவை.

புலிகளின் கடந்த கால அரசியல் தவறுகள் பல, தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டத்தின் நியாயத் தன்மையைப் பலவீனப் படுத்திருக்கின்றன. அந்த இயக்கத்திற்கும் கூட அரசியல் மற்றும் ராணுவ ரீதியிலான பல நெருக்கடிகளுக்கு இவை காரணமாயிருந்திருக்கின்றன.

அத் தவறுகளிலொன்று – மிக்வும் முக்கியமானதொன்று தான்– வடக்கு முஸ்லீம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை.

ஒரு அரசியல் இயக்கம், அரசியல் இராணுவ வழி முறைகளில் தவறிழைப்பது ஒன்றும் பெரிய குற்றமல்ல. அது புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று தான். ஆனால், அந்தத் தவறுகளை விளங்கிக் கொள்ள முயல்வதும் திருத்திக் கொள்வதும் சந்தர்ப்பம் வரும் போது அதற்கு ஈடு செய்வதும் அவ்வரசியல் இயக்கத்தின் அரசியல் நோக்கங்கள் வெற்றி பெற அத்தியவசியமானவையாகும்.

புலிகள் இவ்வாறான பல சந்தர்ப்பங்களைத் தவற விட்டும் இருக்கிறார்கள்.

இப்போது வாய்த்திருப்பது ஒரு புதிய சந்தர்ப்பம். ஒலரா ஒட்டுணு அவர்களது வடிவில் வந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை புலிகள் பயன்படுத்திக்கொள்வது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க மிகவும் அவசியமானதாகும்.

அவருடன் ஒப்புக்கொண்டதன் பிரகாரம் ஒப்புக்கொண்டவற்றை உறுதியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் தார்மீகத் தன்மையை வலுப்படுத்த முடியும்.

ஒரு அரசியல் தலைமைக்குரிய முதிர்ச்சியின் வெளிப்பாடாக இந்த உறுதி அமைய வேண்டும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில்– குறிப்பாக வடக்கு முஸ்லிம் மக்களது பிரச்சினையில் – வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் கோரிக்கைகட்கும் (பக்கம் 4இல் வெளியாகியுள்ளது) காது கொடுப்பது அவசியமாகும்.

இதேவேளை அரசாங்கமும் ஒட்டுணுவின் வருகையை புலிகளை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்துவதற்கும் அதன் தொடர்ச்சியாக அவர்களை இராணுவ ரீதியாக ஒழிப்பதற்குமான ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்த முயலக் கூடாது. மாறி மாறி வந்த எல்லா அரசாங்கங்களும் –இன்றைய பொ.ஐ.மு. அரசாங்கமும் கூட– இவ்வாறு வாய்த்த சந்தர்ப்பங்களிலெல்லாம் புலிகளை பலவீனப்படுத்தப் பயன்படுத்திய வரலாறு எம்முன் உள்ளது. இம்முறையும் இச்சந்தர்ப்பத்தை அரசாங்கம் இவ்வாறு பயன்படுத்தக் கூடாது.

தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக நாட்டின் எதிர்காலத் தலைவிதியையே பாழாக்கும் பெரும் பழியைச் செய்ய இந்த அரசாங்கம் முயலக் கூடாது.

புலிகள் ஒப்புக்கொண்ட அடிப்படை விடயங்களைப் புலிகளை அம்பலப்படுத்துவதற்கான நோக்கில் பயன்படுத்துவதற்குப் பதில் நாட்டின் இனப்பிரச்சினைக்கான அடிப்படைகளைக் காண்பதற்கான தொடக்கமாகக் கொள்ள முடியும்.

இரு தரப்பும் பொறுப்புடன் நடந்து கொள்ள நினைத்தால், செய்ய முடியாத ஒன்றல்ல இது.

மனமுண்டானால் இடமுண்டு என்பார்கள்.

மனமிருக்கிறதா?

# ஏறாவூர் : தற்செயல்?

ஏறாவூரில் முகம்மது ஹனீபா முகைதீன் என்ற 60 வயது நபரை பொலிசார் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் காரணம் பெரிதாக ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. அதிகாலையில் வெளியூருக்குத் தொழிலுக்காகச் சென்ற முகைதீன் அவர்கள் பத்துமணியளவில் திரும்பி வந்து தேநீர் அருந்திக் கொண்டிருந் திருக்கிறார்.

வேலியால் எட்டிப் பார்த்த பொலிஸ்காரனிடம் ''என்ன தண்ணீர் வேண்டுமா?'' எனக் கேட்டிருக்கிறார். இல்லை என்று தலையாட்டியிக்கிறான் பொலிஸ் காரன். கிணற்றடியில் அவரது பெண்பிள்ளைகள் குளித்துக் கொண்டிருக்கும் போது வீதியால் போய் வரும் பொலிஸ்காரர்கள் எட்டிப் பார்ப்பதும் சேட்டை விடுவதும் அவருக்குத் தெரியும். ''தேவையில்லாமல் எட்டிப்-பார்ப்பது நல்லதல்ல என்று கூறுயிருக்கிறார் அவர். பதிலுக்கு அவனும் ஏதோ கூறுயிருக்கிறான். இதுவரை தமிழில் நடந்து வந்த உரையாடல் சிங்களத்துக்கு மாறுகிறது அவன் கோபங்கொண்ட முகத்துடன் சிங்களத்தில் ஏதோ பேசியிருக்கிறான்.

முகைதீனின் மருமகள் முகம்மது யூசுப் ஆயிஷா (28) சொல்கிறார். 'பேசிக்கொண்டே, மேசைலிருந்து தேநீர் குடித்துக் கொண்டிருந்த மாமாவை நோக்கிச் சுடுகிறான். மாமா அந்த இடத்திலேயே சரிந்து விழுகிறார். நெஞ்சிலும், கன்னத்திலுமிருந்து இரத்தம் பாய்கிறது. திகைத்த நான் என் மாமாவைச் சுட்டுப் போட்டியே என்று கத்தினேன். எங்களை முறைத்துப் பார்த்து விட்டு ஓடும் போது தனது தொப்பியையும் விட்டுவிட்டு ஓடினான். அதனைப் பின்னர் அவ்விடத்திற்கு வந்த பொலிசாரிடம் கொடுத்தோம் என்கிறார் அவர்.

பொலிஸ் நிலையத்தில் 'தற்செயலாக துப்பாக்கி வெடித்ததால் தான் முகைதீன் கொல்லப்பட்டதாக சொல்கிறான் அந்தப் பொலிஸ் காரன்.

ஆனால் பின்னர் கிடைத்த தகவல்கள் வேறுவிதமாக இருந்ததால் அவனைக் கைது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பொலிசாருக்கு. இப்போது இதற்குக் காரண சுஜித் ஜானக பிரியந்த என்ற பொசலிசாரைக் கைது செய்துள்ளனர்.

இப்பகுதிகளில் பெண்கள் மீதான பொலிசாரின் தொல்லைகள் அதிகமென இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

ஏறாவூர் முஸ்லிம் பகுதிகளில் பொலிசார் பெண்கள் மீதான பாலியல் வற்புறுத்தல்களில் ஈடுபடுவதாக அலிசார் மௌலானா எம்.பி. குற்றம் சாட்டுகிறார்.

சிரட்டைக்குடா என்ற இடத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் ஒருவர் தாம் மின்சார விளக்கை அணைத்து விட்டு உள்ளே இருப்பதாகவும், அங்கு வருமாறும் பெண் ஒருவரை வற்புறுத்தியுள்ளார் என்றும், அப்பெண் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் இவற்றைத் தான் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சம்பாதி

# பராக்! பராக்! ஊரடங்கு!

உப்புவெளிப் பொலிஸ் அதிகார எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில் ஏப்ரல் 18ம்திகதி தொடக்கம் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் கொள்ளையர்கள் பாடு கொண்டாட்டமாகப் போய்விட்டது. இரவு எட்டு மணி தொடக்கம் காலை ஆறு மணி வரை அமுல் நடத்தப்படும் ஊரடங்கு வேளையில் அன்புவழிபுரத்தின் பல வீடுகள் அடுத்தடுத்து கொள்ளைக் கிலக்காகியுள்ளன.

இரவு ஒன்பது மணிக்கும், பதினொன்றரை மணிக்குமிடையிலேயே இக்கொள்ளைகள் இடம்பெறுவதாக அறியக் கூடியதாக இருக்கின்றது. திடீரென்று தைரியமாக வீட்டுக்குள் நுழையும் நான்கு அல்லது ஐந்து பேர்கொண்ட கோஷ்டி வீட்டுக்காரர்களைப் பயமுறுத்தி ரொக்கப்பணம், நகைகள் என்பவற்றை அபகரித்துச் சென்று விடுகிறது. வெளியிலும் தங்கள் கையாட்கள் நிற்பது போன்ற தோற்றத்தை வீட்டுக்காரர்களுக்கு இவர்கள் ஏற்படுத்தி பணிய வைத்துத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊழியர் ஒருவரின் வீட்டில் புகுந்த கொள்ளையர், அவரை ஆயுத முனையில் நிறுத்திப் பணமும் பொருளுமாக சுமார் 35 ஆயிரம் ரூபாவை ஏப்ரல் 30ம்திகதி கொள்ளையடித்ததைத் தொடர்ந்தே இவ்விடயம் பொலிசார் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பிறகுதான் ஒவ்வொருவராகத் தங்கள் வீடுகளிலும் கொள்ளைபோன கதைகளை வெளியிற் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஜெயராசா என்பவர் வீட்டில் 13 ஆயிரமும், ராஜரத்தினம் என்பவர் வீட்டில் 2700 ரூபா பணமும், ஒன்பது பவுண் நகையும் கொள்ளை போயிருக்கிறது. மற்றும் லுவிஸ், ராமலிங்கம் ஆகியோர் உட்பட வெளியே சொல்லத் தைரியமற்ற பலரிடம் சுருட்டப்பட்ட தொகை பல லட்சங்கள் தேறும் என அன்புவழிபுரக் குடியிருப்பாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

''பராக் பராக் ஊரடங்கு அமுலுக்கு வருகிறது'' என்று கூறியதோடு பொலிசாரின் பணி முடிந்துவிட்டது. புலிகளுக்குப்பயந்து அவர்கள் அன்புவழிபுரத்தில் ரோந்துச் சேவைக்கு வருவதில்லை. பொதுமக்களோ பொலிசாருக்குப் பயந்து தெருக்களில் இறங்குவதில்லை. இது கொள்ளையர்களுக்குக் கொண்டாட்டமாகப் போய் விட்டது.

பொலிஸ் சேவையிலிருந்து விலகி தற்போது கசிப்புக் காய்ச்சுவதில் புகழ்பெற்ற இளைஞன் ஒருவன் இந்தக்கொள்ளைக் கும்பலில் முக்கிய பாத்திரம் வகிப்பதாகப் பொது மக்கள் நம்புகின்றனர்.

கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை கொள்ளையர்களுக்குக் காவு கொடுக்கும் அன்புவழிபுரம் மக்களைக் காப்பாற்றப் போவது யார்? இதுதான் தற்போதைய கேள்வி?

- திரிபுரன்

ජාතීන් අතර යුක්තිය හා සමානත්වය සඳහා ව්‍යාපාරය
இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்
Movement for Inter Racial Justice and Equality

அடிப்படை
உரிமைகட்கான
அவசர உதவி

மேர்ஜ் தனது சட்டக் கல்விக்கும் உதவிக்குமான பிரிவின் மூலமாக ஒரு அவசர உதவி அட்டையை விநியோகித்துள்ளது.
அவசர கால விதிகளின் கீழ் அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அது எடுத்துக் கூறுகிறது.
அந்த அட்டையிலுள்ள அறிவுறுத்தல்கள் இவை:

நீங்கள்
அவசரகாலச் சட்டம்
பயங்கரவாதத்
தடைச்சட்டத்தின் கீழ்
கைது செய்யப்பட்டால்
உங்கள் உரிமைகளை
வென்றெடுக்கத் துணிந்து
நில்லுங்கள்

இவ்வாறு நீங்கள் கைது செய்யப்படின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து 1995 (1) அவசரகாலத் தடைச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

* அனைத்து பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.
* சட்டத்திற்கு முரணாக உங்களைக் கைது செய்தலாகாது.
உங்களைக் கைது செய்கின்ற அதிகாரி பற்றிய விபரங்களை உங்களுக்கு / உங்களுடன் தொடர்புடைய ஒருவருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.
* கைது செய்யப்பட்டமைக்கான காரணத்தை எழுத்து மூலம் உங்களுடன் தொடர்புடையோருக்குத் தெரிவிக்க வேண்டும்.
* நீங்கள் தடுப்புக் காவலில் இருக்கின்ற போது உங்கள் உறவினர், நண்பர்களுடன் தொடர்பு கொள்வதற்கு அனுமதியளிக்க வேண்டும்.
* நீங்கள் பெண்ணாயின் உங்களைப் பெண்கள் பிரிவில் சேர்க்க வேண்டும்.
* வாக்கு மூலத்தை சுய பாஷையில் அளிப்பதற்கோ அல்லது சொந்தக் கையெழுத்தில் எழுதிக் கொடுப்பதற்கோ உரிமை உண்டு.

ஆகவே உங்கள் உறவினர் / நண்பர் ஒருவர் கைது செய்யப்படின் இத்தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

01 - 594229

மு.ப.8.00 மணி முதல் பி.ப.6.00 மணி வரை உங்களுக்காகப் பணியாற்றுவோம. மாலை 6.00 மணிக்குப் பின்னர் நீங்கள தொலைபேசி மூலம் தெரிவிக்கும் தகவல்களை எமது தொலைபேசியிலுள்ள பதிவுக்கருவி பதிவு செய்து மறுதினம் எமக்குக் கிடைப்பதற்கு வழிவகுக்கும். எனவே கைது செய்யப்பட்டவரின் பெயர், விலாசம், கைது பற்றிய விபரம் என்பவற்றை எமக்குத் தெரிவியுங்கள்.

சட்ட கல்விக்கும்
உதவிக்குமான பிரிவு (LEAP)
அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டோருக்கும் அடிப்படை உரிமை மீறல்களுக்குமான பிரிவினூடாக இலவசமாகச் சட்ட நிவாரணம் பெற்றுத் தரப்படும்.

சட்டக் கல்விக்கும்
உதவிக்குமான பிரிவு,
இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்திற்குமான இயக்கம்,
இல,4, ஜயரத்ன மாவத்தை,
கொழும்பு 5
தொ.பே. 01-5?1580
01-594229

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன். இல. 07. கெகுடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 12.05.1998.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்